உ

சிவமயம்.

மனை நூலென்னும்

சிற்பசாஸ்திரம்.

இஃது

ஆதிவிஸ்வகர்மாவாகிய

மயனென்பவர்

அருளிச்செய்தது.

இந்நூல்பலவாறுசிதைந்திருந்தமையால்
பலருக்குமுபயோகமாகும்பொருட்டு
சிலசாஸ்திரிகளைக்கொண்டு
கோர்வையாகச்சேர்த்துப்பரிசோதித்து

காஞ்சிபுரம்
ச[illegible]முதலியார்-குமாரர்
[illegible] முதலியாரது
[illegible]ச்சுக்கூடத்தில்
[illegible]ட்டது

சிவமயம்.

சிற்பசாஸ்திரத்தின்

அட்டவணை.

பெயர்,	பக்கம்
அ	
அஷ்டதிக்குலக்ஷணக்குறி	௨௨
அஷ்டதிக்குலக்ஷணம்	௨௯
அலிபரம்	௩௨
அருக்கனிலையறிய	௪௩
அவசகுனங்களறிய	௫௨
அருக்கனிலை	௯௯
ஆ	
[illegible]ளமரம்	௩௨
[illegible]ய	௮௰
[illegible]தாயபலன்	௮௮
[illegible]யச்செலவு	௮௯
இ	
[illegible]டல்-வாசல்,	௨௯
[illegible]ல்நாழிகைபார்க்கும்	௪௨
[illegible]ளில்மனைகோலும்பலி	௪௯
[illegible]லகாலளவுகொள்ளும்	௬௯
[illegible]லைகையளவுகொள்ளும்	௭௰
[illegible]சிட்பொருத்தம்	௯௬
[illegible]சேஷம்	௩
[illegible]	
[illegible]நாள்	௪௮
[illegible]நாள் இறங்குநாள் முகட்டுநாளறிய	௨௯
ஓ	
[illegible]றியும்படி	௫௩
க	
கதவுசத்தம்	௩௧
கதவுகளினியல்பு	௭௩
கதவிஞேசை	௭௪
கா	
கால்வைக்க கையேற்ற நாளிலக்கினம்	௩௪
காலநிர்ணயம்	௪௧
காலற்றநாள் தலையற்றநாள் இடையற்றநாள் முழுநாள் இவைகளின்பலன்	௪௯
கி	
கிரகநின்றராசிபலன்	௫௮
கிணறுவெட்டுமிலக்ஷணம்	௮௬
கிணறுவெட்டகரைகட்ட	௯௯
கீ	
கீழ்நோக்குநாள்	௪௮
கு	
குழியில்மண்ணிலக்ஷணம்	௰௬
குளிகனறிய	௪௨
குழிகெல்லும்போதுண்டாகுஞ்சகுனம்	௫௭
குழியில் நீர்விட்டறியுஞ் சகுனம்	[illegible]
குடியுகுதுநாள்	௭௭
குளம்வெட்டுமிலக்ஷணம்	௮௫

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
கெ		திக்குநிலையறிய	௪௪
கெர்ப்பப்பொருத்தம்	௮௭	திதிப்பொருத்தம்	௯௪
கொ		திசையோனிநிலை	௱
கொடிக்குமுதுகுயரம்	௭௧	திசையறிந்துவாசக்கால் வைக்கும் விதி	௱௬
ச		தே	
சமபமைந்துக்கும்வாஸ்து அதிகாரலட்சண	௰௫	தேவர்முதல்நான்குசாதிக்குஞ்சங்குசெய்மரம்	௰௭
		தேங்காய்ச்சகுனம்	௰௬
		ந	
சங்குஸ்தாபிதம்	௰௬	நட்சத்திரப்பொருத்தம்	௯௰
சங்குசெய்யப்பட்டமரம்	௰௭	நவக்கிரக பலன்களறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்	௱௰௧
சகுனம்	௰௮		
சகுனமறிய	௫௧		
சங்குப்பிரமாணம்	௬௧	நவங்கிஷப்பொருத்தம்	௯௩
சங்குமுகூர்த்தம்	௬௨	நா	
சங்குமுகூர்த்தநாள்	,,	நான்குவருணத்தார் பூஜைகளுக்குத்திசையறிய	௫௫
சா			
சாயல்மாதவிலக்கம்	௰௮	நான்குவருணத்தாருக்கும் பூணுநூல்	௬௩
சாதிப்பொருத்தம்	௯௪		
சி		நாட்சத்திரஎழுத்துகள்	
சிற்பலட்சணம்	௮	நி	௫௨
சிற்பனியற்கை	௬௰	நிலத்தினியல்பு	௭௨
சிற்பன்தொழிலளவு	,,	நிலைசொல்லும்படி	
சு		நே	௫௰
சுவர்வெடிப்புலட்சணம்	௨௮	நேத்திரநாட்பொருத்த	
சுக்கிரபலன்	,,	ப	௪௭
சுக்கிரபலன்	௩௪	பக்கநாக்குநாள்	
சுக்கிரனிலையறிய	௪௫	பகல்நாழிகைபார்க்கும் விபரம்	௪௨
சுவர்பிளவு	௭௯		
சூ		பு	
சூலகாலமறிய	௪௯	புட்ப[illegible]ங்கள்விடுகின்றல	௨௨
செ		[illegible]சணக் குறிப்பு	௩[illegible]
செஞ்சிதல்	௭௯	புற்றிலட்[illegible]சணம்	௭[illegible]
த		புற்றெழும்[illegible]லட்ச	[illegible]
தளத்தினியல்பு	௬௪	புற்றிடுதலின்[illegible]லன்	[illegible]
தி			
திசைபெறுதல்-மறுமாடி	௨௬	பூமிசல்லிய[illegible]	[illegible]

பெயர்.	பக்கம்.
பெ	
பெண்மரம்	௩௨
பே	
பேரிராசி	௨௮
பேழைமண்ணிலட்சணம்	௩௰
ம	
மனைமுகூர்த்தக்குழியிற்சகு	௨௰
மண்வெட்டிமுழக்கயிற்சகு	௨௪
மனையறுபத்துநான்குபாகம்	௨௫
மனக்கட்டுப்படும்விபரம்	௩௨
மனையில்நில்லாமரம்	௩௩
மனையையறுபத்து நான்குபாகஞ்செய்துவீடு கட்டும்விதி	௫௫
மண்களினியல்பு	〃
மனைகட்டுந்திசையறிய	〃
மண்குறி	௫௭
மரங்களின்சாதிவிபரம்	௬௬
மனைக்குக்கருப்பதிக்கமுகூ	௭௬
மனைகோலஅகமெடுக்க	௬௯
…முகூர்த்தம்	௱௧
ஆயம் … நூல்	〃
மரப்பொருத்தம்	௱௨
மனைகோலு … குஅளவு	〃
மாசம்-அ-ல்-வாஸ்து	௰௩
மு	
முகூர்த்தம்	௮
முழக்கோல்இலட்சணம்	௯
முழக்கோல்செய்மரம்	௰௧
முளைநீளம்	௨௫
முழக்கோலிற்குமரவகை	௬௧
முளையளவுசொல்லும்படி	௬௩
மே	
மேனேக்குநாள்	௪௭
யோ	
யோனிநிலைகாண	௪௪
யோனிப்பொருத்தம்	௮௬
ல	
லக்கினமுகூர்த்தம்	௩௪
வ	
வயதுப்பொருத்தம்	௯௭
வா	
வாஸ்துவுக்குராசிவீடு	௰௧
வாஸ்துதெய்தி	௰௩
வாசல்நிதானம்	௰௪
வாஸ்துவிழிநோக்கில்இருப்பதெட்டுபங்கில்முகூர்த்தம்	௰௧
வாரசூலை	௪௪
வாஸ்த்துவின்கிடை	௪௭
வாஸ்த்துபுருஷன்எழுந்திருக்குநாள்	〃
வாரவுற்பத்தி	௪௮
வாரபலன்	௫௰
வாசல்அளவு	௭௧
வாசலுதயம்	௭௫
வாரப்பொருத்தம்	௯௨
வாரவிசேஷம்	௱௧
வாஸ்த்துநாழிகை	௰௩
விரலினியல்பு	௮௨
விஷ்டிதோஷம்	௯௭

அட்டவணை-முற்றியது.

சிவமயம்.

இச்சக்கரத்தின்விபரம்.

௫௫-வது-பக்கத்தின் - ௬௬ - வது - செய்யுளைப்பார்த் தால் புலப்படும்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வடமொழியாகிய

சிற்பசாஸ்திரம்

விநாயகர் - துதி.

காப்பு

வடமொழியானசிற்ப மயமதமானசொல்லைத்
திடமுடன்றமிழினாலே சிறந்ததோர்பாடலாக
அடவுடன்பாரினன்று யறையவேயைந்துகையுங்
கடமதுதுளிக்குந்தொந்தி கணபதிகாப்புத்தானே,

இதன்பொருள்.

வடமொழியாகிய இந்த மயமதர் சொல்லுகின்ற சிற்பசாஸ்திரத்தை தென்பதமாகிய தமிழ்வாக்கியமாகக் கூறுதற்கு ஐந்துகரமும் நான்குவாயுமுடைய விநாயகக்கடவுள் பாதகமலத்தை வணங்கிச்சொல்லுவேனென்றவாறு, ௧

சுப்பிரமணியர்-துதி.

செகமதுதுளிக்கவந்த செயல்மயமதமாம்வாழ்க்கை
யகமதுபுகழவேண்டி யறையவுந்தமிழினாலே
விகசிதம்பொருந்துங்கூர்மை வேல்தைக்கரத்தில்வைத்த
குகனிருதாளைப்போற்றிக் கூறுவேன்கூறுவேனே.

இ-ள். பூவுலகமெல்லாம் பிரகாசிக்கும்படியாகச் சொல்லாநின்றமயமதமான கிரந்தவாக்கியத்தை தமிழாகக்கூறுதற்கு ஒளிபொருந்திய கூர்மையோடுங்கூடிய வேலாயுதத்தைக் கரத்திற் றரித்திருக்கின்ற சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிக்கமலத்தை வணங்கி யிணங்கிச் சொல்லுவேனென்றவாறு, ௨

சரஸ்வதி-துதி.

செந்திருவிளங்குமிந்தச் செயன்மயமதமாம்வாழ்க்கைப்
பைந்தமிழாகநீதிப் பனுவலையினிதுகூறச்
சுந்தரமிலகும்வெள்ளைச் சுகந்தமாம்வனசத்துண்ணுஞ்
சந்திரமுகத்தாள்வாலை சரஸ்வதிகாப்புத்தானே

இ-ள். இலட்சுமிவாசமாகிய இந்தமயமதமான கிரந்தவாக்கியத்தைத் தமிழாகச்சொல்வதற்கு அழகுபொருந்திய வெண்டாமரையில் வாசஞ்செய்கின்ற சரஸ்வதியுடைய திருவடிக்கமலங்களை துதித்து மதித்துச்சொல்லுவேனென்றவாறு, ரு

பரமசிவம்-துதி.

வேதவாகமங்களாகி விளங்கும்மூர்த்தியாகிப்
போதகம்விளங்கவந்த புண்ணியன்றாளைப்போற்றித்
தீதிலாமயனார்சொன்ன சிற்பசாஸ்திரத்தினூலை
நீதியாய்த்தமிழினாலே நெறிபடவிளம்பலுற்றேன்

இ-ள். நான்குவேதத்திலும், பதினெண்புராணத்திலும்,நின்றுவிளங்காநின்ற திரிமூர்த்திசொரூபமாகிய பரமசிவத்தினுடைய திருவடித்தாள்களைவணங்கி ஸ்தௌத்தியஞ்செய்து குற்றமில்லாமல்விளங்குகின்ற மயமதமாகிய கிரந்தசுலோகத்தைச் செந்தமிழாற்சொல்லத்தொடங்கினே னென்றவாறு, சு

சிற்பலட்சணம்,

வேறு,

சிகையெக்ஞோபவீதமுடையுத்தரீயந் திருந்தியவேகவேட்டியுமாம்,
சுகமுயர்கர்னகுண்டலங்கரத்திற் றலங்கியமண்டலமதுவாம்
அகமகிழ்கெந்தவட்சதைபூசையருள்சிவமாலையுங்கூர்ம
உகமைசேர்பீடம்வேதபாடமுமா யுதிப்பவன்சிற்பனுமுணர்வே

இ-ள். சிகையாகியஉச்சிக்குடிமியும் முன்னூலுமுடையாகியவஸ்திரமும், உத்தரீகமும், ஏகவஸ்திரமும்,காதிற்கவசகுண்டலமும்,கையிற்கமண்டலமும், நெற்றியிற்கெந்தாட்சதையுஞ் சிவபூசையுஞ்சிவமாலையுங் கூர்மாசனத்தோடும்விளங்கப்பட்டவன்சிற்பனும்-எ-று எ

முகூர்த்தம்.

ஆலயநகரம்பட்டணங்கிரக மருளியதடாககூபமுமாஞ்
சீலமாஞ்சிற்பன்செய்கின்றகிரியைச் செயலதைத்தப்பியவேறோர்
தாலத்திலன்யசாதியோன்செய்தாற் றூரணிமன்னவர்தனக்குஞ்
சாலவேகர்த்தன்றனக்குமேதோஷச் சஞ்சலமதுஉண்டாமே

இ-ள். ஆலயங்கள்-நகரங்கள்-பட்டணங்கள்-கிரகங்கள்-தட்டாகங்கள் - கிணறுகள் இவையெல்லாஞ் சிற்பன்கையாற்செய்யாமல் அன்னிய வர்ன்னத்தான்கையினால் முகூர்த்தஞ்செய்தால் இராஜர்களுக்கும் யஜமானனுக்கு மாகாதென்றவாறு, அ

முழக்கோல் - இலட்சணம்.

வேறு.

நுண்ணியவணுவைத்தொட்டு நோக்கியபஞ்சிற்றாளா
மெண்ணியபஞ்சிற்றாளோ டெட்டதாமயிர்முனைக்கு
நண்ணியமயிரின்கூர்மை நவில்லெட்டுமணலதாகும்
திண்ணிமாங்கடுகுவெட்டுச் செப்புவேணுவுமொன்றுமே

(இ-ள்) அணு- எட்டுகொண்டது - ஒருபஞ்சிற்றாள், பஞ்சிற்றாள், எட்டுகொண்டது-ஒருமயிர், மயிர் - எட்டுகொண்டது-ஒரு இளமணல், மணல்-எட்டுகொண்டது- ஒரு கடுகு, கடுகு- எட்டுகொண்டது- ஒருமூங்கிலரிசி என்றவாறு, (எ)

வேணுவோரெட்டதாகில் வேண்டியவிரலொன்றாகுந்
தாணுமிவ்விரலாறாறும் றனகமைகாலதமமதமம்
ஊணியேவணாவேவிள்ள முயன்றிடுமதமமாகுங்
காணுமேமுக்காற்பின்னுங் கருதியமத்திபந்தான்

(இ-ள்) மூங்கிலரிசி-எட்டுகொண்டது- அங்குலம், அங்குலம்- ஆறுகொண்டது- கால்முழம், அதற்கு அதமம்- அதமமென்றுபெயர், அங்குலம்- பனிரண்டுகொண்டது - அரைமுழம், அதற்கு அதமென்றுபெயர், அங்குலம்- பதினெட்டுகொண்டது-முக்கால்முழமென்றும்- அதற்குப்பெயர்- மத்திபமென்றும் பெயராமென்றவாறு. (அ)

சாதியுமொன்றதானும் றருமுழமுத்தமந்தான்
றீதரும்பிரமரோடு சிறந்தக்ஷத்திரியர்சூத்திரர்
சூதகுவைசியரோடு சுபமுடனுன்குளோர்க்கு
நீதியாய்ப்பனிந்தபாட னெறிபடவிளம்பலுற்றேன்

(இ-ள்) அங்குலம்- இருபத்துநான்கு கொண்டது ஒரு முழமென்றும்- அதற்சாதியென்று மானங்குலமென்றும் பெயராம், ஆகையால் பிரமக்ஷத்திரிய சூத்திர வைசியர் இவர்களுக்கு இன்னதென்று சொல்லுவேனென்றவாறு, (௯)

வேறு.

துளாந்ததவைமான்விரலுஞ்சூத்திரருக்காகும்
வளாம்பிரசாபத்தியமும்வணிகருக்காகும்
அளாந்ததனுமுஷ்டிவிரலரசருக்காகும்
விளாம்பியத்னுக்கிரகம்வேதியருக்காமே

(இ-ள்) மானங்குலமென்றும் பிரசாபத்தியமென்றுந்-தனுமுஷ்டியென்றும்- அனுக்கிரகமென்றும், கோல் நான்குக்கு மானங்குலங்கொண்

டகோல் சூத்திருக்காம்,பிரசாபத்தியங்கொண்டகோல் வணிகருக்காம், தனுமுஷ்டிகொண்ட கோல் இராஜர்களுக்காம், தனுக்கிரகம் கொண்ட கோல் பிராமணர்களுக்காமென்றவாறு. (ம)

வேறு.

தாபதர்முதலாயுள்ள சமயத்தோர்மனையுமிக்க
மாபடகூடந்திவ்விய மாளிகையளக்கச்சொன்ன
தாபரசமயமெல்லாந் தனுக்கிரகவிரல்களாலே
கோபுரமாடஞ்சாலே குருமானுங்குலத்தினாலே

(இ-ள்) தாபரமாகியசமயமாறுக்குங் கோபுரமாடஞ் சாலைகளுக்கும் பிறிவு அறுசமயத்தாருக்குந் தனுக்கிரகங்கொண்டகோலால்அளக்கவும், மாடகூடஞ் சாலை கோபுரம் இராஜர்களாயுதம் சுவேலாயுதம் சத்திரம் க்ஷாமரை இவைகளெல்லாம் மானுங்குலத்தினாலளக்கலாம், இதன்றி-சாதி-சந்தம்-விகற்பம் - ஆபாசமென்றும் நான்குகோல்- சாதி ஒருமுழமு-சந்தம்-முக்கால்முழம் - விகற்பம் அரைமுழம்-ஆபாசம்-காலமுழமுமென்றவாறு, (மக)

வேறு.

சிறந்தசாதிநான்கினுக்குஞ் சிறுகோல்வரிசைசெப்பிடுங்கா
லறைந்தமூங்கில்மறையவர்க்கா மாச்சாக்ஷத்திரியருக்காம்
நிறைந்ததேக்குவணிகருக்காம் நெடியவேங்கைசூத்திரர்க்காம்
முறிந்திடாமலவரவர்க்கு முழக்கோலதுகொண்டளப்பதுவே

(இ-ள்) சாதிநான்குக்கும் விபரமாவது, மூங்கிலாற்கோலுண்டாக்கி பிராமணர்களுக் களக்கலாம், ஆச்சாமரத்தினாற்கோலுண்டாக்கி அரசர்களுக்களக்கலாம்,தேக்கினாற்கோலுண்டாக்கி செட்டிகளுக்களக்கலாம், உதிரவேங்கைமரத்தாலே கோலுண்டாக்கி சூத்திரர்களுக்களக்கலாமென்றவாறு. (மஉ)

வேறு.

பொருந்தியமட்டக்கோல்தான் புளிவேங்கைதேக்கோடாச்சா
வருந்தியபுளியேபார்ப்பான் மன்னவனுச்சாவாகும்
விரும்பியவணிகன்றேக்கு வேளாளர்வேங்கையாகும்
இரும்புதான்தேவர்மிக்க யாவர்க்குமாகுமென்றே

(இ-ள்) மட்டக்கோல்-புளிவேங்கை தேக்கு ஆச்சா இந்நான்குக்கும் விபரம், புளி- பிராமணர்களுக்கு- ஆச்சா- இராஜர்களுக்குவேங்கை-சூத்திரர்களுக்கு அளக்கலாம், இதன்றி இரும்பினால்கோலுண்டாக்கி தேவர்கள் நான்குசாதிக்கும் பொதுவாயளக்கலா மென்றவாறு. (மந)

முழக்கோல்-செய்மரம்.

தந்தியின்மருப்புவேணு தருகருங்காலிதேக்கு
சந்தனத்தாலந்தென்ன மரமுந்தாமரையுமாகும்
விந்தைசேர்முழக்கோல்செய்வர் மேவியசிரசில்வில்வம்
அந்தமத்தியிலேராச லட்சுமியடியிற்சூவே

(இ-ள்) முழக்கோல் செய்விபரம், கருங்காலி-தேக்கு - சந்தனமரம் தென்னமரம்-பனைமரம்-தாமரை-கொட்டி-இவைகளால் முழக்கோலுண்டாக்கி யாக்கலாம், முழக்கோல்-சிரசில் - வில்வம், மத்தியில் இராசலட்சுமி, பாதத்தில் பூமாதேவி யென்றவாறு. (௰௪)

வாஸ்த்துக்கு-ராசிவீடு.

மீனமுமாடுமேறு மேற்றிசைதலையதாகி
ஊனமற்றிடக்கைகீழா யுத்தரதிசையைநோக்கி
சேனைவாசவன்றன்மேலே திசைபெறக்காலைநீட்டி
மானெனும்விழியாய்கேளாய் வாஸ்த்துதான்கிடக்கும்வாறே

(இ-ள்) மீனம்-மேடம்-இடபம்-இம்மூன்றிராசியில் காலைநீட்டி - கன்னி-துலாம்-விருச்சிகம்-இந்தமூன்றிராசியில் சிரசைவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாக உத்தரதிசையை நோக்கி இந்திரன் றிசையில் காலைநீட்டி வாஸ்த்துபுருடன் கிடப்பதென்றவாறு. (௰௫)

தன்டொடுநண்டுசிங்கந் தலையதுவடக்கேவைத்து
என்டிசையிடக்கைகீழாய் வலக்கைதன்மேலதாகில்
தென்டிறலியமன்மேலே திசைபெறக்காலைநீட்டி
வன்டணிகுழலினளே வாஸ்த்துவுங்கிடக்கும்வாறே

(இ-ள்) மிதுனம்-கடகம்-சிங்கம் - இம்மூன்றிராசியில் காலைநீட்டி தனுசு மகரம்-கும்பம் - இம்மூன்றிராசியில் சிரசைவைத்து இடக்கைகீழும் வலக்கைமேலுமாக இயமன்மூலையில் காலைநீட்டி வாஸ்த்துபுருடன் கிடப்பானென்றவாறு. (௰௬)

கன்னியுந்துலாமுந்தேளுங் கதிர்முடிதிசையில்வைத்து
மன்னியவருணன்மேலே மகிழ்பெறக்காலைநீட்டி
இன்னிசையிடக்கைகீழா யியமன்றன்றிசையைநோக்கி
வன்னமாமாதேகேளாய் வாஸ்த்துதான்கிடக்கும்வாறே

(இ-ள்) கன்னி துலாம் விருச்சிகம் இம்மூன்றிராசியில் காலைநீட்டி மீனம் மேடம் இடபம் இம்மூன்றிராசியில் சிரசைவைத்து இடக்கை கீழும் வலக்கைமேலுமாக இயமன்றிசையைநோக்கி வாஸ்த்துபுருடன் கிடப்பதென்றவாறு. (௰௭)

தனுசொடுமகரங்கும்பந் தலையதுதெற்கேவைத்து
மனுவொடுவிடக்கைகீழாய் வலக்கைதன்மேலதாகல்
மனமொடுமுகமுமேற்கு வடக்கினிற்காலைநீட்டி
வனமுலைமாதேகேளாய் வாஸ்த்துவுங்கிடக்கும்வாறே

(இ-ள்) தனுசு மகரம்கும்பம் இம்மூன்றிராசியில் கால்நீட்டி மிதுனம்-கடகம்-சிங்கம் இம்மூன்றிராசியில் சிரம்வைத்து இடக்கை கீழும் வலக்கைமேலும் மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்த்து புருடன் கிடப்பதென்றவாறு. (௰௮)

திங்களோராசிதன்னிற் சிறப்புடன்சிரசைவைத்து
பொங்கியராசிக்கேழாம் புகழுயராசிதன்னிற்
றங்கியகாலைநீட்டிச் சகப்பிரதிட்டையாக
மங்கையேசொல்லக்கேளாய் வாஸ்த்துதான்கிடக்கும்வாறே

(இ-ள் மாதம் ஒரு ராசியில் சிரம்வைத்து அதற்கேழாமிராசியில் காலைநீட்டி ஜெகப்பிரதிஷ்டையாக வாஸ்த்துபுருடன் கிடப்பது-எ-று. ()

வேறு.

எங்கேமாதந்தானென்ற விராசிநிலைகள்தானறிந்து
அங்கேபாதந்தனைநீட்டி யதனுட்கெதிரேதலைவைத்து
பங்கேவிடக்கைகீழாகப் பகரும்வலக்கைமேலாக
மங்கேபூதலந்தனிலே வாஸ்த்துபுருடன்கிடப்பதுவே

(இ-ள்) ஆதித்தனென்னு மிராசியில் கால்வைத்து அதற்கேழாமிராசியில் சிரம்வைத்து இடக்கைகீழும் வலக்கைமேலுமாய் வாஸ்த்துபுருடன் கிடப்பதென்றவாறு. (௨௰)

வேறு.

கிடப்பதுமிடக்கைகீழாய் கிடந்தவனெழுந்திருந்து
நடப்பதுவலமேயாகில் நல்லதோராசிதோறும்
படுக்கையால்வயிறுபார்த்துப் பரிவுடன்வாசல்தன்னை
விடுப்பதுமில்லையாகில் வேதனைசூழுமென்றே

(இ-ள்) இடக்கைகீழும் வலக்கை மேலுமாய்க்கிடந்தவ னெழுந்திருந்து வலமாகில் படுக்கை வயிறறிந்து வாசற்கோலாவிட்டால் வேதனையிலே வாடுவானென்றவாறு. (௨௧)

வேறு.

மேயவாஸ்த்து விருப்பியநிலையன்றி
தூயமாமனை தனைத் தொடங்கியெடுத்திடல்
சேயமாய்மனைவியும் மைந்தர்களைவறு
மாயுமோமார்த்தயவைத் தவறுஞ்சாகுமே

(இ-ள்) வாஸ்த்து நிதானமறிந்து மனைகோலானுகில் யமனாலும் பகை
வியும் முகூர்த்தம்வைத்த சிற்பனுமிறப்பர்-எ-று, (௨௦)

சாமதுநிக்ஷயந் தன்மனைகோல்பவன்
பூமலர்வாஸ்த்து புருடன்முன்சென்றிடற்
ரு முறுபகைவராற் சடிதியின்மாய்ந்திடுஞ்
சேமவெண்குட்டமுஞ் சேருமுடம்பிலே

(இ-ள்) வாஸ்த்து நிதானமறிந்து மனைகோலானுகில்சத்துருபகையும்
ரோகமும் உடம்பிற்சேரும்-எ-று. (௨௧)

மாசம்-எட்டுக்கு-வாஸ்த்து.

வேறு.

சித்திரைவைகாசியாடி சிறந்தவாவணியினோடு
வைத்தவைப்பசியுமிக்க மன்னுகார்த்திகையுந்தானும்
மற்றதைமாதத்தோடு மாசிதானெட்டுமாதம்
புத்தியான்மனைகள்கோலப் புகழுடனன்மையாமே

(இ-ள்) சித்திரை வைகாசி - ஆடி- ஆவணி ஐப்பசி - கார்த்திகை தை
மாசி இவ்வெட்டுமாதமும் வாஸ்த்து எழுந்திருப்பது இம்மாதங்களில்
மனைகோலினல் சகலசம்பத்து முண்டாகும்-எ-று, (௨௨)

வாஸ்த்து - தெய்தி.

வேறு.

கிடந்தமேடமொருபத்து கிளருப்விடைபோன்று வேழு
அடங்கொள் கடகம்பதினென்று மரிதானுறுதேமொட்டு
குடந்தானிருபத்தொன்றுருக் கூறுமகரம்பனிரண்டு
இடந்தாமெடுக்கவேணுமென்று லெல்லாத்திசையுமல்லோரே

(இ-ள்) சித்திரைமாசம் பத்தாந்தேதி, வைகாசி- இருபத்தோராந்தே
, ஆனி- ஆடி-பதினோராந்தேதி, ஆவணி - ஆறாந்தேதி, கார்த்திகை-
ட்டாந்தேதி, மாசி- இருபத்தோராந்தேதி, தை- பனிரண்டாந்தேதி,
ந்நாட்களில் வாஸ்த்துபுருஷ னெழுந்திருப்பன்-எ-று, (௨௩)

வாஸ்த்து-நாழிகை-வேறு.

குன்றுமாங்குடமேயெட்டுக் கொடியுதேள்பத்ததாகும்
நன்றுகோலிரண்டாகு நன்மேடமைக்கதாகும்
தென்றல்சேர்சிங்கந்தானே சிறந்தவுமேழதாகும்
மன்றல்சேர்குழலினுளே வாஸ்த்துதானடக்கும்வாறே

(இ-ள்) தை-மாசி-மாசம்-எட்டுநாழிகைக்குள்ளும்-கார்த்திகை-பத்து நாழிகைக்குள்ளும், ஆடி-ஆனி-இரண்டுநாழிகைக்குள்ளும், சித்திரை ஐந்துநாழிகைக்குள்ளும், ஆவணி- இருபத்தொருநாழிகைக்குள்ளும், வைகாசி-எட்டுநாழிகைக்குள்ளும், வாஸ்த்து எழுந்திருப்பன்-எ-று. ()

வாசல் நிதானம்.

காலதேவாசலாகிற் கருங்குழல்சாவுசொல்லுஞ்
சாலவேதலையதாகிற் றனவன்சாவுசொல்லு
மாலமாமுதுகேயாகி யரசராற்பயமுண்டாகும்
வாலிதான்வயிற்றிற்கோலில் வன்பொருள்சேருமென்றே

(இ-ள்) வாஸ்த்துவின்காலில் வாசல்விட்டால் மனையாள் மரணமாவ ள்- தலையில் வாசல்விட்டால் யஜமான் மரணமாவன், முதுகில்வாசல்வி ட்டால் இராஜபயமுண்டாகும், வயிற்றில்வாசல்விட்டால் சகலபாக்கிய முமுண்டாகும்-எ-று. (உஏ)

வாஸ்த்துவின்கிடையறிந்து மனைதனைக்கோலானுகிற்
சித்தலிற்பொருளுங்கேடாஞ் செய்தவமனைத்தும்பாழா
மேற்றியமனையினுள்ளே யிருந்திடும்பெரியநோய்தான்
மூத்தநாயகியாள்சேர்வள் முனிவையுந்தொடருநோயே

(இ-ள்) வாஸ்த்துவின் இலட்சணமறிந்து மனைகோலாவிடிற் பொரு ளழிவும் உயிர்சேதமும் மூதேவிவாசமும், யஜமான் பெண்டுபிள்ளைக ளோடு வியாதியால் மெலிதலுமல்லாமல் அம்மனை கோலியசிற்பனும் நோயாய் மெலிவன்-எ-று. (உ௮)

வாஸ்த்து விழிநோக்கில்.

இருபத்தெட்டுபங்கில் முகூர்த்தம்.

வேறு.

வாஸ்த்துபுருடன்விழிநோக்கில்மனைக்குமுகூர்த்தஞ்செயவேண்டிற்
பார்த்துமனையைநாலேழாய்ப் பகுத்துகாலிற்பதினேழுஞ்
சாற்றுந்தலையிலீரைந்துந் தள்ளிநடுவிலொருபங்கு
எற்றமாகமுகூர்த்தமிட விராஜசம்பத்துண்டாமே

(இ-ள்) வாஸ்த்துவின் விழிநோக்கறிந்துமுகூர்த்தஞ்செய்யும்போது அந்தமனையை இருபத்தெட்டு பாகஞ்செய்து காலில் பதினேழுபாகமு ம் தலையில் பத்துபாகமுந்தள்ளிநடுவிலொருபாகத்தில் முகூர்த்தஞ்செ ய்தால் இராஜசம்பத்துண்டாகும்—எ-று. (உ௯)

சமயமைந்துக்கும் வாஸ்து.

அதிகாரலட்சணம்.

வேறு.

செய்யவாஸ்த்துவு முதற்கால் திறமுடன்விழித்துநோக்கித்
துய்யதோர்கடிகைமூன்று தரிதமுக்காலுக்குள்ளே
உய்யவே முதலாம்வேளை யுகந்ததோர்கடிகைமுக்கால்
• நையவே தந்தசுத்தி ராஜராம்பயமுண்டாமே

(இ-ள்) வாஸ்துவின் அதிகாரலட்சணமாவது, நாழிகை- மூன்றேமுக்காலுக்குசமயம்ஐந்து, முதற்சமயங்-கடிகை-முக்காலுக்குள் தந்தசுத்திசெய்வன், அதில்முகூர்த்தஞ்செய்தால் அரசர்களாற்பயமுண்டாகும். ()

ஏற்றியவிரண்டாம்வேளை யெழிலுயர்கடிகைமுக்கால்
போற்றியஸ்நானஞ்செய்வன் பொருந்தியபீடையுண்டாஞ்
சாற்றியமூன்றாம்வேளை தக்கதோர்கடிகைமுக்கால்
மாற்றியபூசைசெய்வன் வறுமையால்மெலிவரென்னே

(இ-ள்) வாஸ்து இரண்டாஞ் சமயமாகிய கடிகை முக்காலுக்குள் ஸ்நானஞ்செய்வன் அதில்முகூர்த்தஞ்செய்தால் பீடையுண்டாம்மூன்றாஞ் சமயமாகிய கடிகை முக்காலுக்குள் பூசைசெய்வன் அதில்முகூர்த்தஞ்செய்தால் வறுமையால் துன்பப்படுவர்-எ-று. (௬௧)

பெருகியநாலாம்வேளை பேருயர்கடிகைமுக்கால்
அருமையாயசனஞ்செய்ய னழகியபுத்திரருண்டாந்
திருவுறுமைந்தாம்வேளை சேர்ந்ததோர்கடிகைமுக்கால்
மருவுதாம்பூலங்கொள்வன் மகிழ்ந்துவுத்தமமென்றே

(இ-ள்) நாலாஞ்சமயமாவது கடிகை முக்காலுக்குள் போசனஞ்செய்வன் அதிலொரு முகூர்த்தஞ்செய்தால் புத்திர சந்தானமுண்டாகும், ஐந்தாஞ்சமயமாவது - கடிகை முக்காலுக்குள் தாம்பூலங்கொள்வன், அதில் முகூர்த்தஞ்செய்தால் மகாவுத்தமம்-எ-று, (௬௨)

வேறு.

இனிதாகியவின் சுவைமண்மறையோன்
மனதாகியவம் பதுமன்னவனும்
புனிதாகியதே புளிமண்வசியன்
சொனதாகியகைத் தமண்சூத்திரர்க்கே

(இ-ள்) மண்சுவையாவது இனிமையாயிருந்த மண் பிராமணர்களுக்காம், துவர்ப்பான மண் க்ஷத்திரியருக்காம், புளிப்பான மண் வைசியருக்காம், -கைப்பான மண் சூத்திரருக்காம்-எ-று, (௬௩)

வேறு.

தயிரொடுநெய்தேனிவைத் தாக்கியவிரத்தத்தோடு
பயிர்பலசிறுமீன்பட்சி மற்றுமோர்போர்மணமும்
பயிரொடுபலமுங்காணார் பாழ்படுமனையெடுக்கில்
வயிரவேல்விழியினாளே மண்களின்குணங்கள்தாமே

(இ-ள்) மண்மணமாவது- தயிர்மணம்போலும், நெய்மணம்போலும் தேன்மணம்போலும், இரத்தமணம்போலும், பயிர்ச்சிக்குமணம்போலும்- மீன்கவிச்சிமணம்போலும், பட்சிமணம்போலும், போர்மணம் போலும், இவ்வண்ணமாகிய மணமுள்ள பூமியில் பயிரிட்டாலும் பலியாது, மனையெடுக்கினும் பாழாகும்---எ-று. (௩௪)

குழியில் மண்லட்சணம்.

அக்கியகுழியில்மண்ணை யகழ்ந்தமண்ணதனை மீளந்
தேக்கியேநிரப்பும்போது சிறிதுமண்மிஞ்சவன்றாந்
தாக்கியகுழியில்மண்ணுஞ் சமதளமத்தியந்தான்
நீக்கிமண்ணதிகமானால் நிறையிலாச்செல்வமாமே

(இ-ள்) முகூர்த்தஞ்செய்கிற குழியில்மறுபடியும் மண்தள்ளும்போது குழிநிறைந்து கொஞ்சமாய் மண்மிகுந்தால் அதுஉத்தமபூமியென் றறியவும், சமஞ்சிவிட்டால் அது மத்திமபூமியென்றறியவும் - அதிகப் படியாகில் அளவற்றபாக்கியமுண்டாம்---எ-று. (௩௫)

சங்குதாபிதம்.

உத்தராயனமுமாக உயர்ந்தநல்வாரம்பார்த்து
சித்திரைநக்ஷத்திரங்கள் சிறப்புடன்பார்த்துவானிற்
சுத்தமாய்களங்கமில்லாச் சூரியன்விளங்கும்போது
நத்தியேயவ்விடத்தில் நவிலுவேனினிதுகேளே

(இ-ள்) சங்குதாபிக்கும் நாளாவது, உத்தராயனத்தில்- வாரம்-லக்கினம்-நட்சத்திரம்- இதுகளைத் திடமாகப்பார்த்து ஆகாயத்தில் களங்கமில்லாமல் சூரியன் விளங்கும்போது செய்யும் விபரத்தைச் சொல்லுவோம்---எ-று, (௩௬)

ஒருதெண்டுக்கொருதெண்டேதா னுண்மையாய்ச்சதுரமாக்கி
விரவியேவட்டங்கொண்டு விளங்கநீர்மட்டஞ்செய்து
பரவியநடுவின்வட்டம் பரவுமண்டலம்போல்வீசி
திருந்தியசங்கையூன் செய்யும்பிரமாணஞ்செய்யே

(இ-ள்) ஒருதெண்டுக் கொருதெண்டு சதுரஞ்செய்து நடுவில்விருத்தமாய் மண்டலம்போல் வீசி அதில் சங்கூன்றசங்குக்குப் பிரமாணஞ் சொல்லுவோம்---எ-று, (௩௭)

சங்குசெய்யப்பட்டமரம்.

உத்தமஞ்சங்குக்கேதா னுயரமோர்முழமதாகும்
நத்தியவடியிலாறு வங்குலம்தலைக்கேனு
சுத்தமாய்த்தலைக்கனந்தான் சொல்லுமங்குலமொன்றாகும்
பத்தியாய்த்திரளநன்றாய்ப் பரிவுடன்கடைசல்செய்வாம்

(இ-ள்) உத்தமமென்றுஞ் சொல்லப்பட்டது, அதின் உயரம் ஒருமுழம், அடியிற்கனம் அங்குலம்- ஆறு- தலைக்கனம் அங்குலமொன்றுஅதற்காகவாட்டவாய் திரளக் கடைச்சல்செய்வாம் எ-று, (௩௮)

தந்தியின்கொம்புவாசஞ் சந்தனம்வன்னிதேக்கு
முந்தியபுளியனோடு முயர்கருங்காலிசெய்வாம்
விந்தையாயிவையல்லாமல் வேண்டுபால்மறந்தானுகும்
அந்தாம்வயிரத்தோடு மணமதோர்பிறிவுசொல்வாம்

(இ-ள்) சங்குசெய்யாநின்ற மரம்- யானைக்கொம்பு- சந்தனமரம்-வன்னி- தேக்கு-புளியன்வைரம் கருங்காலி - இவையல்லாமல் எந்தமரத்திலுகிலேனும் அதிலுஞ்செய்யலாம், ஆனதால் தேவர் சாதி நான்குக்கும் விபரஞ்சொல்லுவாம்-எ-று, (௩௯)

தேவர் நான்குசாதிக்குஞ் சங்குசெய் மரம்.

சந்தனந்தந்திக்கொம்பு தகைமைசேர்தேவர்க்காகும்
விந்தைசேர்மறையோர்க்கேதான் மிகுகருங்காலிவன்னி
சிந்தைசேர்மன்னர்க்காகுந் தேக்கதுவசியர்க்காகும்
புந்திசேர்புளியினோடு புகல்மைசூத்திரர்க்கென்றோதே

(இ-ள்) யானைக்கொம்புஞ் சந்தனமரமுந் தேவதைக்காம் கருங்காலி பிராமணர்களுக்காம், புளியவைரம் சூத்திரர்களுக்காம்-எ-று. (௪௰)

மேவுமுத்தரபாகத்து மிகுந்ததெட்சணபாகத்து
மாவவற்சாயலுண்டு மந்தமண்டலத்தில்வந்த
வோவியபுள்ளிரண்டி லோடவேகிழக்குமேற்குந்
தாவியவன்னாள் தன்னில் தகைமையையறிவாமென்றே

(இ-ள்) உத்திராயணத்திலுந் தெட்சணயனத்திலும் அவைச்சாயல்பாதகச்சாயலுண்டு அந்த மண்டலத்தில்வந்த புள்ளிரண்டிலும் நூலையோடவாங்கி கிழக்குமேற்கு மறிவாம்-எ-று. (௪௧)

இரண்டுபுள்ளியன்பால்மீதே யேகவேவெளியில்நன்றாய்த்
திரண்டசேர்க்கயல்மீனைகச் சிறப்புடன்வீசிப்பின்னு
முரண்டசேல்மீனின்வாலின் முகத்தினுங்கூடுநூலை
யிரண்டதையோடவாங்கி யாகநூலிரண்டுஞ்சொல்வாம்

(இ-ள்) இரண்டுபுள்ளியின் மீதுகயன் மீனைகவீசி மீனின்முகத்திலும் வாலிலுங்கூடுதலை யிரண்டையும் ஓடவாங்கிக்கொள்ளுவாம்-எ-று, ()

திறமைதெட்சணபாகத்தின் சிறந்ததோர்தேக்கின்மீதே
யுறமையுத்தரபாகத்தி னுத்தரபாகமீதே
முறைமையாமிரண்டிடத்தி னுயர்ந்திடும்நூலைப்பெற்று
வுறமுடன்கொள்ளுவான்பின் னுண்மையைவிளம்புவேனே.

(இ-ள்) தெட்சணயனத்திலும், உத்தராயனத்திலும், இரண்டுநூலை யும் பெற்றுக்கொள்ளுவாம்-எ-று. (சஙு)

சாயல் மாதம் விலக்கம்.

மேவுவைகாசியோடு மிகுபுரட்டாசிரண்டு
தாவவச்சாயலில்லை சாற்றுவேனினிதுகேளு
ஆவணியானியோடு மைப்பசிசித்திரைமாத
மோவியச்சாயல்ரண்டு முண்மையங்குலமென்றேதே

(இ-ள்) வைகாசி- புரட்டாசி- இவ்விரண்டுமாதத்துக்கும் விலக்கமி ல்லை, ஆவணி-ஆனி-ஐப்பசி- சித்திரை- இந்நான்குமாதத்திற்கும் இர ண்டங்குலம் விலக்கம்-எ-று. (சச)

ஆடிகார்த்திகையாங்கூனி யங்குலம்நான்குசாயல்
நீடுமார்கழியுமாசி நிறைவிரலாறுசாயல்
தேதைமாதமெட்டுத் திறமையங்குலஞ்சாயற்றான்
பாடலாம்புகழைக்கூறப் பன்சபிதுபகருவேனே

(இ-ள்) ஆடி-கார்த்திகை- பங்குனி இம்மூன்றுமாதத்திற்கும் நாலங் குலஞ்சாயல் மார்கழி- மாசி- இவ்விரண்டு மாதத்திற்கும் ஆறங்குலஞ் சாயல், தைமாதம் எட்டங்குலஞ்சாயல்-எ-று, (சரு)

சகுனம்.

மன்னியநிறைகுடங்கள் மாராயஞ்சொல்லும்வண்ணான்
மின்னியதயிர்பால்சோறு விடக்குடன்மதுக்குடங்கள்
கன்னியசாரைவீசி கரும்புகட்டெதிரோகானில்
மென்னியவிரட்டைப்பார்ப்பா ரெதிர்வரக்கருமமன்றே

(இ-ள்) சகுனமாவது, நிறைகுடம்-வண்ணான்- தயிர்குடம் - பால்கு டம்- அன்னமதுக்குடம் - எவ்வர்ஸ்த்ரீ-சாரை- தேவதாசி- கரும்புக் கட்டு - இரட்டைப்பார்ப்பார்-இவர்களெதிரேவந்தால் மகாவுத்தமமென் றுசொல்வதுஎ-று, (சகு)

கொடிநரிகிள்ளைவேங்கை கூர்முயல்கோழிகொக்கு
வடிவுளமஞ்சையோந்தி மறைபாடுபசுக்கள்மீதே
கடிகமழ்நசனாவி கடுத்துவாய்ச்செம்போத்தென்னில்
வடிவுடன்வலத்திற்சென்றாற் பலன்பெறுங்கருமமன்றே

(இ-ள்) நரி-கிளி-வேங்கை-முயல்-கோழி-கொக்கு-மயில்-ஓந்தி-மான் பசுமாடு-நாரை-நாவிதப்பிள்ளை-கடுத்துவாயேறு-செம்போத்து இவையெல்லாம் வலதுபக்கஞ்சென்றால் மகா உத்தமம்-எ-று, (சஎ)

செய்யபுன்செய்யவாடை செம்பட்டைசுருட்டைநொண்டி
மெய்யினில்மயிரில்லாதான் விரிதலையொற்றைக்கண்ணன்
தையனூலிழந்தமாது தடிகொம்புகால்பாணுகில்
கையிலேகயிறுகாண்கை காலமாய்ப்படுவன்றானே

(இ-ள்) அழுக்கு வஸ்திரத்தையுடையவர் செம்பட்டத்தலை - சுருட்டைத்தலை நொண்டி-முகத்தில் மயிரில்லாதவன் - விரித்தலையை யுடையவர்-ஒற்றைக்கண்ணன்-விதவைப்பெண் - தடிக்கொம்பை யுடையவர்-கயிறுடையவர்-இவர்களெதிரோவந்தால் உயிருக்குலயம் வரும்-எ-று, ()

தலைவிரிமொட்டைமட்டை தவசிசன்னியாசிபார்ப்பான்
முலையிலாக்கன்னிகும்ப மூக்கிறைவிறகுகட்டு
நலமிலாமுதுநோயாள னாவிதன்குருடன்செக்கான்
பலரும்வந்தெதிரோகாணிற் பலனிலாக்கருமமாமே

(இ-ள்) விரித்ததலையையுடையவர்-மொட்டைத்தலை யாம்பு-சந்நியாசி ஒற்றைப்பிராமணன்-முலையில்லாப்பெண்-புதுப்பானை-மூக்கில்லாப்பேர்கள்-விறகுகட்டு-நோயாளி-நாவிதன் கண்ணில்லாதவர்கள் வாணியன்-இவர்களெதிரோவந்தால் ஆகாது-எ-று, (சுகூ)

கனிவுணவழிசெல்போது காணுமேகாமஞ்சுரி
வனிதையர்நிற்கப்பொன்னும் வாலிபமுகமுகஞ்செய்தால்
நினைவுடன்சிந்தையாலே நேயமாய்நடக்கும்போது
அனமெனநடக்கும்பாவா யதுவுமுத்தமென்றோதே

(இ-ள்) சிற்பனும் யஜமானும் மனைகோலப்போகும்போது அழகு பொருந்திய எவ்வர்ணஸ்திரீயை எதிரேகண்டால் மகாவுத்தமம்-எ-று.

தேங்காய்ச்சகுனம்.

வேறு.

முடிபெருத்துவட்டமிடிற் றிருவேசேரு
மூன்றிலொருபங்குடைத்தாற் செயசந்தோடம்
நெடியவைவந்திரண்டிற்குத் துலையாச்செல்வம்
நீங்கிநரம்பேபிடித்தால் நீடுவாழ்வாம்
கடுகதனையுள்ளானுஞ் ரத்தினஞ்சேரும்
கனக்கவந்திரண்டிற்குக் கருதாபூசல்
வடிவமெனுந்தமிழோது மயனார்சொன்ன
வளமைத்தேங்காய்ச்சகுன வண்மைகேளே.

(இ-ள்) முடிபெருத்து அடிசிறுத்தால் இலட்சுமிவிலாசமுண்டு-மூன்றுபங்கு சிரசிலும்-ஒருபங்கு பாதத்திலுமானும் சந்தோஷமுண்டு-ஐந்துவிரண்டு-ஐந்துமூன்றானல் செல்வமுண்டு, நரம்புபிடித்தால் நீடூழி வாழ்வார்கள், கடுகுப்பிரமாணஞ் சிதழுள்ளேவிழுந்தால் இரத்தினஞ்சேரும், நடுவிற்பிளந்தால் மகாதுயரத்தை விளைவிக்கும்-எ-று. (௫௧)

ஒன்றிரண்டுதனக்குநன்மை யாறுநாலா
யுடையவெகுதுன்பமது வோதக்கேளு
அண்டுமெயிற்கண்டெறித்தால் மரணமாவ
னுகவுநல்லோடுவிட்டா லசனம்வெல்லும்
விண்டோடுதெறித்திடவே பிணியாமெய்யின்
மேதினியிலேவிளைவும் விலையுமாவன்
பண்டுதமிழறிந்தோது மயனார்சொன்ன
பாடலறதேங்காய்ச்சகுனம் பகரக்கேளே

(இ-ள்) நடுமத்தியாயுடைந்தால் நன்மை, ஆறுசுக்கல்-நான்குசுக்கலாயுடைந்தால் வெகுதுன்பம், சரீரத்தில் தேங்காய்க்கண் தெரித்தால் யஜமானன் மரணமாவான், ஓடுவிட்டால் புசிப்பதற்கு அன்னங்கிடைக்க மாட்டாது, ஓடுநெரிந்தால் சரீரத்திற்பிணியுண்டாகும், பூமியில் விழுந்தால் யஜமானன் விலையாய்ப்போய் விடுவான்-எ-று. (௫௨)

மனைமுகூர்த்தக்குழியிற் சகுனம்.

வேறு.

மனைதனில்வந்துநின்று வாஸ்த்துவினிலையறிந்து
வினவியதவ்விடத்து மேவியேமுகூர்த்தஞ்செய்யக்
கனமெனுமண்ணைவெட்டுங் கருதியகுழியிற்குள்ளே
இனமெனுஞ்சயனங்காணு மியல்பதுவிளம்புவேனே

(இ-ள்) மனையில்வந்துநின்று வாஸ்த்துபுருடனது நிதானத்தைச் செவ்வையாய்க்கண்டு அவ்விடத்தில் முகூர்த்தஞ்செய்யுந் தருணத்திற்காண்கின்ற சகுனவிபரத்தைச் சகலருந் தெளிவாயறியும்பொருட்டுத் தெரியச்சொல்லுவேன்-எ-று. (௫௩)

மண்டுகமரணைபல்லி வண்புழுச்சிலந்திவட்டம்
நண்டுகளடக்குமாகி னன்மையேமிகவுண்டாகும்
கொண்டெழுமுடும்புபாம்பு கொடியதேளாமைபூரான்
மண்டெலிகிடக்குமாகில் வெந்துபோம்வெறுமையாமே

(இ-ள்) முகூர்த்தஞ்செய்த குழிவாயில்-தவளை- அரணை-பல்லி-புழு-பூச்சி-சிலந்திப்பூச்சி-நண்டு - இவைகள் நடந்திருந்தால் மகாவுத்தமம், உடும்பு-பாம்பு-தேள்-ஆமை-பூரான்-சரமெலிமடெலி - இவைகள் இருக்குமாகில் அப்பனை வெந்துபோம்-எ-று. (௫௪)

நல்லதோர்நாளும்பக்க முகூர்த்தமும்பொருந்தக்கேட்டு
கெல்லித்தான்பார்க்கும்போது கரியதுநோயதாகும்
புல்லியவுமியதாகிற் பொருளதுகேடுசொல்லும்
மெல்லியவிறகுகாணில் வியன்குலங்கேடதாமே

(இ-ள்) நல்லநாள் முகூர்த்தங்கேட்டு குழிவெட்டும்போது கரிகண்டால் நோயாகும், உமிகண்டால் பொருட்கேடுசொல்லும், விறகுகாணில் குலத்துக்கெல்லாங் கெடுதல்சொல்லும்-எ-று. (ருரு)

தீண்டிடவெறும்புதேளு சிதலொடுகட்டைபொல்லா
அண்டமும்முசுறுங்கேசம் வந்திடின்முத்துப்பொல்லா
வெண்டலையோடுகாணில் வெறுமையுங்கேடுமென்று
தண்டமிழ்நூல்வல்லோர்கள் சாத்திரத்தன்மைபாரே

(இ-ள்) எறும்பு-தேள்-கட்டை-முசுறு-தலையோடு - இவ்வகைப்பட்ட வஸ்த்துக்களை கண்ணிற்கண்டால் அந்தப்பாழ்மனையானது அக்கினிச் சுவாலையால் பஸ்மீகரமாயெரிந்து யாவருக்கும் உதவியில்லாமல் அழிந்துபோகும்-எ-று, (ருசு)

ஈண்டியதனத்தைக்காணி லின்பமாந்துன்பமில்லை
தாண்டார்க்குத்தனங்கள்சேருந் தவளையுங்கல்லுங்காண்கில்
பாண்டரும்பசுவின்கொம்புந் தானியஞ்செங்கல்வெள்ளி
வேண்டியயோகமுண்டா மிகுந்திடுஞ்செல்வந்தானே

(இ-ள்) தனம்-தவளை-பசுவின்கொம்பு - தானியம்- செங்கல்-வெள்ளி இவ்வகைப்பட்ட வஸ்துக்களைக்கண்டால் சகலபாக்கியமும் நிறைந்து ஸ்ரீதேவியானவள் அதிகமகிட்சியாக் குடிகொண்டு நீடூழிகாலம் நிலைபெற்று நிறைந்தசெல்வமுண்டாகும்-எ-று. (ருஎ)

கல்லொடுசெங்கற்சிப்பி கண்டுகண்கனக்கவாழ்வாம்
நல்லுயிர்பிள்ளையென்று நடம்படப்பெருகிவாழ்வார்
புல்லொடுவோடுசாம்பல் படுகரிவேர்க்குந்துத்தி
இல்லத்திற்சாவ்கேடா யிருவினைவிளையுமாதே

(இ-ள்) கருங்கல்- செங்கல்-சிப்பி-இவ்வகைபட்ட வஸ்துக்களைக்கண்டால் அதிகவாழ்வு உண்டாகும், பற்கள்- ஓடு - சாம்பல்- கரி- இவ்வஸ்துக்களைக்கண்டால் மரணமும் கேடும் உண்டாகும்-எ-று. (ருஅ)

எறும்புதானெழுகும்விட்டுப் போயிடிலியர்க்கையுண்டாஞ்
செறிந்திடுங்கறையானேந்திச் சிலும்பிடிற்கருதவேண்டாஞ்
சுரும்புதானின்டுயர்ந்துத் தோன்றிடில்வேண்டவேண்டாங்
கரும்புபோன்மொழியினளே காரணமிதுகண்டாயே

(இ-ள்) எரும்பு ஒழுகுவிட்டுப்போய்விடில் நல்லது, கறையான்- ஓங்கி இது சிலும்பில் அந்தமனையைமனதில் சற்றேனும் நினைக்கக்கூடாது

ஆறுகாலையுண்டய வண்டுகள் கீதவோசையோடு சத்தித்துப்பறந்துவந்துவிழுந்தால் அந்தமனையைக்கனவிலும்நினைக்கவேண்டாமென்றவாறு.

புஷ்பங்கள்விடுகின்ற லட்சணக்குறிப்பு.

தாழ்விலாமனையின்மீது சதுர்மாயொருமுழத்தி
லாழமுமகலங்கெல்லி யதனுண்ணீர்பூவைவிட்டு
வாழ்க்திரவனைநோக்கி வலம்புரிந்தோடில்வாழ்வார்
சூழ்கதிரிடமாய்ச்சுற்றிற் சொல்மனையெடுக்கத்தீதே

(இ-ள்) மனைக்கு நடுவில் நாற்சதுரமாய் ஒரு முழமளவு ஆழமும் அகலமுமாங் கெல்லி அதில் தண்ணீர்கொண்டுவந்துவிட்டு ஒருபுட்பத்தைக் கையிலெடுத்துக் கடவுளைத்தியானித்து அதிற் புரோட்சித்தால் அது கதிரவனைநோக்கி வலமாகச்சுற்றிவருமாகில் அதிகவாழ்வுஞ் சம்பத்தும் கீர்த்தியும் இராஜபிரதிஷ்டையும் வாகனாதிகளும் அதிகரித்து சுபோட்சையுண்டாகும், அம்மலரானது இடப்புறமாகச்சுற்றிவருமாகில் அந்தமனையெடுக்கில் அதிகதுன்பங்களை விளைவிப்பதுமன்றி எந்நேரமும் மனதில் வியாகூலமும் வாராத ஆபத்துகளும் வருமென்றுபெரியோர்சொல்லுவார்-எ-று. (௩௰)

அஷ்டதிக்கு லட்சணக்குறிப்பு.

ஈசுரன்மூலைதன்னி லின்பமாயினிதுகொண்டு
வாசமாமதனில்நின்றால் வரிசையும்வாழ்வுமுண்டாம்
போசனம்பெரியோர்க்கெல்லாம் பொருந்தியமனிதனுவான்
வாசமின்குழலினளே மயனுரைநூல்கண்டாயே

(இ-ள்) ஈசான்ய பக்கமென்று சொல்லப்பட்டாநின்ற பரமசிவத்தினது பக்கத்தில் பரிமளம் பொருந்திய மலரானதுவந்து நிற்குமாகில் கனக அயிஸ்வரியமும்- தீர்க்காயுளும் புத்திரசம்பத்தும்- வாழ்வும் மேன்மையும் விர்த்தியாய்ப்பெருகி நீடூழிகாலம் நிலைநிற்கும், இதன்றி பெரியோர்களுக்கும்-தபோதனர்களுக்கும்-அன்னபானந்கொடுக்க வல்லவனாயிருப்பான்-எ-று. (௩௧)

இந்திரன்மூலைதன்னி லியல்புடன்கிழக்கில்நின்றால்
செந்திருவாசமாவாள் செம்பொன்னுஞ்சேருமின்ப
மைந்தரைப்பெற்றுவாழ்வார் வளர்கன்றுகாலிசேரும்
முந்தவேமயனுர்சொன்ன முறைமைநூலிதுகண்டாயே

(இ-ள்) இந்திரனது திக்கில் பரிமளம் பொருந்திய மலரானது வந்துநிற்குமாகில் அதிக சௌந்தரியம் பொருந்திய இலட்சுமி விலாசமும்- தனதான்ய சம்பத்தும் - சந்தான பாக்கியமும் - தீர்க்காயுளும்- ஆயிராரோக்கியமும் - முன்மதகிரீடையும் - அறுபத்து நான்கு கலைக்கியா

ணமும்- பதினெண்புராணங்களும்- நான்குவேதமும்-ஆறுசாஸ்திரமும் பொருந்துவதுமன்றி பசுக்கள்முதலிய கறவைகளுஞ்சேரும்-எ-று. ()

அக்கினுமீதில்நின்று லாயிழைமலடியாவள்
சேக்கர்வாளரவந்தீண்டுந் தீப்படுமன்னெடுக்கில்
தொக்கிழமிகவுமுண்டு சோரர்கள்கலகமுண்டு
இக்கருமயனார்சொன்ன விசையுநூலிதுகண்டாயே

(இ-ள்) அக்கினித்திக்கில் வாசம்வீசுகின்றபுட்பமான துவந்து நிற்கு மாகில் கற்புநிலைமைபொருந்திய பெண்சாதியானவள் மலடியாவாள், இது தன்றி விஷத்தைத்தாராநின்றபாம்பினால்பயம்- அச்சமுண்டு, அக்கினி ச்சுவாலையினாலும்-கள்ளர்கள் பயத்தினாலும்-பொருள் சம்பாத்திரக்கு துவாமல் வியர்த்தமாய்ப் பொருள் நாசமாய்ப்போகும்-எ-று, (௯௩)

அந்தகன்றெற்குமூலை யன்புடன்வந்துநிற்கில்
சிந்தனைமிகவுமுண்டாஞ் செருக்கமுங்கலகமுண்டு
பிந்திய தீமையோடு பிணியினலச்சமுண்டாஞ்
செந்தமிழ்ப்புனைந்தபாடற் றீதிலாமயன்சொன்னாரே

(இ-ள்) இயமன் மூலையென்கிற திக்கில்பரிமளம்வீசியமலரான துவந்து நிற்குமாகில் மனதில்சிந்தனை வியாக்கூலம்செருக்கம்பலபோராற் கலகம் இங்காரியகாரியம் தீமைபிணி அச்சம் முதலியவெல்லாம் அதிகரித்து உண்டாகும்-எ-று. (௯௪)

கன்னிமூலையிலேநின்றால் கைப்பொருண்மிகவுண்டாகு
மன்னமுந்தனமுஞ்சேரு மாயிழைவந்துநிற்பள்
பொன்னொடுதானியங்கட் பொருந்தவேசெல்வமுண்டா
முன்னமேமயனார்சொன்ன முறைமைநூலிதுகண்டாயே

(இ-ள் கன்னிமூலையில் மலர்வந்துநிற்குமாகில் பொருளும் - அன்ன மும் தனகனகமும்- இலட்சுமிப்பிரகாசமும் - நவதானியலாபமும விரு த்திச்செல்வமும்- எந்நாளுநீங்காமல் வற்றாச்சமுத்திரமாய்மென்மேலு ம்பெருகியுண்டாகும்-எ-று, (௯௫)

வருணன்றன்மேற்குநோக்கி வந்துமேநிற்குமாகில்
இருநிதிச்செல்வமுண்டா யெங்குமேவினையுமாறி
கருதியகருமநன்றாங். கருணையும்பெற்றுவாழ்வர்
மருவியகன்னையுண்டாம் வளம்பெருமயன்சொன்னாரே.

(இ-ள்) வருணனென்னவன்நிற்கின்றமூலையில்அழகும் வாசமும்பொருந் திய பூவானது வந்துநிற்குமாகில் நிறைசெல்வமாறி அழிவதுமல்லாமல் நினைத்தகாரியமும் ஆரம்பித்ததொழில்களுஞ் செயமாகுமென்றவாறு()

வாயுவுமூலைதன்னில் வந்துடனிற்குமாகில்
காயநோய்கொண்டுசாவன் களவினாற்பொருளும்போகும்
பேயுமேபிடித்துக்கொள்ளும் பிணஞ்சுடுங்காடதாகுஞ்
சேயுமேசாவனென்று செயல்பெறுமயன்சொன்னூரே

(இ-ள்) வாயுமூலையென்றதிக்கில் விகசிதம்பொருந்திய மலர்வந்துநிற்குமாகில் பதினெண்காசமென்கிற க்ஷயரோகத்தினால்- மரணமும்-சோரர்கள்களவினால்- பண்டிபண்டாரமுதலிய பொருட்சேதமுமன்றி அம்மனையானது அலகைபிடித்த ப்சாசினது சுடுகாடாகும் - அன்றியும் சகலபாக்கியமும் அழிந்துபோகும்—எ-று. (௬௭)

குபேரன்றன்வடக்குநோக்கிக் குணம்பெறநிற்குமாகில்
விபரமாய்ப்பொருள்கைக்கூடும் வேண்டியசொர்ணஞ்சேதஞ்
சபைநலம்பெரியோனுவன் றன்மசிந்தனையுண்டாகு
மபயமென்றோரைக்காப்ப னருள்பெறும்மயன்சொன்னூரே

(இ-ள்) குபேரன் திற்கின்றமூலையில்விஜேதம்பொருந்திய மலர்களானது வந்து நிற்குமாகில் தனதான்னியசம்பத்தும்- புத்திரசந்தானமும்- ஆயுள்விர்த்தியும்- சபையோக்கியனுகவும்-அதர்மசிந்தைநீங்கித் தர்மசிந்தையோங்கி அபயமென்றவரைக் காத்துப் பொருளுதவிசெய்துவரப்பட்ட மகாபுண்ணியவானுகவும் இருப்பான்-எ-று, (௬௭)

மண்வெட்டி முறுக்கயிர் சகுனம்.

வேறு.

மனைகோலவந்த மண்வெட்டிதானு
முனைமுறிந்திடினு முனைபறித்திடினு
மினைமுறச்சேர்க்கு மிசைகொடியறுதலும்
பினையுங்கொடியும் பினைதருமீனமே

(இ-ள்) மனைகோல்வதற்குக்கொண்டுவந்த மனைவெட்டிமுனையானது முறியினும் - முனையானது பறித்திடினும்- கயிறானது அறுந்திடினும்-ஆகாது அதேனென்றால் எசமானனுக்கு வாராத ஆபத்தும்- மலாக்கிலேசமும் அனுபவிப்பது மன்றி நீடூழிகாலந்துன்பத்தையனுபவித்து யமபதிக்குப் பாத்திரனுவான், ஆகையால் அந்தமனை ஆகாது—எ-று. ()

வேறு.

பட்டுநூல்தர்ப்பையோடு பகருமால்விழுதுபண்பார்
நட்டனைப்பனையினாலும் நவிலுநூல்தேவரோடும்
திட்டமாமறையோர்தானுஞ் சிறந்தக்ஷத்திரியசூத்ரர்
மட்டவிழ்வைசியரோடு வகையதுபிரிவுசொல்லே

(இ-ள்) பட்டுநூல்- தர்ப்பை ஆலம்விழுது- பனையினார்நால்- தேவர் நான்குசாதிக்குந் தெளிவாகவிவரித்துப் பிரிவாகச்சொல்லுவோம். ()

தேவர்க்குப்பட்டுநூலாஞ் சிறந்தமுப்புரியதாகும்
மேவியமறையோன்றர்ப்பை விளக்குமுப்புரியாமன்றை
காவியால்விழுதுமூன்றுப் பிரிய துவசிய நூலாந்
தாவுசூத்திரன்பன்னார் தரவிருப்பிரியதாமே

(இ-ள்) தேவர்களுக்குப் பட்டுநூலால் முப்பிரிக்கயிறு, பிராமணருக்குத் தர்ப்பையினாலே முப்பிரிக்கயிறு, இராஜர்களுக்கு ஆலம்விழுதால் மூன்றுபிரிக்கயிறு, வைசியர்களுக்கு நூலினால் இரண்டு பிரியையுடையகயிறு, இவ்விதமானமனையின்து வொழுங்காகியகயிறுவிபரத்தைச்சொல்லுவாம்-எ-று, (எக)

முனைநீளம்.

பகர்ந்ததோர்முனைக்குநீளம் பதினொருவிரற்றுடங்கி
இகழ்ந்ததோர்விரலாலெத்தி யிருபத்துநான்குங்கொள்க
மகிழ்ந்தவைகிடாவும்போது வாஸ்த்துவின்வயிற்றிற்கெல்லி
லுகந்துதன்மூலைதன்னை யுற்றுமுன்னிடமாய்த்தாக்காதே

(இ-ள்) மனையொழுங்கு முனைபதினொரு அங்குலந்தொடங்கி அதையிரட்டித்து வாஸ்த்துவயிற்றில் முதல்முளையடித்து தென்மூலையை முதலிட்டுத்தொடங்கி இடமாக மனையெழுங்குவாம்-எ-று, (எஉ)

மனை அறுபத்துநான்கு பாகம்.

அகந்தனையெல்லைநான்கு மன்புடனேங்தேயதுகொண்டு
திகழ்தருமறுபத்துநாலுட னம்பாகஞ்செய்துப்
பகரவேபிரமவித்தான் மதியிலனான்குபாகஞ்
சுகமுயர்திக்குநான்குந் துரிதருத்திரபாகந்தான்

(இ-ள்) மனையை நான்கெல்லைசெய்து அதை அறுபத்துநான்குபங்காக்கி மத்தியில் நான்குபங்கு பிரமவித்தானம்நான்குதிக்கும் உருத்திரபாகம்-எ-று, (எங)

மற்றதோர்திக்குநான்கும் வகையதுசொல்லக்கேளாய்
வித்தகனைவிஷ்ணு பாகமாம்விளம்பக்கேளு
சித்தமாங்குறைகளெல்லாந் தேவதைபாகமென்றுஞ்
சுத்தமாந்தமிழையோதுஞ் சுகமயன்சொன்னவாறே

(இ-ள்) மற்றதிக்கு நான்குக்கும் விபரமாவது யாதென்றால் அதுவிஷ்ணுபாகம் மற்றதெல்லாந் தேவர்க்களது பாகமென்று மயமதனென்பவர் சகலருக்குந்தெரிவாகச் சொல்லியவாக்கியம்-எ-று, (எச)

அண்டத்துக்கொத்தநேர்மை யருளியபிண்டமாகும்
பிண்டத்துக்கொத்தநேர்மை பெருகியகிரகமாகுங்
கொண்டநேத்திரமுநாசி கூறியகரங்காலோடு
விண்டுயருந்திசென்னி மேவியதுவாரமாமே

(இ-ள்) அண்டத்துக்கொத்தபடி பிண்டம், பிண்டத்துக் கொத்தபடி வீடு, கரசரணாதிகளோடுங்கூடி விளங்கியகிரகம்-எ-று. (எரு)

இந்தநல்லிதமாய்ச்செய்த வியல்புடன்வயது நூறும்
செந்திருவென்னுமாது திகழ்பிரகாசமாவள்
சந்ததிகன்றுகாலி தக்கதோர்செம்பொன்சேரு
மிந்தநலிதமாமென்று மியல்பெறுமயன்சொன்னரே

(இ-ள்) இந்தப்பிரகாரமாய் அகங்கட்டினல் அதற்குவயது நிதானம் நூறு, கன்று-காலிகள்-கறவைப்பசுக்கள்-இவைகள் நாளுக்கு நாள் விர்த்திபாவதுமன்றித் தாமரைக்கமலத்தில் வீற்றிராநின்ற இலட்சுமியானவள்சேர்ந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்துகொண்டு விளங்கியிருக்கும்-எ-று, (எசு)

அஷ்டதிக்கு லட்சணம்.

இந்திரன்கிழக்கிற்போக மிரவியிலசனங்கொள்ள
அந்தகன்றெற்குவாடை யருநிருதியிற்றண்ணீரில்
வந்தகார்வருணன்பூசை வாயுவிற்றானியந்தான்
நீந்துசேர்குபேரனிரத னீசான்யன்மக்கட்பேரோ

(இ-ள்) இந்திரனதுமூலையில் போகஞ்செய்வது, இரவிமூலையில் அசனஞ்செய்வது, இயமன்மூலையில் வஸ்திரங்கொண்டுவந்து வைப்பது நிருதிமூலையில் தண்ணீர்கொண்டுவந்துவைப்பது, வருணன் மூலையில் அனுஷ்டானமுதலிய பூசைமுடிப்பது, வாய்வுமூலையில் தானியங்கொண்டுவந்துவைப்பது நவநிதியும் பொருந்தியிராநின்ற குபேரனென்று சொல்லப்பட்டவனுடைய தானத்தில் பணத்தைக்கொண்டுவந்து வைப்பது, ஈசான்னியமூலையில் பிரசவிப்பது-எ-று, (எஎ)

இராசி-யஉ-ல் வாசில்.

ஏறுடன்தண்டுநன்று வியல்கிழக்குடன்வடக்காங்
கூறியவதுவைகோலிற் குனைம்பெறுகிழக்குந்தெற்கும்
வீறுசேர்தேளும்வில்லு மகரமுமேற்குந்தெற்குந்
தேறியகுடனீள்மேடஞ் சிறப்புயர்வடக்குமேற்கே

(இ-ள்) விருஷபம்-மிதுனம்-கடகம்- இம்மூன்றிராசி யுடையவர்களுக்கு வாசல் கிழக்கும்-வடக்கும், கன்னி - துலாம் - இந்த இரண்டிராசியையுடையவர்களுக்குக் கிழக்கு தெற்குவாசல், விருச்சிகம்-தனுசு மகரம்- இந்த மூன்றிராசியையுடையவர்களுக்கு மேற்கு தெற்கு வாசல்-கும்பம்-மீனம்-மேஷம்-இந்தமூன்றி ராசியையுடைவர்களுக்குவடக்கு மேற்கு-எ-று, (எஅ)

கலிவிருத்தம்.

அந்தணர்தென்றிசை யரசர்மேற்றிசை
வந்திடும்வணிகர் வடதிசையாகுமே
தொந்தமிழ்கீழ்த்திசை சூத்திராகுமே
இந்தவிதந்தனை யியம்பவுமுற்றனே

(இ-ள்) திசையின்விபரமாவது, பிராமணர்களுக்குத் தென்றிசை இராசர்களுக்கு மேற்றிசை வைசியர்களுக்கு வடதிசை, சூத்திரர்களுக்குக் கீழ்த்திசையாயிருப்பது-எ-று, (எகூ)

கட்டளை-வேறு.

திடமாகியதென்சார்மனை தீதில்மறையவருக்
குடசாரனுங்கீழ்வாசலுங் குலமன்னருக்காகும்
வடசார்மனைதென்வாசலும் வணிகர்க்கதுவேதும்
நடமானதோர்கீழ்சாரியு நாட்டஞ்சூத்திரர்க்கே

(இ-ள்) கட்டளையாவது, தென்சார்பாகிய மனை பிராமணர்களுக்காகும், குடசாரமூலையும்-கிழக்குவாசலும்- இராசர்களுக்காகும் வடசார்மனையும் தென்வாசலும்-செட்டிகளுக்காகும், கீழ்சார்மனை சூத்திரர்களுக்காகும்-எ-று, (அய)

வேறு.

நன்குலத்தோர் கணவிலுநாயகனு நன்பெறுங்கிளையுளோர் மூத்தோர், தென்றிசையவர்க டிரும்பியமேற்கு செய்குடியிருக்கவுந்தீதாம் பொன்குலவவரைத் தெற்கினில்வைத்துப் பொருந்தியவடகிழக் கிருந்தால், இன்மைசேர்பொருளுஞ் சுகத்தையுங்கொடுக்கு மியம்பியமயனுரையிதுவே.

(இ-ள்) தன்னுடைய குலத்தோர் தன் நாயகன் கிளையோர் தனக்குமூத்தோர் தெற்கேயிவர்களைவைத்துத் தான்வடகிழக்கிலிருந்தால் அஷ்ட ஐயிஸ்வரியமும்-தீர்க்காயுளும்-புத்திரசம்பத்தும்- மென்மேலும் பெருகவுண்டாகும்-எ-று, (அக)

தெற்கினிற்குப்பை நிருதியில்வைக்கோல் திருந்தியமேற்கினிலெருமை, தக்கதோர்தொழுவம்வாயுமூலையிலே தகைமைசேர்தானியமிடுவாம், மிக்கதோர்குபேரன் வடக்கினிற்பசுவு மேவியதொழுவமு மதுவாம், இக்கருவுடனேகட்டளையிடவு மியம்பியமயனுரையிதுவே.

(இ-ள்) தெற்கில்குப்பைபோடுவது, நிருதிமூலையில் வைக்கோல்போடுவது மேற்கு எருமைத்தொழுவம், வாயுமூலையில் தானியமிடுவது, குபேரமூலையில் பசுத்தொழுவமிடுவது-எ-று, (அஉ)

வேறு.

இந்துவடதிசைதனி லடுக்களைசவைப்பாம்
வைத்தருகிழக்கதனி லாடுகளைவைப்பாம்
செத்தறியவங்கியினில் வைக்குமதுசெம்மல்
பத்தியாய்மெழிந்தபடி பார்த்திடுதல்நன்றே

(இ-ள்) வடதிசையில் அடுக்களைவைப்பது, கிழக்கு ஆடுகளைவைப்பது, அங்கியில் செம்மல்வைப்பது இந்தப்பிரகாரஞ்செய்வாம்-எ-று, ()

பேரிராசி

வேறு.

நன்மனையெடுப்போர்க்கெல்லா நாளிடராசிதன்னை
முன்வலங்கொள்வாராகின் முயன்றிடுங்கருமமன்றும்
இன்னெடுங்காவம்வாழ்வா ரியன்றனர்மக்கட்பேராம்
பின்னிடங்கொள்வாராகிற் பிணியொடுகேடதாமே

(இ-ள்) மனையெடுப்போர் இராசிதன்னை முன்வலமாகக் கொள்வாராகில் மகாவுத்தமம், இடங்கொள்வாராகில் பீடையுண்டாம்-எ-று,(அச)

சுவர்வெடிப்பு லட்சணம்.

ஆனதோர்சுவர்வெடிப்பு மடுத்ததோர்கிழக்குநாசம்
வானந்தீமூலையல்லல் மாமகோரந்தெற்குக்கு
தேனுதல்கன்னிபோகஞ் சிறந்ததோர்மேற்குவாக்கம்
கோன்வடமேற்குச்சாவு குறித்தநல்வடக்குலாபம்

(இ-ள்) சுவர்வெடிப்பு கிழக்குநாசம், தீமூலை அல்லல், தெற்குஅகோரம், கன்னிமூலைபோகம், மேற்கு ஆக்கம், வடமேற்கு மரணம்வடக்கு லாபம், வடகிழக்கு நாசமாம்-எ-று, (அரு)

சுக்கிரபலன்.

சுக்கிரனெதிரோயாகிற் றொல்குடிசாவுகேடாஞ்
சுக்கிரன்வலக்கண்ணாகிற் றோன்றியபொருளுங்கேடாஞ்
சுக்கிரன்பின்னேயாகிற் சுகமுடன்வாழ்வதாகுஞ்
சுக்கிரனிடக்கண்ணாகிற் றுக்கமேயொன்றுமில்லை

(இ-ள்) சுக்கிரனுக்கெதிராக மனையெடுக்கில் மரணம் - கேடுண்டாம், சுக்கிரன் வலக்கண்ணாகிற் பொருட்கேடு, சுக்கிரனுக்குப் பின்னேயாகிற் சுகமுண்டு, சுக்கிரனுக்கு இடக்கண்ணாகில் மகாவுத்தமம்-எ-று,(அசு)

ஏறுநாள் இறங்குநாள்-முகட்டுநாளறிய.

இலிங்கதாவரங்கள்போலே யிசைந்தமூவனாற்குங்கீறி
விலங்கநால்வனாயுங்கீறி மேலதுமுகட்டுநாளாய்
குலுங்குமோர்துலங்குநாளிற் கோபுரமாடகூடங்
துலங்கியமனையேகோலத் துக்கமாயிடிந்துபோமே

(இ-ள்) இலிங்காதாரம்போலே மூன்றனாகீறி விலங்கு நால்வனாகீறி மேலானது முகட்டுநாளென்றும் பேராம் எ-று, (அஎ)

வேறு.

கொட்டுமூலேமுளைபறித்தல் கொத்தகயிறுமற்றுவிழல்
விட்டவாசல்தலையடைத்து வேறேவாசலதுவிடுதல்
நட்டகாலேப்பிடுங்கிடல் நடுவிலாணிமரமிசைத்தல்
சட்டமனையாள்சாவதுவுந் தானுமரணந்தப்பாதே

(இ-ள்) முளையொடிதல்-கயிறறுதல்- விட்டவாசலடைத்து வேறேவிடுதல் நட்டகால் பிடுங்கிநடுதல் மரச்சூலாணிஇசைத்துக்கூட்டுதலினால் மனையாளும் யசமானனும் மரணமாவார்-எ-று, (அஅ)

திசைபெறுதல்-மறுமாடி.

வேறு.

குடகுதெற்குமனைபேரிற் குற்றமிகவேதானுண்டு
வடக்குங்கிழக்குமனைபேரில் வாழ்வுமுண்டுமிகநன்று
மெடுப்புச்சாய்ப்புமிகவாகா வென்னுங்கருமங்கெடுத்தியதாம்
முடுக்குங்கோடிமறுமாடி மூலேவாங்கிலதுதீதே

(இ-ள்) குடதிசையுந் தெற்கு மனைபேரில் குற்றமுண்டாம், வடக்குங்கிழக்கு மனைபேர்ந்தால் உத்தமம், எடுப்பு சாய்ப்புமுடுக்குகோடி மறுமாடிகள் மூலேவாங்கியிருந்தாலாகாது-எ-று, (அசு)

விருத்தம்.

கூறுவிலக்காமுகடு கொண்டமறுமாடி
மாறுபடவானதுவும் வாழ்மனையெடுக்கில்
ஏறிவருநோய்நலிவுமில்லளரவாகும்
வேறுபடும்வெம்பகை விளைந்திடுதல்மெய்யே

(இ-ள்) முகடுகள் - மறுமாடிகள் - மாறுபாடாக மனையெடுத்தால் வியாதியால் கம்புகிலைமைவழாது நடத்திய மனைவியாலவன் மரணமாவான்-எ-று, (சுய)

பேழைமண்ணிலட்சணம்.

வேறு.

அலைவனிலெடுத்துமண்ணு மானையுங்கோட்டுமண்ணு
நிலைமுறுபுற்றின்மண்ணு நீடியகுளத்தின்மண்ணு
மலைமுயரிடபமண்ணுங் கூட்டிநீர்சேர்த்துக்கொண்டு
நலமுயர்பேழைவைக்க நாடியவிபரஞ்சொல்லே

(இ-ள்) நண்டுவளைமண்-யானைக்கொம்பிலிருக்குமண்-புற்றின்மண்குளத்துமண்-ரிஷபக்கொம்பின்மண்-இவைகளையெல்லாஞ்சேர்த்துக்கொண்டு பேழைவைக்க விபரஞ்சொல்லுவோம்-எ-று, (௩௧)

பெட்டியிலொன்பதாகப் பெருமைசேரறையுண்டாக்கித்
திட்டமாமிரத்தினங்கள் செய்யவொன்பதிலேசேர்த்து
சட்டமாய்ப்பூசைசெய்துத் தகுமீசான்யத்தின்மீதே
திட்டமாய்மனதில்வைக்கச் செல்வமும்வாழுண்டாமே

(இ-ள்) பெட்டியில் ஒன்பது அறையுண்டாக்கி அதில் இரத்தினங்களைவைத்து பூசைசெய்து ஈசான்யபக்கத்தில் வைக்கச் செல்வமுண்டாம்-எ-று, (௩௨)

வேறு.

நடுவீடுவாசலும் நடுமனைக்கம்பமு
மிடுசிலவிரட்டையு மேந்துகையிரட்டை
முடுவளைத்தாழ்தலு முந்துகையுயர்தலுங்
குடியதிற்புகுந்திடிற் கொல்லும்பொல்லாததே

(இ-ள்) இதிற் சொன்னபிரகாரம் ஒன்றுக்கொன்று ஏரக்குறைய கையைவைத்து அந்தவீட்டிற் குடிபுகுந்தால் தப்பாமற் கொல்லும்-எ-று.

விடுப்பதையொன்பதாய் வீட்டையளந்துகொண்
டிடப்புறமூன்று மியல்வலமைந்து
நடுப்புறத்தோன்றில் நலம்பெறவாசலா
யெடுப்பதுசொன்னே மினிக்கதவிடுவதே

(இ-ள்) மனையை ஒன்பதுபங்காக்கி இடப்புரம்-மூன்றுபங்கு, வலப்புறம்-ஐந்துபங்கு, நடுப்பங்கொன்றில் வாசல்விடுவது-எ-று, (௩௪)

புத்துலட்சணம்.

வேறு.

இந்திரன்செல்வமக்கினிமனையு மிடியுமேயமன்றிசைநிற்க
அந்தமாநிருதிநன்மையாம்வருணன ருளியபுத்திரலாபம்
உந்தியவாயுதுறக்கமாங்குபேர னேங்கியதன்மையீசான்னியன்
பிந்தியவணியாம்பிரமதானத்தில் பெருகியசாவெனூப்புத்தே

(இ-ள்) இந்திரபாகத்தில் செல்வமானது விர்த்தியாகும், அக்கினிபாகத்தில் மனையானது இடிந்து பாழாகும், யமன்றிசை துக்கமுண்டாகும் நிருதிபாகத்தில் நன்மையுண்டாகும், ஈசான்னியபாகத்தில் பிணியுண்டாகும், வருணபாகத்தில் புத்திரபாக்கியமுண்டாகும், வாயுபாகத்தில் அதிகதுக்கமுண்டாகும், குபேரபாகத்தில் அதிக நன்மையுண்டாகும், பிரமதானத்தில் புத்துண்டாகில் மரணமாம்-எ-று, (௬௫)

கதவுசத்தம்

வெண்பா.

ஓடியடக்கிலுயர் போகுமோடாமற்
பாடியடக்கின்மனை பாழாகும்—பாடாமல்
நின்றநிலைநீக்குங்கால் நீடூழிவாழ்வாமே
கன்றகதவடைத்தக் கால்.

(இ-ள்) கதவைஓடியடைத்தால் உயிர்ச்சேதமுண்டாகும், பாடியடைத்துதானால் மனை பாழாகும், நின்றநிலையில் நின்றுதானால் நீடூழிகாலம் வாழ்வாம்-எ-று, (௬௬)

விருத்தம்.

மந்தமாய்வாதபித்த மருவியேநடக்குமாகிற்
சிந்தையாற்கதவுசத்தங் கிளிமொழிபோலேசீறும்
அந்தமாம்நடுச்சட்டத்தி லாணியொன்றூனமாகுந்
தொந்தமாயிருக்கும்நோய்தான் றீராது துணிந்துசொல்லே

(இ-ள்) மந்தங்கொண்டு வாதம்-பித்தம் என்னும் இரண்டுநாடிபோல நடக்குமாகில் நடுச்சட்டத்தி லாணியொன்றூனமென்றுசொல்லவும்நோய்த் தொந்தமாயிருக்கும்-எ-று, (௬௭)

வெண்பா.

கன்னியரோவாசற் கதவுசிங்கிச்செக்கோசை
மன்னியபுத்திரனு மத்தியா—முன்னமே
கன்னியரைத்தோக்குஞ் சவலைமிகப்படுத்தும்
அன்னமேசொன்னே னறி

(இ-ள்) கதவானது சிங்கிச் செக்கோசைபோல் இரைச்சலிட்டு நடக்குமாகில் புத்திரபாக்கியமில்லை, மனையாள் மரணமாவாள், மனக்கவலையுமுண்டாகும்-எ-று, (௬௮)

விருத்தம்.

கரும்பாலைப்போலத்தானுங் கதறியேகத்துமாகில்
வரும்பாலகர்க்குநாச மங்கையரிடத்திற்பழம
பெரும்பாடுமெத்தவுண்டு பெண்பழித்தனையேவாங்கும்
அரும்பானகொங்கைமாதே யையன்முன்னடந்தவாறே

(இ-ள்) கரும்பாலைபோல் கதவு சத்தமிட்டால் புத்திரவிரோதம் பெண்பழிகொள்ளும் அதிக அவஸ்தையுண்டாகும்-எ-று, (௯௯)

ஆண்மரம்.

காணவேமரங்கடன்னைக் கருத்துடனறியும்போது
தாணெனத்திரண்டுநின்று சுத்தமாயொழுங்கதாக
நீணுயர்ப்பாரிமேலே நின்றிடுமாகினல்ல
ஆண்மரமென்றுசொல்லி யறைந்தனர்வேதத்தோரே

(இ-ள்) ஆண்மரமானது தூண்போலத்திரண்டு நீண்டுவொழுங்காயிருக்குமாகில் ஆண்மரமென்று சொல்வது-எ-று, (௱)

பெண்மரம்.

கண்ணுறுமரங்கடன்னைக் கருதியேபார்க்கும்போது
விண்ணுறுமையடிபெருத்து மேலதுசிறுத்துநின்றால்
பெண்ணெனவகுத்துநன்றாய்ப் பெருமையாயோதலாம்பின்
றண்ணெனத்தமிழேயோதுந் தூரிதமாய்மயன்சொன்னாரே

(இ-ள்) பெண்மரம்அறிவதானால் அந்தமரமானது அடிபெருத்து நுனியானது சிறுத்திருந்தால் அதைபெண்மரமென்று அறிந்துசொல்லுவது எ-று, (௱௧)

அலிமரம்.

இலகியமரங்கடன்னை யியல்புடன்பார்க்கும்போது
நிலமதிற்சிறுத்துநீண்டு நெடுமையதாகிப்பின்னும்
தலையதுமிகப்பெருத்துத் தானதுநிற்குமாகில்
அலிமரமாகுமென்றே யறைந்தனர்வேதத்தோரே

(இ-ள்) அலிமரமாவது, சிறுத்துநீண்டு நெடுமையாகித் தலையானது பெருத்துநிற்குமாகில் அதைஅலிமரமென்று மனதில் சற்றேனுஞ்சந்தேகமில்லாமல்நடங்கொண்டு அலிமரமென்றேசொல்லவேண்டும்-எ-று

மரங்கட்டுப்படுகின்ற விபரம்.

கருதுவாண்மரமேயாகிற் காலொடுதூணுக்காகும்
மருவுபெண்மரமேயாகில் வளையுத்திரம்பொதிகைக்காகும்
விரவலிமரமேயாகில் விட்டமுஞ்சட்டமாகும்
உரவியபலகைகளாகி யுத்தமமரங்களாமே

(இ-ள்) ஆண்மரமாகில் கால்தூணுக்காகும், பெண்மரமாகில் வளையு த்தரந்தூணுக்காகும், வளையுத்தரம்போதிகைக்குமாகும், அலிமரமாகி ல் விட்டஞ் சட்டமாகுங்கைக ளுத்தமமரங்கள்-எ-று, (௩௩)

மாமரந்தேவர்க்காகு மறையவர்வேம்பதாகுங்
கோமகன்றேக்கதாகுங் குணமுள விலுப்பைசெட்டி
பூமகன்வேங்கையாகும் பொருசாதிநான்கினுக்குந்
தாமமாம்வல்லிமேவுந் தருமபன்சாற்றுவாரே

(இ-ள்) மாமரம்-தேவர்களுக்காகும், வேம்பு பிராமணர்களுக்காகும், தேக்கு-இராஜர்களுக்காகும் இலுப்பை செட்டிகளுக்காகும், வேங்கை வேளாளர்களுக்காகும்-எ-று, (௩௪)

மனையில் நில்லாமரம்.

அத்தியுமாலுமிச்சி யரசுடனில்வுதானும்
நத்தியப்புரசுகுச்சம் நவின்றிடுமிலந்தைபிலி
வித்தமமகிழுகூறும் விளாவுடனிவைகளெல்லாஞ்
சித்தியாயகங்கள்கட்டச் செல்வமுங்குன்றுந்தானே

(இ-ள்) அத்தி-ஆல்-இச்சி-அரசு-இல்வு-பரசு-குச்சம்-இலந்தை பிலி-மகிழம்-விளா-இவைகளால் வீடுகட்டினால் இருக்கப்பட்ட செல்வமும், புத்திரபாக்கியமும் குறைந்து வறுமைமேவிட்டு அதிகதுன்பத்தையு ண்டாக்கும்-எ-று, (௩௫)

சிறியகாற்றில்வீழ்ந்த திறமைசேர்மரமுமல்லாம்
கூறியவாலயத்திற் குணம்பெறநிற்குநல்ல
தேறியமரமயானத் திருந்திடுமரமகந்தான்
மாறியேகட்டுமாகில் வம்மிஷநாசமாமே

(இ-ள்)காற்றிலடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்தில் நிற்குமரம், மயான த்திலிருக்குமரம், இவ்வகைப்பட்டமரங்களால் வீடு கட்டடஞ்செய்தா ல்-செல்வங் குறைந்து ஆயுள் சிரணித்து வம்சம் நாசமாகும்-எ-று(௩௬

வெண்பா.

பருத்தியிலுப்பைப் பனைபெட்டிநாவல்
எருக்குப்புளிமா மிவைபெட்டும்-பெருக்கமுடன்
இல்லிருந்தகால மிந்திரனேயாமாகிற்
செல்வம்போய்நிற்பாள் திரு

(இ-ள்) பருத்தி-இலுப்பை-பனை-எட்டி-நாவல் எருக்கு-புளி-இவ்வகைப்பட்ட மரங்கள் வீட்டிலிருக்குமானல் தாமரைக்கமலத்தில்வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் இவ்வீட்டிலிருந்து ஆனந்தத்தால்நடனஞ்செய்வதற்கு மனமில்லாமல்வெறுத்து இம்மனையைவிட்டு நீங்குவாள் என்றவாறு, (௱எ)

காலவைக்க கையேற்ற நாள் இலக்கினம்.

மதியினிற்காலைநீட்டி வன்புதன்கையைவைத்து
விதியினல்வெள்ளிமேய்ந்து வியாழத்திற்குடியேபுக்க
சதியுடன்பகைவர்வந்து தணலெரிமூட்டினலும்
பதிபெறவிந்திரன்போற் பரிவுடன்வாழ்வர்தாமே

(இ-ள்) திங்கள் காலைநாட்டித் தன் கையைவைத்து வெள்ளிமேய்ந்து வியாழத்திற்குடி புகுந்ததால் தேவேந்திரன்போல் அஷ்டஐசுவரியமும்பெற்று நீடூழிகாலஞ்செல்வநீங்காமல் கீர்த்தியுள்ளவனாய் வாழ்வான் எ-று, (௱அ)

சுக்கிரபலன்

இருங்குருவெள்ளிவாரம் லக்கினநாலேழ்தன்னில்
வருங்கதிராறிலங்க வந்தனன்மூன்றில்நிற்கப்
பெரும்புரங்கேவில்வீடு பீடமேசெய்வீராகில்
திருந்தவேவயதுநூறு தீர்க்கமாவிளங்குமாதே

(இ-ள்) வெள்ளிவாரமும் லக்கினம் நாலும் ஏழும்-சூரியன்-ஆறிலும்,இராஜன் மூன்றிலும்-நிற்க, கோபுரஞ்-சாலை-வீடு-மாளிகை- இதுகள் கட்டினல் நூறுவயது பெற்று விளங்கும் எ-று, (௱௯)

லக்கின முகூர்த்தம்

வேறு.

தக்கசென்மநாலுபத்திற் சசிதானிற்கத்
தருவதிலொன்றிற்குருவும் குசனுமந்தன்
மிக்கவிவர்தானிருந்து முகூர்த்தஞ்செய்தால்
மேவியதோர்மனைதனக்கே வயதுநூறாம்
தக்கதொருவோரமையிற் குருவுஞ்சுக்கிரன்
றருமைந்தின்மூன்றில்வெய்யோன் றனைமையாறில்
திக்குயருங்குசனிருந்தா லகத்துக்கேதான்
றிலவயதுநூறெனமே செப்பினேனே

(இ-ள்) இலக்கினத்திற்கு நாலு, பத்தில்- சந்திரன் நிற்க பதினொன்றில்- இராஜா செவ்வாய்- சனி- இவர்களிருக்க, மனைக்குமுகூர்த்தஞ்செய்தால்வயது நூறுவருஷம்விலங்கும், இலக்கினத்தில் குருவும்-சுக்கிரனுமிருக்க ஐந்து மூன்றில் சூரியனிருக்க, ஆறில் செவ்வாயிருக்கமுகூர்த்தஞ்செய்தால் அந்தமனை நூறுவருஷம் விர்த்தியாய்விளங்கும். ()

மேவியசீர்தைமதியிற் சோமனைில்
விரும்புபுதன்குருவத்த மானகாலம்
தாவிபபட்டணநகர முகூர்த்தஞ்செய்தாம்
றகைகமைவயதிருமூன்று நூறதாகும்
மேவியதோருதயத்திற் பத்தில்வெள்ளி
யொருமூன்றிம்புதன்குருவு மத்தமானம்
மாவுயர்பட்டணநகர முகூர்த்தஞ்செய்யில்
வருநூறுவிருமூன்றாய் வகுத்தவாறே

(இ-ள்) இலக்கினத்திற் சந்திரனிற்க நாலில் புதனிருக்க,குருஅஸ்தாமாகமுகூர்த்தஞ்செய்தால் அந்த மனைக்கு அறுநூறு வயதாகும், இலக்கினத்தில் பத்தில்- - சுக்கிரனிருக்க மூன்றில்- புதனிருக்க, குருஅஸ்தமானமாக முகூர்த்தஞ்செய்தால் அந்தமனைக்கு அறுநூறுவயதுவிளங்கும்-எ-று, (௱௰க)

பொங்குகுருக்ஷேத்திரத்தில் வெள்ளிவீட்டிற்
புதனிருக்கநகர்முகூர்த்தம் புரிவீராகில்
தங்குவயதிருநான்கு நூறதாகுந்
தருமிரவியுதயமத்த மானகாலஞ்
சங்கைதருபத்திலே சோமனிற்கத்
தகைகமைநகராலயமே முகூர்த்தஞ்செய்தால்
இங்கிதமாய்வயதுமொரு சகஸ்ரமென்று
இம்மொழிக்கும்பனுரைய மியம்பினரே

(இ-ள்) குரு க்ஷேத்திரத்திலிருக்க-வெள்ளிவீட்டிற்-புதனிருக்க, முகூர்த்தஞ்செய்தால்- எண்ணூறுவயதிருக்கும் சூரியன் அஸ்தமானகாலம், பத்தில் - சந்திரனிற்க ஆலயமுகூர்த்தஞ்செய்தால் ஆயிரம் வருஷம் விளங்கும்-எ-று, (௱௰உ)

தேசுயர்ந்தசுக்கிரனுமுதயமாகத்
திருந்தியதோரேழதிலே குருவிருக்க
மாசகன்றபத்திலே சோமனிற்க
வளாமுகூர்த்தமாலயமே மகிழ்ந்துசெய்யில்

பேசுபெறுவயாதுமூறு சகஸ்தரமென்றே
பேசலாமோரைதனில் வெள்ளிநிற்க
வாசகுருக்ஷேத்திரமா நகருக்கேதான்
மருவுமனற்சேதமிலே மகிழுவாரே

(இ-ள்) சுக்கிரனுதயமாக, ஏழில்- இராஜனிருக்க, பத்தில்-சந்திரனிருக்க, மூகூர்த்தஞ்செய்தால் - ஆயிரம்வருஷம்விளங்கும், இலக்கினத்திற் சுக்கிரனிருக்க, குருக்ஷேத்திரத்திலிருக்க, முகூர்த்தஞ்செய்தால்-அக்கினிபயமில்லை—எ-று, (௱௰௩)

வருங்கடகமகரமது மீனந்தன்னில்
வளமைமிகுசந்திரனு மருவிநின்றால்
திருவுயர்ந்தகிரகமதில் வைக்கோற்போடச்
செயமதுவாம்பூராடந் திருவோணந்தான்
தருவுயர்ந்தரோகணி யத்திரங்கள்மூன்றுந்
தங்கியவாயிலியமது சார்றக்கேளே
வெருமிருகசிரிடபங் குருவிருக்க
வருகுருவாரங்கள்செய மகிழ்ச்சியாமே

(இ-ள்) கடகம் - மகரம்-மீனம் - இதிற் சந்திரனிருக்க, வைக்கோல்போட்டால்-செயமாகும், பூராடம்- திருவோணம்-உரோகணி-உத்திரம்-உத்திராடம்-உத்திரட்டாதி - ஆயிலியம்- மிருகசிரிடம்-இதுகளில் இராஜனிருக்க குருவாரத்திற்செய்ய மகிழ்ச்சியாம்-எ-று. (௱௰௪)

திருந்துசிலராசியத்தில் வெள்ளிநிற்கச்
சிறந்தசுக்கிரவாரமூமா யிருந்தாலாக்க
பொருந்துசிலராசிதனிற் சோமனிற்கப்
பொருந்துதிங்கள்வாரமதி லரசாவொன்பான்
வருந்துமகமனையாளுங் கெர்ப்பமாகில்
வளர்மூகூர்த்தங்குடிபுகவு மத்திபந்தான்
வருந்தியதோர்கிரகபல னிதுவாமென்று
மயனுரையிவ்வாறதனை மகிழும்வாறே

(இ-ள்) சிலராசியில்- சுக்கிரனிருக்க- சுக்கிரவாரமுமாயிருந்தால்ஆக்கமுண்டு, சிலராசியில்- சந்திரனிருக்க - திங்கள்வாரமாகில்- மனையாள் கெர்ப்பமாகினும்-முகூர்த்தஞ்செய்யினும்,குடிபுகினும்-மத்திபமென்று மயமதமென்பவர்சொல்லிய வாக்கியம்-எ-று, (௱௰௫)

பூமிசல்லியம்.

வேறு.

களத்திரத்தானந்தன்னிற் கரிபொடுமுமியெலும்பும்
வளத்துடன்மனையினின்றுன் மனையவள்மரணமாவாள்
விளைத்திடுந்தின்மைமேலாம் வியாதியாஞ்சங்கைபீடை
கிளைத்திடுங்குலங்களெட்டுங் கெடுதியாமயன்சொன்னரே

(இ-ள்) உதயவாரூடராசி- ஏழாமிடத்தில்- கிரகங்கள்- நின்றதானல் அதற்கு- ஒன்று - நான்கு-ஏழு- பத்தில்-சந்திரனின்றல், சல்லியமிருக்குதென்று நிச்சயமாய்ச்சொல்லப்படும், அதற்குப்பலன் ஸ்திரீகளை அடிக்கும் குலத்துக்குக் கெடுதிவருமென்று சொல்லவும், பொருட்சேதமும் உயிர்ச்சேதமுமுண்டு, அந்தமனையில்சௌக்கியமில்லை-எ-று, (க)

சாம்பலோடெலும்புங்கூடித் தழைத்திடும்மனையினின்றும்
சோம்பலேமிகவுண்டாகுஞ் சுகமதங்கில்லைகண்டாய்
பாம்பினலச்சமுண்டாம் பாரியால்விரோதமுண்டு
நாம்பலநூல்கள்பார்த்து ஞாயமாய்வகுத்தவாறே

(இ-ள்) உதயவாரூடங்களில் கிரகங்கள்நின்றதானல், அதுகேந்திரங்களிற்சந்திரனின்றல், அந்தமனையில் சாம்பலும்-எலும்பும்இருக்குமென்றுசொல்லுவது, அதற்குப்பலன் சோம்பலுண்டு, பாம்பினல்அச்சமுண்டு, பாரியால் விரோதமுண்டு, சம்பத்துக்ஷீணமாகும், சங்கைபீடையென்று சொல்வதுமுண்டு-எ-று, (உ)

புத்திரதானந்தன்னிற் பொருந்தியசல்லியங்கள்
சத்துவமானகல்லு தரித்திட்மரங்கள்கட்டை
பெற்றிடவெலும்புங்கூடிப் பெரியதம்மனையினின்றல்
அத்திடுங்குலங்களொட்டு மாதியின்மயன்சொன்னரே

(இ-ள்) உதயவாரூடத்திற்கு ஐந்தாமிடத்தில் கிரகங்கள்நின்றுஅது கேந்திரங்களில் சந்திரனின்றல், கருங்கல்லும்- மரமும்-கட்டையும் எலும்பும்- இருக்கிறதென்றுசொல்லுவது, அதற்கும்பலன்- துலமல்லாத புருடாளை அடிக்கும்-எ-று, (ங)

உயிருடலிரண்டிடத்தி லுற்றதோர்சல்லியங்கள்
மயிர்முனைகூடிநின்றல் மன்னவர்தனக்குமாகா
துயிரியம்பெலன்சம்பத்துத் தானதுதழியுமென்றே
குயின்மொழியுடையமாதே குறிப்புடன்மயன்சொன்னரே

(இ-ள்) உயிரென்னப்பட்டது ஆரூடலக்கினம், உடலென்னப்பட்டது உதயலக்கினம், சந்திரலக்கினம்- இதற்கு இரண்டாமிடத்தில்சந்திரனின்றால், அது சல்லியமென்றறிந்து அதற்குப் பலன் அந்தவீட்டு யசமானுக்கு ஆகாது, தயிரியம்- பெலன் சம்பத்து இவைகளெல்லாம்அழியும்-எ-று, (௪)

கருங்கல்லோடெலும்புங்கூடிக் காரியத்தானந்தன்னில்
இரும்பொடுதுராவுங்கட்டை யியம்பித்தலைதான்சேர்ந்தால்
அரும்பொருளுசமாகு மம்மனையழியுமென்றே
தருந்திருப்புவனமாதே சாபித்திரம்பன்சொன்னாரே

(இ-ள்) காரியத்தானமான பத்தாமிடத்திற் கிரகங்களின்றால், கருங்கல்லும்- எலும்பும்-துரா-ஈயம்- பித்தலை-இவைகளிலொன்றிருக்குமானால் அதற்குப்பலன், பொருளழிந்துமனிதர்சேதமாகி அந்தமனைஎடுபட்டுப்போகும, அருட்டிசொற்பனமுண்டாம்-எ-று (௫)

ஆறெட்டுபன்னிரண்டி லானதோர்சல்லியங்கள்
கூறிட்டுநின்றதானல் குற்றமேயில்லைநன்மை
வீறிட்டலாபமேழு வித்தைசேமூன்றினின்றாற்
பேரிட்டசல்லியங்கள் பெரும்பிணிமிகவுண்டாமே

(இ-ள்) ஆறாமிடம்- எட்டாமிடம்- பன்னிரண்டாமிடம்-இவைகளிற்கிரகங்கள் நின்றால் சல்லியமுண்டு, பெரும்பிணியாகிய கன்மவியாதியுண்டாகும்-எ-று, (௬)

சாடியோடெலும்புகூடித் தழைத்திடுமனையினின்றால்
ஓடியகப்பலாழி யுடைந்ததுபோலேயோகங்
கூடியேமனையினின்றாற் குலந்தனைநாசஞ்செய்யும்
பாடியேமயனார்சொன்னார் பயனறிந்துரைத்தவாறே

(இ-ள்) சாடியோடெலும்பிருக்கிறதென்று உதய லக்கினத்திற்கிரகங்களின்றால் அது கேந்திரங்களில் சந்திரனின்றால்-சல்லியமுண்டென்றறியவும், அதற்குப்பலன்- ஓடிவருகின்ற கப்பல் சமுத்திரத்தில்உடைந்தாப்போல் யோகமானது ஸ்திரீகளைமரணமாக்கும் - குலத்துக்கெல்லாங்கெடுதிவரும்-எ-று, (எ)

ஆரூடந்தன்னில்ராகு வதற்குநாலேழுபத்தில்
காரியுமதியினின்றாற் கரியொடுவுமியெலும்பு
வீரியமுடனேகாணு மேலதிக்கிரண்டுமூன்றிற்
சூரியன்மதியுநின்றாற் சூனியமிருக்குந்தானே

(இ-ள்) ஆரூடராசிகளில் உதயத்தில் இராகுநின்றாலும், ஏழு-நாலுபத்தில்-சனியுஞ்-சந்திரனும்நின்றால், கரி-ஓடு- எலும்பு - இவைகளிருக்குமென்றுசொல்வது, அதற்குப்பலன்-இரண்டு மூன்றில் சந்திரனும்-சூரியனுங்கூடிநின்றால், சிலை-கருங்கல்லுகாணும் செவ்வாயுங் கூடிநின்றால்-வெண்கலம்-பித்தளை ஓடு-எலும்பு-ஈயம்- இவைகளிருக்குமென்றுசொல்லும் எ-று, (அ)

உதயவாரூடந்தன்னி லுடலுயிரறியவேண்டி
மதியமாய்வந்தநாட்கள் வருமுழுநாட்கடன்னில்
புதியதாயுடலீதென்றும் பித்தநாளுயிருமென்றும்
பதியவேபலன்கள்சொல்லும் பகர்ந்தனமுறையுமாதே

(இ-ள்) உதயவாரூடராசியில் சந்திரனின்றராசியில் உடலென்றும் உதயாரூடம் உயிரிரண்டு - இந்தராசிகளில் முழுநாளையெண்ணிப்பலன்சொல்லுக-எ-று, (௯)

தொட்டலக்கினத்திற்காரி சூரியன்செவ்வாய்ராகு
இட்டநாலேழுபத்தில் சீரணமதியேசேர்ந்தாற்
பட்டிடுமரங்கள்கட்டை பானையோடெலும்புசாம்பல்
சட்டமாயிருக்குமென்றே தார்சடைமுனிசொன்னரே

(இ-ள்) யாதாமொருவர் வினவிக் கேட்கவரில் அவரை ஒருராசியைத் தொடச்சொல்லிஅந்தராசிக்குச்-சனி-சூரியன்-செவ்வாய்- இராகு-நாலாமிடம் - ஏழாமிடம் - பத்தாமிடம் - மாபக்கஞ் சந்திரனுங்கூடியிருந்தால்-பட்டமரமும் - பானையோடும் - எலுமபும் - சாம்பலுமிருக்குமென்றுசொல்லுவது-எ-று, (௰)

மதிக்குநாலேழுபத்து மந்திரியுந்திகூடி
அதற்குமூன்றெட்டிலாறி லாதித்தன்வலயமாகி
இதிக்கவோர்சிபத்தினாலே யிருந்தவன்பெலவானாகில்
நிதிக்குளோர்பயனேசொல்லும் நிச்சயமயன்சொன்னரே

(இ-ள்) சந்திரனுக்கு நாலாமிடம்ஏழாமிடம்-பத்தாமிடம் - இராஜனிலும் புதனிலும்நின்றால் அதற்கு-மூன்று-ஆறு-எட்டில்-சூரியனிருந்தால் நிதியுண்டென்றுசொல்லுவது-எ-று, (௰௧)

சுக்கிரனுக்கெதிரேபுந்தி தோன்றியகாரிமன்னன்
வக்கிரமில்லாதிருந்தால் மன்னவர்க்காறில்மைந்தன்
சிக்கவேதிரவியங்கள்-நிலந்தனில்இல்லையாகில்
பக்குவமானவெள்ளி பாரினில்மிகவுண்டாமே

(இ-ள்) சுக்கிரனும் புதனுங்கூடி அதற்கெதிர் இராஜனிருக்க இவர்கள் வக்கிரமில்லாதிருக்க இராஜனுக்காறில்சனியிருக்க அந்தப் பூமியில் திரவியமுண்டு அக்குதில்லாவிட்டால் வெள்ளியாகிலு மிருக்குமென்று சொல்லுவது-எ-று, (௰௨)

தனமிகுசூனியத்தமற்றகுகரியெலும்பினோடு
மினபுடன்காணவென்றாலியம்புவேனரசேகேளு
மனதுடனிருபத்தெட்டுவாகுளபாகஞ்செயது
வினவியசந்திரன்வீட்டில்வி ருப்பமாயிருக்குந்தானே

(இ-ள்) தனங்கள் சூனியம் கரி ஏலும்பு இவைகளையெடுக்க வேண்டு மென்றால் அவ்விடத்தை இருபத்தெட்டு பாகஞ்செய்து சந்திரனெந்த வீட்டிலிருப்பானோ அந்தவிடத்திலிருக்குமென்றவாறு (யங)

இருப்பதாம்பொருடனக்குமியல்புடன்வகையைக்கேளு
கருப்பெனவிருளன்காளிகணந்துர்க்கைவைரவன்று
னிருப்பதுகாவலாக யிருந்தவர்தனைவிலக்க
விருப்பமாங்கணபதித்தாள் விரும்பியேபூசைசெய்யே

(இ-ள்) இருக்கின்றபொருள் சூனியமெடுக்கவென்றால் அதைக்காத் திருக்கின்ற கருப்பன்-இருளன் - காட்டேரி காளி கணம் துர்க்கை-வை ரவன்-இவர்கள் காவலாயிருப்பார்கள் அதைவிலக்கவேண்டுமென்றால்- செபதயத்தோடுதீபதூப நைவேந்தியத்தோடு கயமுகத்தையுடைய வி நாயகக்கடவுளைபத்தியோடுஅருச்சிக்கவென்றவாறு. (யச)

செய்யதோர்பூமிதன்னைச் சிறப்புடன்மெழுகிப்பின்னு
மெய்யதாய்கும்பந்தன்னைவிரும்பித்தாபிதமேசெய்து
ஐயனேயோமகுண்டத்தக்கினிசெபஞ்செய்தங்கே
துய்யனாஞ்சந்திரன்றன்னைத் துலங்கநன்றாகச்செய்யே

(இ-ள்)பூமியைச்சதுரமாக மெழுகிக்கும்பந்தாபித்து ஓமாக்கினி யக்கிய செபஞ்செய்துநாற்சதுரங்கீறுக-எ-று (யரு)

துலங்கவேயெட்டுத்திக்குஞ் சுற்றிநாலாணிகொண்டு
இலங்கியசெபத்தினோடு மின்பமாயாணிகொண்டு
அலங்கிருதபெலிகொடுத்து மவ்விடஞ்சோதித்தக்கால்
நலங்கொளநீகுறித்த நற்பொருள்சொல்லக்கேளே

(இ-ள்) எட்டுதிக்குஞ்சுற்றி நாலாணிகொண்டுசெபதப மந்திரசித்தி யோடு ஆணிகொண்டு பெலிகொடுத்து அவ்விதமாகச் சோதனைசெய்தா ல் நீகுறித்தபொருள்சொல்லக்கேள்-எ-று, (யசா)

சொல்லுவேனீகுறித்த சுகப்பொருள்வருத்துக்கான
வல்லோர்குமரன்பூசை மாருதிமந்தன்பூசை

சல்லியமாகச்செய்தாற் றனம்பொருள்காணுஞ்சொன்னோன்
புல்லியமயனுஞ்சொன்ன புகல்பெறு நூலிதாமே

(இ-ள்) நீ குறித்தபொருள் வருத்துகானவென்றால் குமரன் பூசை அநுமாருச்சாடனஞ்செய்து அவ்விடத்திற் சோதித்தால் நீகுறித்தபொருள் கண்ணிற்றிலக்கமாய்க் காணுமென்றவாறு. (௰௭)

வெண்பா.

உள்ளுமுறைமைதலையோ டெலும்போடிட்டிகையும்
வள்ளோடுசுள்ளிமகிழ் தெய்வம்—தெள்ளியதோர்
சாம்பல்கரிசபமுந் தானியம்பொன்கற்றவளை
யாங்குசுவானத்தெலும்பு மாம்.

(இ-ள்) பூமிசல்லியம் பதினாறுவது - ஒன்றுக்குத்தலையோடு, இரண்டுக்கு-எலும்பு, மூன்றுக்கு-விட்டிகை-நான்குக்கு - ஓடு, ஐந்துக்கு சுள்ளி, ஆறுக்கு தெய்வம்-ஏழுக்கு - சாம்பல், எட்டுக்குகரி ஒன்பதுக்குசபம், பத்துக்கு-தானியம், பதினொன்றுக்குப் பொன், பனிரண்டுக்குக் கருங்கல், பதின்மூன்றுக்குத் தவளை, பதினான்குக்குப் பசுவின்கொம்பு பதினைந்துக்கு நாயெலும்பு, பதினாறுக்கு-மதம்தக்கச்சால், இந்தப்படி-பதினாறும் பூமிசல்லியமென்றவாறு, (௰௮)

அப்போதளந்த வடியிருபத்தெட்டுடனே
தப்பாமற்கூட்டித் தருமல்—செப்பமுடன்
பண்ணிப்பயனைப் பதினாறுக்கீய்ந்தபல
முன்னணியவர்க்கெல்லா முறை

(இ-ள்) யாதாமொருவன் கிரகசல்லியம் வினவினால் அடியளந்து அவ்சாயல் பாதச்சாயல்கள் நின்ற அடியுடனே இருபத்தெட்டு கூட்டிப் பதினாறிற் கழிக்கச் சல்லியமின்னதென்று சொல்லுகவென்றவாறு (௰௯)

காலநிர்ணயம்.

நாழிகைகுளிகனுனை நல்லதோரருக்கன்குலம
சூழியதிக்குயோனி சுக்கிரனிராசிமாதம்
வீழிலாவாஸ்துவின்றன் விடமுறும்பக்கநாள்கள்
ஏழியல்வாரமுற்ற தியல்பினன்மித்தஞ்சொல்வாம்

(இ-ள்) நாழிகை சூரியனுதையம் ஓரையுதையம் அருக்கன் நிலைகுல நிலை திக்குநிலை யோனிநிலை சுக்கிரனிலை ராசிநிலை மாதநிலை வாஸ்துபுருஷன்நிலை விஷ்டிகடிகை பக்கம் நாள்கள் வாரம் முதலானவைகளை இனி சொல்லத்தொடங்குவோ மென்றவாறு. (௨௰)

பகல்-நாழிகைபார்க்கும் விவரம்.

சுட்டியைமூட்டிநின்று சூரிலன்வலமதாக
வொட்டியவிரலேழுக்கு முரியதோர்நிழலைப்பார்த்து
மிட்டியவிரலொன்றிற்கு மேவியவிரண்டதாகக்
கட்டியபெருமைக்கண்டு கடிகையாயந்துணைசெய்வீரே.

(இ-ள்) சூரியனை வலமாகவைத்து வலதுசுண்டுவிரலை நடுவாகவளைத்து இரண்டுபெருவிரலுந்தவிர மற்றனடான ஏழுவிரல்களையும் நேரோ ஓட்டிப்பார்க்கில் ஓடினநிழலை ஒருவிரல்விட்டுநின்றால் இரண்டுநாழிகை சென்றதுமுழுவதுமிப்படியே பொழுதுசொல்லத்தக்கதுவென்றவாறு.

இரவில்-நாழிகைபார்க்கும் விபரம்.

உச்சமாமீனைப்பார்த்து வுறுபூசமுதலாயெண்ணி
இங்கையாயிரண்டேகாலிலெத்திய துகையின்கூறை
துற்சென்றமாதத்தைந்து மொழியாறுதெய்திகொண்டு
நிச்சயம்தனைத்தள்ளி நின்றதுகடிகையாமே.

(இ-ள்) உச்சத்தில் நிற்கின்ற நட்சத்திரத்தைப்பார்த்து பூசநட்சத்திர முதலாக நின்றநட்சத்திரமளவும் எண்ணிக்கொண்டு இரண்டேகாலிற் பெருக்கின்ற துகையை சித்திரைமுதலாகச் சென்றுபோனமாதத்தைக் கணக்குப்பார்த்து மாதமொன்றுக்கு ஐந்துபோக ஆறுக்கொன்றுந்தள்ளி நின்றசேடம் நாழிகையாமென்றவாறு. (உஉ)

வேறு.

காட்டுத்துரும்புதனையெடுத்துக் கண்டம்பதினாறயளந்து
பாட்டிலொருதலைதான்போட்டுப் பரிவாமொருதலைதனைநேரே
நாட்டிநிறுத்திநிழலேர்க்கநன்றாய் கூட்டியேபிடித்து
நீட்டிக்கிடந்தநெறிபோக நின்றகடிகைதானாமே

(இ-ள்) பதினாறுவிரற்கடையுள்ள ஒருதுரும்பை பொழுதுக்குநேராக வைத்துக்கொண்டு இரண்டு நுனியையுஞ் சமமாகப்பிடித்துக் கீழேகிடந்ததைவிட்டு மேலேநின்றதை நாழிகையாக்கி பதினைந்து நாழிகைவரையில் ஆச்சுதென்றும் அதற்குமேலிருக்குதென்றும் தெரிந்து கொள்க என்றவாறு. (உ௩)

குளிகனறியவிவரம்.

அந்தக்கிழமைதனைத்தொட்டு ஆகுஞ்சனியாமளவுமெண்ணி
முந்திமூன்றேமுக்காலின்முறையேபெருக்கவருங்குளிகன்
வந்தகுளிகனிலம்பேறக்கமனை புகாத்தசகால்பாட்டத்
தந்தவாகனந்தானேறத் தான்பயம்போமிகநன்றே.

(இ-ள்) எந்தக்கிழமையில் குளிககாலம்பார்க்கவேணுமோ அந்தக்கிழமைமுதலாய் சனிக்கிழமை வரையிலும் கணக்கெண்ணி வந்ததுகையை மூன்றேமுக்காலிற்பெருக்கி கண்டநாழிகை குளிககாலமாக்கிக்கொண்டு மனோகோலஹலரேற்ற முகூர்த்தக்கால் நாட்டவாகனங்களேற தானியங்க ளிருப்புக்கட்ட மெத்த வுத்தமாகுமென்றவாறு. (உச)

ஓரையறியும்படி.

அன்றைக்கிழமையதுதனக்கு ஐந்தாங்கிழமையோரையதாம்
ஒன்றுக்கிரண்டரைநாழிகையா யுதிக்குமதற்காறுங்கிழமை
மன்றில்ருக்கன்புகர்புந்திமதியுஞ் சனிபொன்செய்பலன்கள்
பென்றுமணமாகப்பேறுபெருமைதாழுங்கடும்பகையே

(இ-ள்) அன்றைப்பக்கிழமைக்கு ஐந்தாவதுகிழமை காலையில் உதயமானபோது அதிலொவ்வொன்றுக்கு இரண்டரைநாழிகை நின்று அருக்கனாகில் மரணம்-வெள்ளியாகில்-சுபம்-புதனாகில் - மக்கட்பேறு - திங்களாகில்-புகழ்-சனியாகில்-சாவு-வியாழமாகில்-வஸ்திரம்- செவ்வாயாகில்-கடும்பகையாகுமென்றவாறு. (உரு)

மதிபெழக்காலைநாட்டு வாழ்புதன்கையைவைத்து
விதியினல்வெள்ளிமேய்ந்து வியாழத்திற்குடிபுகுந்தால்
சதியினற்பகைஞர்வந்து தழலினையிடினும்வேகா
பதியதுயிந்திரன்போல் பாரினில்வாழ்வர்தாமே.

(இ-ள்) ஓரை முகூர்த்தம்வைத்து சோமவாரத்தி னுதையத்தில் கால் நாட்டி புதனுதையத்தில் கைவளைகள் முதலானதுகளைப்பூட்டி வெள்ளிக்கிழமை யுதையத்தில் ஓடுமாத்தி வியாழனுதையத்தில் குடிபுகுந்தால் சத்துருக்களாலே நெருப்பிட்டுக் கொளுத்தினாலும் அந்த வீடு வெந்து போகாது அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் இந்திரனைப்போல் போக பாக்கியத்தையடைவார்கள் என்றவாறு. (உசு)

அருக்கனிலையறிய.

காரிபகலேயருங்கிழக்கேகதிரோன்தெற்கேயருமதியின்
சேருந்திங்கள்தொலைணாறுதென்மேற்செவ்வாயன்பதுமே
ஊரிற்புதனுப்பதுவாகுமூரியவியாழய்வடக்காகும்
ஏறும்வெள்ளிவடகிழக்கு எழுபதாகுமருக்கனிலை

(இ-ள்) சனி-பகல்முழுதும்-கிழக்கு-ஞாயிறு-பகல்- தெற்கு - இராமுப்பதும்-திங்கள்-இராப்பகல்-நாறு ஆக-நூறு-ம் - தென்மேற்கு - செவ்வாயக்கிழமை பகல்-முப்பது-இராவிருபது - ஆக - ருய- நாழிகையும்மேற்கேயிருக்கும்-செவ்வாயில்நின்ற - நாழிகை-ருய-ம்-புதன் பகல் - முப்பதும்-ஆக-நாழிகை-சுய-ம்-வடமேற்கு-புதன்- இராமுப்பது - வியாழம்-

யகல்-முப்பது-இராத்திரி-ஊ௰-ஆக-நாழிகை-அ௰-ம் - வடக்கே - நிற்கும்-வியாழம்-ராத்திரி-௰-ம்-வெள்ளி-ராப்பகல்-௬௰-ஆக எ௰- நாழிகையும்-வடகிழக்கில்-நிற்கும் என்றவாறு, (உஎ)

வாரசூலே.

சனியுந்திங்கள்நேர்கிழக்கு தக்கசெவ்வாய்புதன்வடக்கு
இனியவெள்ளிகதிர்மேற்கு யிசைந்தவியாழந்தெற்காகு
மினியசிவனார்கைச் சூலத்தெதிரேசெல்லலாகாது
கனியாப்பிணியுமதனலாங் கலங்குணர்ந்துநடவீரே.

(இ-ள்) திங்கள்-சனிகிழக்கே-சூலம்-செவ்வாய்புதன்-வடக்கே - சூலம்-வெள்ளியும்-ஞாயிறும்-மேற்கே- சூலம் - வியாழக்கிழமை - தெற்காகும் - ஆகையாலிந்த வாரங்களி லிந்ததிக்குகளில் பிரயாணமாகலாகாது அப்படி பிரயாணமானால் அதனால்பலவிதமான துன்பமுண்டா-எ-று.

சூலக்காலமறிய.

திங்களுஞ்சனிஞ்சூலந் திகழ்ந்திடுங்கடிகையெட்டாம்
பொங்குபொன்னிருக்குந்தெற்கு புகர்திர்மேற்கிராறும்
அங்குசன்வடக்கிராறு மத்திசைபுதனீரெட்டில்
தங்குசூலத்தையீசன் தரணியிலிடுவார்தானே

(இ-ள்) திங்கட்கிழமையுஞ்-சனிக்கிழமையும்-எட்டுநாழிகையளவும்-வியாழக்கிழமை-வெள்ளிக்கிழமை -ஞாயிற்றுக்கிழமை-மேற்கே- ௰உ-நாழிகையளவும்-செவ்வாய்க்கிழமை-வடக்கில்-௰உ-புதன்கிழமை - ௰சு-நாழிகையளவும்- சூலகாலமாமென்றவாறு. (உசு)

திக்குநிலையறிய.

இந்திரன்கிழக்கேயாகுமெரிக்குத்தென்கிழக்குதிக்காம்
அந்தகனிருப்புத்தெற்காம் அரியவிலுதிதென்மேற்காம்
சந்தித்தவருணன்மேற்கு சார்ந்தவாயுவடமேற்காம்
மந்திரிவடக்கதாகும் ஈசானன்வடகிழக்கே-

(இ-ள்) இந்திரன் - கிழக்கு - அக்கினி - தென்கிழக்கு-இயமன்- தெற்கு- நிருதிதென்மேற்கு - வருணன் - மேற்கு - வாயு - வடமேற்கு-குபேரன் - வடக்கு - ஈசானியன் - வடகிழக்குத்திசையாமென்றவாறு.

பார்க்கு
சேர்க்கு

போனிநிலைகாண- வேறு.

எர்க்குமிழக்குகொடியாகும்பகருந்தென்கீழ்ப்புகையதுவாம்
காக்குவடகீழ்ம் துசிங்கமதாம்தென்மேல்மூலைநாயாகும்
வடமேற்குயிடைசந்தகழுதைவடக்கானை
தந்தவா... நமதிக்கண்டவெட்டும்யோனியதே.

(இ-ள்) கிழக்கு-கொடி-தென்கிழக்கு புகை-தெற்கு-சிங்கம்-தென்மேற்குநாய்-மேற்கு ரிடபம்-வடமேற்கு - கழுதை - வடக்கு-யானை-வடகிழக்கு - காகம்-இவையெட்டும் யோனிநிலையென்றவாறு. (௩௧)

இதன்பொருத்தம்

கொடியேயாகிற்றிருவாகுங்கொலையேகாட்டும்புகையாகில்
நெடியசிங்கம்வெற்றியதாம்நின்றநாயேசூற்றமதாம்
நொடிக்கும்ரிடபமிகநன்றாம்நோக்குங்கழுதைநோயாகும்
படிக்குங்கரியுமிகநலமாம்பரவுங்காகம்பொல்லாதே

(இ-ள்) யாவனொருவன் பொருத்தங்கேழ்க்கவந்துநிற்கின்றதிசைகிழக்காகில், திருவுண்டாம்-தென்கிழக்காகில் - கொலையாம்-அக்கினிபார்வையாகும் - தெற்காகில் - சிங்கமாம் - தென்மேற்குநாயாகும் - சூற்றம்பொல்லாது மேற்காகில் - ரிடபம் மிகவும் நல்லது வடமேற்காகில்-நோயுண்டு - வடக்காகில் - யானை - நல்லது - வடகிழக்காகில் - காகம்-பொல்லாது-எ-று (௩௨)

சுக்கிரனிலையறிய-வேறு

வெள்ளியெதிரும்வலக்கண்ணுமேவுமதிலோர்வினைசூழும்
வெள்ளிபிறகுமிடக்கண்ணுமேவுமாகில்மிகநன்றாம்
வெள்ளிபாடுமூடத்துள்யேவுவோர்க்குமிகத்துன்பம்
வெள்ளிநிலையின்விதியுணர்ந்துவிளங்குமனையிற்குபேபுகுமே

(இ-ள்) குறுக்கிட்டசுக்கிரனில் - எதிரும் - வலக்கண்ணுமாகாது-பின்னும்-இடக்கண்ணுமாகில்-நல்லது - வெள்ளியின்பாடும் - மூடமும்ஆகாது - ஆகையா லிதையறிந்து புதுமனைகோலவும் குடிபுகவும்நாள்பார்க்க என்றவாறு, (௩௩)

மேடரிடபநேர்கிழக்குமிதுனந்தென்கீழ்த்திசையாகும்
தேடுங்கடகஞ்சிங்கமதுதெற்குதென்மேற்றிசைகன்னி
கூடுந்துலாமும்விருச்சிகமுங்குறித்தவடமேற்றனுவாகும்
நீடுமகரங்குடம்வடக்குநிலையாம்வடகீழ்மீனதுவே

(இ-ள்) மேடம்-ரிடபம்-கீழ்த்திசை - மிதுனம் - தென்கீழ்த்திசை-கடகமுரி-சிங்கமுந்-தென்திசை - கன்னிதென்மேற்கு - துலாம்- விருச்சிகம்-மேற்கு-தனுசு-வடமேற்கு-மகரம் - கும்பம் - வடக்கு - மீனம் வடகிழக்காமென்றவாறு. (௩௪)

அகரமுதலிசைன்மமூன்றுமைந்துடனாறுமேழும்
பகருமொன்பதுவுமபத்தும்பதினொன்றுநன்மையாகும்
இகழுமிரண்டும்நான்குமெட்டுமீராறுமாகா
புகழுமாராசிதன்னிற் பொருத்தமதுமாத்திடாயே

(இ-ள்) ஜென்னமும்-௧-௫-௬-௭-௯-௰-௰௧ - இந்தராசிகள் - பொருந்தும் இதுகள் தவிர - ௨-௪-௮-௰௨ - பொருந்தாது - ஆகையால்ஜென்மநட்சத்திரமாவது - நாமநட்சத்திரமாவது - பார்த்து சொல்லவும் என்றவாறு. (௧௫)

வட்டமேடமீனகும்பம்வடக்குமேற்குவாசல்தாம்
விட்டமகரந்தனுவுந்தேள்விளங்குமேகுந்தெற்காகும்
தொட்டதுலாமுங்கன்னிசிங்கந்துலங்குதெற்குங்கிழக்காகு
மட்டக்கடகமிதுனஞ்சேர் மதிக்குங்கிழக்குவடக்காமே

(இ-ள்) மேடம்-மீனம் கும்பம் - இந்தமூன்று - ராசிக்காரனுக்கும் தெற்கும் - கிழக்குமாகு - மகரம் - விருச்சிகம் - தனுசு - இந்தமூன்றுக்கும் மேற்குந் - தெற்குமாம் - துலாம் கன்னி - சிங்கம் - இம்மூறுக்கும் - தெற்குங் கிழக்குமாம் - கடகம் - மிதுனம் - ரிடபம்- இம்மூன்றுக்கும் கிழக்கும்-வடக்குமாகவாசல்வைத்துக்கொள்ளவுமென்றவாறு.

ஆனியுங்கன்னிமிக்கஅந்தமார்கழியினூடு
கூனியிந்நான்குமாதங்குடிபுகார்மனையுங்கோலார்
ஈனமுற்றிடுமிம்மாதத்திவைசெயிற்றலையாமோயாம்
மானினுந்தேவரேனும்மாள்வதுதின்னமாகே

(இ-ள்) ஆனி-புரட்டாசி-மார்கழி-பங்குனி-இந்தநான்குமாதத்திலும் வீடுகட்டி தலையார்தபோயும் வறுமையுமுண்டாம் தேவர்களானாலும் பொல்லாப்பையடைவார்கள்-எ-று, (௧௭

உதாரணம்

ஆடிதிங்களில் ராவணன்பட்டதும் ஆலித்தேபெரும்பாரதமார்கழி, பீடிக்கிம்பிரட்டாசியிரணியன்பேதமாப்க்கால காலனஞ்சுண்டதும் பாடிக்காமனெரிந்தது பங்குனி பார்விட்டோடி னம்மாபெலியானியில், நாடித்திங்களில் நன்மனைகோலிடில்நற்றலமகன்மேகுவருள்ளமையே.

(இ-ள்) ஆடிமாதத்தில் இராவணன் முடிகுலைந்தான் மார்எழி மாதத்தில் பாரதயுத்தமுதலான வீரனைபொல்லாங்குகள் விளைந்தனபுரவிடாசியில் இரணியன்மாண்டான் பங்குனிமாதத்தில் சிவன் ஆலகாலவிஷத்தை யமுதாகக்கொண்டார் மன்மதன் எரிந்தான் மாபெலிச்சக்கிரவர்த்தி ஆனிமாதத்தில் ஊரைவிட்டோடினார் ஆகையால் ஆனிமாமுதலாகிய மேற்சொல்லிய மாதங்களில் மனைகோலவாவது குடிபுகவாவதுயத்தனித்தால் அந்தயிடத்தை விட்டு நீங்குவதுமல்லாமல் பிச்சைக்குப் போவார் தேவர்களாலுந்தடுத்திடவரிதாம்-எ-று, (௧௮)

வாஸ்துவின்கிடை.

எத்திசையெனினும்பாம்புஇரவிதானிற்கும்ராசி
அத்திசைகாலைநீட்டியதற்கெதிர்தலையைவைத்து
உத்திடுமிடக்கைகீழாயோங்கியவலக்கைமேலாம்
மைத்தடங்கண்ணினாளே வாஸ்துவின்கிடையதாமே

(இ-ள்) வாஸ்துவின் கிடக்கையெப்படியெனில் சூரியனின்ற இராசியிலே காலைநீட்டி அதற்குநேரானராசியில்தலையைவைத்து இடக்கைகீழும் வலக்கை மேலுமாக ஒருக்களித்துக்கொண்டுகிடப்பன் எ-று, (கூகூ)

வாஸ்துபுருஷனெழுந்திருக்குநாள்.

எத்துஞ்சித்திரையொருபத்தில் இசைந்தரிடபமூவேழில்
சேத்தவணிகன் ஆடியுடன்சேர்பதினைன்றுவணியாறில்
கார்த்திகையெட்டாறில் தைகாணுமாசியிருபதினில்
வாஸ்துகிடைவிட்டெழும்போதாம்மனையின்வாசற்சேர்வையே

(இ-ள்) சித்திரைமாதம்-பத்தாந்தேதி-வைகாசிமாதம்-இருபத்தோராந்தேதி-ஐப்பசியும்-ஆடியும்-பதினோராந்தேதி-ஆவணிமாதம்- ஆறாந்தேதி-கார்த்திகைமாதம்-எட்டாந்தேதி-தைமாதம்- பனிரண்டாந்தேதி-மாசிமாதம்-இருபதாந்தேதி-வாஸ்துபுருஷன் எழுந்திருக்குநாள்-எ-று, ()

மேனோக்குநாள்.

ஓண்மாதிரைபூசமுரோகணி
யானவுத்திராமூன்றுசதையமோ
டனியானஅவிட்டமோடொன்பதும்
நாணமின்றிமேனோக்கியநாட்களே

(இ-ள்) திருவோணந் திருவாதிரை பூசம்-ரோகணி-உத்திரம் - உத்திராடம்-உத்திரட்டாதி- சதையம்-அவிட்டம்-இவ்வொன்பதுமேனோக்கியநாளாகுமென்றபாறு, (சக)

பக்கநோக்குநாள்.

போதமாய்படர்நாட்சோதிசித்திரை
பேதமின்றியவசுபதிமான்றலை
ஆதியஸ்தமனுஷமும்ரேவதி
போநற்புனர்பூசமுங்கேட்டையே

(இ-ள்) சுவாதி-சித்திரை-அசுபதி-மிருகசீரிடம் - அஸ்தம்-அனுஷம்ரேவதி-புனர்பூசம்-கேட்டை பக்கநோக்கியநாளென்றவாறு, (சஉ)

கீழ்நோக்குநாள்.

பரணிகார்த்திகைபாம்பும்விசாகமும்
முரணிமுப்பூரமூலமகத்தொடு
தரணிமீதினிற்றனிவையொன்பதும்
கிரலமுன்றியகீழ்நோக்குநாட்களே

(இ-ள்) பரணி-கார்த்திகை-ஆயிலியம்-விசாகம் - மூலம் - பூரம் - பூராடம் - பூரட்டாதி - மகம் - இவையொன்பதும் கீழ்நோக்கிய நாள்களாம்-எ-று, (சரு)

மேற்கோள்.

யக்கநோக்கியநாட்கள் ஊர்வபோகஉமவுகூடபூமியிடம்
பிடிக் சபடர்பயிரிட வளரிடங்கோலபடைகூட
பலிசையிட புஸ்டங்கங்கள்தேட வுரியநாளாகும்
கீழ்நோக்கிய நாட்களில் கிணறுவெட்டகுளங்கள் ஏரிகள்வெட்ட,
வாய்க்கால்கள்வெட்ட குழிவெட்டதானியம் விதைக்க
கிழங்குபதிக்க கீழ்ப்பயிரிட வுரியநாள்களாகும்

ஏரிநாள்.

விரிகதிர்மாமகம்விசாகந்திங்களாம்
அருங்குசனுதிரையாயில்யம்புதன்
விரைகுருசதையமும்வெள்ளிரோகணி
இரைசனிபூராடமெரிக்குநாட்களே

(இ-ள்) ஞாயிறு - மகமும், திங்கள் - விசாகமும், செவ்வாயி - திருவாதிரையும், புதன்ஆயில்யமும், வியாழம்-சதையமும்,வெள்ளி,உரோகணியும், சனி - பூராடமு மாதலால் இந்நாட்களில் புதுமனைகோலிலிப்படுமென்றவாறு (சச)

வாரவுற்பத்தி.

செங்கதிரோனுதித்தநன்னாட்பரணிலாகும்
செழுமதிக்குச் சித்திரைசெவ்வாயுத்திராடம்
பொங்குபுதனவிட்டமென்பார்பொன்னிற்கேட்டை
புகர்பூராடஞ்சனிரேவதியினளில்
மங்கையமைமணம்புணரில்விதவையாவாள்
மனையெடுக்கிறபாழாகும்வழிநடக்கார்
செங்கயற்கண்ணாள்சேர மலடியாவாள்
சிறுகுழந்தைபிறந்திடினுமரணந்தானே

(இ-ள்) ஞாயிறு பரணி- திங்கள்-சித்திரை - செவ்வாய்-உத்திராடம்-புதன்-அவிட்டம்-வியாழம்- கேட்டை-வெள்ளி - பூராடம்-சனி-ரேவதி-இந்நாட்களில்-திருக்கலியாணஞ்செய்யில் பெண்விதவையாவாள்- புதுமனைகோலிற் பாழாகும் ஊர்ப்பிரயாணஞ்செய்யில் மரணமாம் நிஷேகமுகூர்த்தஞ்செய்யில் மலடியாவாள் குழந்தை பிறந்தால் இயமனுக்கிரையாகுமென்றவாறு. (சரு)

இந்நாளில் மனைகோலும்பலன்.

அஞ்சுமகமுமனுட மொருமூன்றுநவம்
மிஞ்சுகார்த்திகையுமிக்க மேவொணுரோகணியும்
நஞ்சுநான்குத்திரமிந் நாளில்மனைகோலுமவர்
துஞ்சுவரவ்வாண்டுக்குள் துய்யமயன்சொல்லிதுவே

(இ-ள்) பஞ்சமியும்-மகமும்- திருதிகையும்-அனுஷமும் - நவமியும்-கார்த்திகையும் அஷ்டமியும்-ரோகணியும்- சதுர்த்தியும்-உத்திரமும் கூடினநாளில் மனைகோலில் அந்தவருஷம் முடிவதற்குள் மனைக்குடையவர் மரணமடைவார்-எ-று. (சசு)

காலற்றநாள் தலையற்றநாள் இடையற்றநாள்
முழுநாள் இவைகளின்பலனறிய.

உன்னுங்கார்த்திகையுத்திரமு முத்திராடங்காலற்ற
அன்னமிருகசித்திரையு மவிட்டமிடையற்றகுவாகும்
பொன்னின்புனர்தம்விசாகமுடன் பூரட்டாதிதலையற்ற
மன்னுமிவ்வொன்பதுநீங்க மற்றவையெல்லாமுழுநாளே

(இ-ள்) கார்த்திகை உத்திரம்-உத்திராடம்-காலற்றநாள்-மிருகசிரிடம்-சித்திரை அவிட்டம் இடையற்றநாள் - புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி-தலையற்றநாள்-இந்நாட்களில் மனைகோலினும் வழிநடக்கினும் மரணமாகும் விவாகஞ்செய்யில் அந்தப்பெண் விதவையாவாள் இந்த நாட்களை க்குறித்து கற்றுணர்ந்த பெரியோர்கள் இனி எந்தநூலிலாவது இதற்குச்சமாதானமாகச் சொல்லி இந்தவிதியைத் தவிழ்ந்து நடாத்துவாராயின் நாசகாலந்தவறாது ஆகையால் இந்நாட்களை நீக்கி- மற்ற பரணி-அசுபதி-ரோகணி-திருவாதிரை-பூசம்-ஆயிலியம்-மகம்-அஸ்தம்- சோதி-அனுஷம்-கேட்டை-மூலம்-பூராடம்-திருவோணம்- சதயம் - உத்திரட்டாதி-ரேவதி-இப்பதினெட்டு நாளும் முழுநாளாதலால் இந்நாட்களில் அவரவர்களுக்குப் பொருந்தியநாட்களில் மனைகோலல்முதலிய சுபகாரியஞ்செய்யவும்-எ-று. (சஎ)

க்ஷேத்திரநாள்பொருத்தம்,

மூன்பத்திலாதிவாரமுகூர்த்தமிட்டாய்ந்துணர்ந்து
அன்புடன்முதஞ்கூட்டியடைவிலேயெண்ணிநீக்கி
யொன்பதுமொருக்கண்ணாறுமுற்றபன்னிரண்டுகண்ணும்
பின்புறவாறுநாளுங்கண்ணிலைபிரித்துப்பாரே

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையை முகூர்த்தமாகவைத்து அசுபதிமுத லாகவெண்ணி நீக்கி நின்றபாகத்தை அடைவிலேயென்னை என்பது வந்தால் ஒருகண் பனிரண்டுக்குட்பட்டால் இரண்டுகண்ஆறுக்குட்ப ட்டால் குருடென்றுசொல்வது ஆகையால் இவ்விதியையுணர்ந்துகுரு ட்டுநாள் ஒருகண்ணினை நீக்கி மற்றநாள்களைக்கொள்ளவும் என்ற வாறு. (௪௮)

வாரபலன்.

பிறந்தநாளிரண்டுநான்கு மொன்பதுமெட்டுமாறுஞ்
சிறந்தசீர்வகையுமற்றுஞ் சேர்ந்திடுஞ்சம்பத்தாகும்
அறிந்தநூலனைத்தும்வல்லோ ராந்துமூன்றேழுநீக்கி
சிறந்ததாய்மொழிந்ததெல்லாந்திடமுடன்பொருத்துங்காணே

(இ-ள்) ஒருவன்பிறந்தநாளும்-௨-ம்-நாளும்-௪-ம்-நாளும்-௯-ம்- நாளு ம்-௮-ம்-ஆறும்-நாளும்-சிறப்பும்- சீரும்- மற்றுமுள்ள சம்பத்துக்கள னைத்தும்-தெரிந்தபெரியோர்கள்-௫-௩-௭-இவைகளைநீக்கி- நன்மையை த்தருமதென்று சொன்னநாளில் யாவையுஞ் செய்வர்கள்-எ-று. (௪௯)

ஞாயர்தானலையச்செய்யும் நலந்தருந்திங்களாகில்
சேயன்றிப்படுவதாகும் செழும்புதன்மகப்பேறாகும்
வியமாம்வியாழம்பொன்னும் வெள்ளியேவிளைவுண்டாகும்
ஆயதோர்சனிபெருக்காம் அகந்தனைக்கோலுங்காலே

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமை அலையப்பண்ணும் திங்கள் நன்மையை த்தரும் செவ்வாய் திப்படும் புதன்- சந்தானசம்பத்துண்டாம் வியாழம் பொருள்சேரும் வெள்ளி தான்யமுண்டாம் சனி வமிசவிருத்தியாகும் ஆகையாலிந்ததினங்களறிந்து மனைகோலவும்-எ-று, (௫௰)

நல்லதோர்சிற்பனுக்கு நன்மனைகோலும்போது
சொல்லுநற்றுகிலும்பொன்னுஞ் சுகந்தமுமிகவளித்து
வல்லவர்வகுத்துக்கேட்டு வருந்தியேபொருத்தம்பார்த்து
சொல்லவம்மயனுஞ்சொன்ன சுருதியும்பலிக்குந்தானே

(இ-ள்) ஒருவன் மனைகோலும் நாளில் சிற்பநூலாசிரியனுக்கு புதிய சோமனும் திகப்பொருளும்சந்தனம் புட்பம்முதலான வெகுமதியுமளி த்து வருந்திக்கேட்கவென்று மயனால் சொல்லியதென்றவாறு. (௫௧)

சகுனமறிய.

மனையதுகோலவென்று வந்தவனோடுசிற்பன்
நினைவுடன்சொல்லும்போது சேருமேற்காமரூபி
வனிதையாம்நிறமும்பொன்னும் வாலிபமதுவுங்கண்டா
லனையகாலத்திலுந்த னதுந்தனைக்கோலுவாயே

(இ-ள்) புதிதாய் வீடுகட்ட யத்தனித்துவந்த உடையவனோடு சிற்பநூல்வல்லவனும் அந்தவீட்டைநோக்கிப் போகையில் காமுகியாயிருக்கின்ற சிறுபெண்ணும் பொன்போன்ற மேனியையுடையவனும் வாலிபமுடையவனும் எதிர்ப்பட்டால் உடனே வீட்டைக்கட்டுவாயாகவென்றவாறு, (௫௨)

வலமிகச்சொல்லிப்பல்லி வாலிபமிடத்திற்சொல்லின்
பலமிகவுடையனுதும் பணித்திடுங்கருமமன்றும்
குலவியமனையுமோங்குங் கொடும்பகைவிலகிப்போகும்
பலமிகவுடையராவர் பல்லியினியல்புதானே

(இ-ள்) சிற்பனும் மனைக்கெசமானும் மனைக்குட்சென்றுநிற்கும்போது கெவுளிவலப்புறத்திற்சொன்னால் வாலிபமாம் இடப்புறத்திற்சொன்னால் மிகுந்தபலனையடைவன் செய்யத்துவக்கிய வீடும்சீக்கிரமாய்கட்டிமுடியும் மனையும்நேத்தியாய் ஸ்தாபனப்படும் அந்தமனையில்வசிப்பவர் யாதொருபழுதுமில்லாமல் பலனை அடைவா ரென்றவாறு. (௫௩)

கரியகுயில்செய்பமயில் போற்றுநலனையான்
வரியமனைப்ரியசிவல்வலியகொடுகாகம்
உரியவலம்போகவிவையூனமிலைநரியன்
அரியபுலியோந்தியெலிகேழலொடுநாகம்

(இ-ள்) குயில்-மயில்-செய்போத்து-நனையான்- மான்-சிவல்- வலியன்- காகம்- நரி-புலி-ஓந்தி- எலி- பன்றி - நாகம்-இவை வலம்போக நன்மையென்றவாறு, (௫௪)

ஓடுமுயல்கருடனொடு கரடிநலபுல்வாய்
ஆடுபருந்தட்டையுடன்சுட்டிமுதல்சூரன்
ஆடிதொடுசாரையொடு மந்தியுடனாயும்
ஓடியிடம்போகிலிவையூனமிலதாமே

(இ-ள்) முயல்-கருடன்- கரடி - புல்லைமேய்ந்து வாயப்புல்லுடனேவருகின்ற ஆடு-பருந்து-நிலஅட்டை- சுட்டி சூரைக்குஞ்சு-சாரைப்பாம்பு குரங்கு- நாய்-இவைகள்-குறுக்கிட்டு ஓடுமாகில் மிகவும்நன்மையாம் இதில் சாரைதரிசனம்-சன்யாசிக்கும் சம்பத்தை யுண்டுபண்ணுமென்று தெளியவும் என்றவாறு, (௫௫)

வெள்ளியபுறாவினோடு விளங்கியபசுவுமாதும்
ஒள்ளியமானினோடும் உருவுடன்காணுமாகில்
தெள்ளியகருமநன்றாஞ்சிரமனைபுதுக்கச்சிராம்
வள்ளியராகிவாழ்வார்மண்ணிடைமனையுள்ளோரே

(இ-ள்) வெண்மையான-புறா - பசுவு- பெண்பிள்ளை மான் இவைகள் காணுமாகில் செய்கருமம் நன்மையைத்தரும் மனைகட்டவும் நன்மையாம் நிலைமைபெற்றவாழ்வையடைவார்—எ-று, (௫௬)

மதுக்குடமாங்கிஷங்கள்மதுரமாம்பால்நெய்நீரும்
கதித்திடுவாசங்கட்டுக்கமுத்தியும்பூர்ணமாகும்
மதித்திடுமானைகோவுமாம்பரிபுரவிதானும்
எதிர்த்திடத்தோணநன்றாமெய்தியகருமந்தானே

(இ-ள்) கள்ளுக்குடம் மாமிசம்-பால்-நெய்- நீர் - வாசனைத்திரவியம் கட்டுக்கமுத்தி-நிறைகுடம்-யானை- இரசன்-குதிரை- பல்லக்கு- இவைக ள் எதிர்ப்படில் நன்மையத்தருமென்றவாறு, (௫௭)

அவசகுனங்களறிய.

எறும்புதானெழுங்குவிட்டே யேகிடிலியற்றவேண்டாம்
கறங்கொடுகரையானேந்திகண்டிடிற்கருதவேண்டாம்
பறந்துதான்சுரும்புயர்ந்து பரவிலும்வேண்டவேண்டாம்
திறம்படுமொழியினாளே தீமையுண்டிதனுல்தானே

(இ-ள்) எறும்பு- ஊறலும்- கரையான் மொய்த்தலும்-ஓந்தி காணலும்-பருந்தும் வண்டுகளும் பறந்து நெருங்குமாகில் கனவிலும்அம்மனையைக் கோலவொண்ணாதென்றவாறு. (௫௮)

(நிலத்தினியல்பு.)

அருககனின்றதுகிழக்கு அருஞ்சோமன்வடக்கதாகும்
திருத்தியமேற்குதெற்கு திகழ்ந்திடும்பூமிமேலே
வருத்தமில்லாமல்வாழ்வர் மனையினையெடுத்துக்கொள்ளும்
கருத்தினையயனுரைத்த காரணமிவைகள்தானே

(இ-ள்) அருக்கனின்றது- கிழக்கு, சோமனின்றது- வடக்கு, இவை யிரண்டுந்தாழ்ந்தும்- தென்மேற்குயர்ந்திருப்பதுமான ஓர்பூமிகடைக்குமாகில் அதில் மனைகோல சகலசம்பத்துமுண்டாமென்றவாறு. (௫௯)

யல்லிகளோந்திபோலும் பாம்புடன்பறவைபோலும்
மல்லிகைமுடித்தகூந்தல் மங்கையேமேற்குந்தெற்குஞ்
சொல்லியதாழ்ந்தபூமி சதுர்முகன்வரினுஞ்சோரான்
துல்லியப்படவேயெல்லாந் துணிந்துநீயறிந்துகொள்ளே

(இ-ள்) பல்லி- ஓணான்- பாம்பு- பறவையைப்போலுமுள்ள பூமியும் மேற்குந்- தெற்குந் - தாழ்ந்தபூமியும் மனைகோலிற் சிறப்புமிகுங்கும்—எ-று, (௬௰)

குடதிசைவடக்குத்தாழ்த லுத்தமமாகுமேற்கு
இடமுடனுயரமெத்தயினிமைவந்தெய்துஞ்சால
திடமுளசுற்றுத்தாருங்கெளிந்தநீர்சூழல்போலப்
படருடன்காணிகோடிவய துடன்வாழ்வர்தாமே

(இ-ள்) மேற்கும்- வடக்குந் - தாழ்ந்தும் அல்லது - மேற்கு-உயர்ந்தும் வடக்குதாழ்ந்துமுள்ள பூமியின் மனைகோலில் குடும்பவிர்த்தியுடனே ஆயிசுபெற்று வாழ்வார்கள்—எ-று. (௬௧)

பலபலவழியேயாதல்பதுங்கிச்சிற்மட்டியேயாதல்
சிலசிலவழியேயாதல் சேர்ந்திடுபூமியாகில்
புலவருமவர்கட்காசிபுகழ்பெறப் புகன்றிட்டாலும்
பலவுகன்டிசைந்தபூமி பாழ்சுடுகாட தாமே

(இ-ள்) பலர்களுக்கும் பாட்டையாயிருந்த பூமியில் மனைகோலில் தனதான்யமுதலிய பொருள்களும் மாடுகன்றுகளும் அழிவதுமல்லாமல் யசமானுடைய பெண்டுபிள்ளைகளும் இறந்துவிடும்சுடுகாட்டுக்கொப்பாகும்—எ-று. (௬௨)

நாடியபூமிதன்னைநலமுடன் துடிபோல்வேல்போல்
நீடியகனாகள்தோட்டம்நில்சுழிமகரஞ்சூழும்
ஓடியகயமுநீக்கியுயர் தவப்படியேயாகில்
சூடுவேற்கன்ணினுளே குல்மனைதேறுதென்னே

(இ-ள்) உடுக்கையைப் போலுள்ள பூமியும் வேல்போன்ற பூமியும் எரிக்கரைக்கருகிலுள்ள பூமியும் சோலைகளைச்சார்ந்த பூமியும் அகன்றகுளத்திற் கருகிலுள்ள பூமியும் சன்னியாசிகள் வசிக்கும்பூமியும்மனைகோலுவதமாகாக வாமகோலில்நசித்துப்போம்—எ-று, (௬௩)

ஆலயமுகப்புமையமணுகிடும்பிசாசுகோயில்
நீலியாந்துர்க்கைதேவிநெறியதாய்வலக்கணேட்டம்
சாலையாம்வழியிவ்வண்ணஞ்சமர்த்தனுந்துணிந்துகொள்ள
ஆலயம்பதிவுகொள்ளாதாமெனவுரைக்கலாமே

(இ-ள்) ஆலயத்திற்குப் பக்கத்திலுள்ள பூமியும் எதிரிலுள்ள பூமியும்பசாசுமுதலிய கிரகங்கள்வசிக்கும் பூமியும் காளிகோயிலின்வலப்பக்கத்திலுள்ளபூமியும் சாலையிலுள்ளபூமியும் மனைகோலுவதற்குதவாவாம் தடுக்குத்தன முடையவன் துணிந்து கோலில் பெண்டு பிள்ளைகள் மாடுகன்று முதலியவைகளை யிழந்து தனியனாய் இரந்து தின்று சீவிப்பன்—எ-று, (௬௪)

புன்னையின்பூவைப்போலும் பொருந்துதாமரையைப்போலும்
பன்னுபாதிரியைப்போலும் பசுவினீர்கெந்தப்போலும்
பின்னையுஞ்சிலமணங்கள் பிறந்திடினிறைந்தவாழ்வோ
டன்னையுஞ்சுற்றத்தோடு அநேககாலங்கள்வாழ்வான்

(இ-ள்) புன்னைப்பூ- தாமரைப்பூ - பாதிரிபபூ-பசுவினீர்- சந்தனமுதலிகணம் பொருந்திய பூமியில் மனைகோவில் நிறைந்தசெல்லும்பெற்று சுற்றத்தாரோடு அனேககாலம்வாழ்வன்— எ-று, (சுரு)

முச்சதுரானபூமி முடுகியபுலானுங்காறி
இச்சையாய்மேற்குத்தெற்குயிடமுடன்கிழக்குத்தாழ்ந்தால்
வச்சதோர்நிதியம்வேறாய்மக்களுமாணமென்றும்
அச்சமுந்தோன்றும்பாழாம் அம்மனையியல்புதானே

(இ-ள்) முக்கோணமான பூமியிலும் மாமிசநாற்றமுடைய பூமியிலும்-மேற்கு தெற்கு- கிழக்கு தாழ்ந்த பூமியிலும் மனைகோவில்தனதான்யமுதலிய சம்பத்தும்போய் புத்திரர்கள் மரணமடைவதல்லாமல் அம்மனையும் பாழாம்—எ-று. (சுகூ)

அழிந்திடுங்கோயில்தானும் அரவுசேரிடம்வலங்கள்
விழுந்திடும்பறையர்செம்மான்மேவியமுனிகளொல்லை
அழிந்திடுஞ்சுடுமக்காடுமமர்க்களத்தவனியாகா
ஒழிந்திடுமந்தவில்லமிலங்கியவனமதாமே

(இ-ள்) பாழடைந்த கோயில்நிலத்திருல் பாம்புவசிக்கும் பூமியிலும் பறைச்சேரியிருந்தபூமியிலும்முனிவர்கள் வசிக்கும் பூமியிலும்சுடுகாட்டிலும் போர்புரிந்த பூமியிலும் மனைகோவில் யசமான் சுற்றத்தாரோடழிந்தி வீடும்காடாம்—எ-று, (சுஎ)

தன்றிறத்துடனேபார்க்கத் தக்கதோர்சூலம்போலும்
நின்றுகாண்பதுவேபாகாரீணிலமொத்துக்காணில்
சென்றுபோம்படிநீபாராய் செல்வமுண்டதிலோாளும்
நன்றிதென்றறிந்துமுன்னோர்நலம்பெறவுரைத்தவாறே

(இ-ள்) சூலத்தைப்போ லமைந்தபூமியில் மனைகோவில் யசமான்சகல பாக்கியத்தையுமிழந்து நசித்துப்போவன்நான்குதிக்குமையமும் சமமானபூமியில் மனைகோவில் சகலபாக்கியமும்பெற்றுபெண்டுபிள்ளைகளுடன் சுகித்திருப்பன்— எ-று, (சுஅ)

மனையை அறுபத்து நாலுபாகஞ்செய்து வீடுகட்டும்விதி.

நடுமனையொன்றினுக்குமெட்டெட்டாமறையைப்பக்கீறில்
நடுவதுபிரமத்தானநான்குமூலையும்பேயாக்கம்
அடைவிலேயெட்டுந்தேவராகுவர்நாற்பத்தெட்டும்
குடிபலர்க்காகுமென்றுகூறினர்மயனூல்வல்லோர்

(இ-ள்) ஒருமனையை-௬௪-அறைகீறில் நடுநாலறையும்- பிரமன்தானமாம் அதனைபடுத்தமூலை நாலறையில் - பேய்கள் - காவலாம்-அதனையடுத்த- எட்டறையில் தேவர்கள் காவலாம் மற்றநாற்பத்தெட்டறையும்குடிகளுக்காம்—ஏ-று, (௬௬)

இனிதாகியபால்நாறிய வினிப்புற்றமண்மறையோர்
துனிவாகியபால்நாறியதுவர்ப்புற்றமண்ணரசர்
புனிதாகியவேர்நாறியபுளிப்புற்றமண்வைசியர்
கனிதாகியநீர்நாறியகைத்தல்சூத்திரர்க்கே

(இ-ள்) பால்வாசனையுடன் இனிப்புற்றமண் பிராமணருக்காம் அதுதுவர்ப்பானால் இராசகளுக்காம் மரங்களின் வேர்போன்றவாசனையும் புளிப்புமுடையமண் வைசியருக்காம் சலத்தைப்போன்ற வாசனையும் கசப்புமுடையமண் சூத்திரருக்காம்—ஏ-று. (௬௭)

நான்குவருணத்தாரு மனைகளுக்குத்திசையறிய.

அந்தணர்தென்றிசையரசர்மேற்றிசை
வந்தனர்வடதிசைவணிகர்க்கேற்றதாமே
தொந்தமாய்ச்சூத்திரர்தமக்குக்கீழ்ச்சுகம்
செந்திருவாழுமத்திருமனைக்குளே

(இ-ள்) பிராமணருக்கும் - தெற்கும் - இராஜர்களுக்கும்- மேற்கும் வைசியர்களுக்கு வடக்கும் சூத்திரர்க்கு- கிழக்குமாகில்அந்தவீட்டில்இலட்சுமி யிடைவிடாமல் வாசம் பண்ணுவாள்—ஏ-று, (௬௮)

மனைகட்டுந்திசையறிய

ஆடிஆவணி மேற்குகீழ்வாசலாம்
கேடின்மகரமக மகிழ்மேல்வாசலாம்
நாடின்மேஷிடபம் தென்னுத்தரதிசை
தேடுதலாய்த்தேள்வடக்குதென்வாசலே

(இ-ள்) ஆடி- ஆவணி-மாதம்- மேற்-சார்பும் கிழக்கு- வாசலும்-தையும்- மாசியும்கிழக்சார்பும்- மேற்குவாசலும்- சித்திரையும்-வைகாசியும் தென்சார்பும்- வடக்கு வாசலும்- ஐப்பசியும்-கார்த்திகையும் வடசார்பும்- தெற்குவாசலுமா மென்றவாறு, (எஉ)

குழிகெல்லும்போதுண்டாகுஞ்சகுனம்.

நாற்றிசைகடுவேயாகவமுகுவட்டம்போல
தாற்றியமூழங்கையாழந்தணிவதாய்க்கெல்லிடல்
தூற்றியசிப்பிகாணில்சுற்றத்தார்கிளையைமாற்றும்
காற்றியகரியைக்காணில்கனப்படுமில்லந்தானே

(இ-ள்) நாற்சவுக்கமாகவும் வட்டமாகவும் மூழங்கையாழத்துக்குக்குழிகெல்ல அதில்சிப்பிஅல்லதுகிளிஞ்சில்களைக்கண்டால்உறன்முறைக்கு நசிக்கும் கரியகப்பட்டால் அந்தவீட்டில் நெருப்புவிழும்—எ-று, ()

பொன்னொடுசெப்புவெள்ளிபொருள்தரும்நன்மையாகும்
பின்னிடுமிரும்போடியம்பித்தளைமத்திபந்தான்
கன்னல்சேர்மொழிஞளேகருங்கல்லோடெலும்புகாணில்
மன்னியமனையாளோடுமற்றதுமழுங்குந்தானே

(இ-ள் பொன்-வெள்ளி- செம்பு-காணில்நன்மையைத்தரும்-இரும்பு ஈயம்இவைகளைக்காணில்-மத்திமபலனாகும் கருங்கல்லும்எலும்புமானால்மனைவியுடனேமற்றுள வாழ்வனைத்தும் நசித்துப்போம்—எ-று, ()

சிலையதுகாணிலாக்கஞ்செங்கதேகனகமாகும்
கிலேசிப்பிகாணிற்பிள்ளைநெடுநாளும்பலநோயுண்டாம்
உலைந்திடுஞ்சருகுகாணில்தையலுக்குறவுண்டாகும்
புலைக்கரியாகிலில்லம்பொறிப்பட்டுவேகுந்தனே

(இ-ள்) கருங்கல்காணில் துக்கம் செங்கல்காணில் பொன்சேரும் கிளிஞ்சில்காணின் பிள்ளையுண்டாகும் ஆனால் பலநாளும் வியாதிப்படைவான் சருகுகாணப்பட்டால் மனையாளுக்குறவுசேரும் கரிகாணில் திப்பொறிவிழுந்துவீடு தீய்ந்துபோமென்றவாறு, (எரு)

கனங்குநாப்புழுவேயாகில்காரியக்குறையுண்டாகும்
குணங்குன்றமோடுகாணில்குடியதுவோடிப்போகும்
பிணங்குறுவேருமற்றல்பெருங்கிளையறுமேயென்பர்
இனங்கியசெங்கல்காணிலிருநிதிவளருந்தானே

(இ-ள்.) நாக்குப்பூச்சிகாணில்காரியங்குறைந்து குணமழியும்ஓடுகாணில் குடியோட்டும். மரத்தின்வேரிருந்தால் அறுபட்டால்பெருகிவளருகின்ற குலமுழுதும் நசித்து இளைத்துப்போம் செங்கல்கண்டால் நன்மையாமென்றவாறு. (௭௬)

குழியில்நீர்விட்டறியும்-சகுனம்.

திடமுளநிலத்திற்சென்றுதெரிந்துநாற்சதுரமாக்கி
நடுவதுவாகக்கெல்லிநாற்றிசைமுழுமுழங்கோலி
வடிந்திடுநீரைவிட்டால்வலஞ்சுழித்தோடில்வாழ்வா
இடமதுவாகச்சுற்றில்டுக்கமேமிகுதியாகும்

(இ-ள்) வீடுகட்டும்படியான விடத்திற்சென்று பூமியின் குறிப்பறிந்து நாற்சதுரமாக்கி நடுவாகக்கெல்லி நாற்புறமும்படிய ஜலத்தை விடும்போது அந்த ஜலமானது வலதுபுறமாய்ச் சுழித்தோடுமாகில் வாழ்வில்மிகுத்திருப்பார்கள் இடதுபுறமாயோடிச் சுழிக்கில்வாழ்வு குறையுமென்றவாறு. (௭௭)

நிறையநீர்வார்த்துவைத்து நீள்கதிரெழுந்தபோது
முறையதில்வந்துபார்த்தால்முன்படிநீருண்டாகில்
விறையவளில்லம்போலவிளங்கிநிதிபெருகுமென்று
செறிவளைகையின்மாதேசெய்யதோர்மயனுஞ்சொன்னான்

(இ-ள்) குழியில்நிறைய நீரைவார்த்துவைத்து மறுநாள்உதயத்தில் பார்க்கும்போது அப்படியே வற்றாமலிருக்குமாகில் ஸ்ரீமகாலட்சுமியினுடைய சுகத்தைப்போல் சகலசவுபாக்கியங்களும் உண்டாகுமென்று மயன்சொல்லியிருக்கின்றார்-எ-று. (௭௮)

வற்றியோர்சிலந்திக்காலாய்வகிர்பிளந்திருக்குமாகில்
உற்றிடுபிணியுண்டாகும்உறுபொருட்கெடுமேயென்றுஞ்
செற்றவர்சிறுத்துவந்துசெல்வத்தைச்சிதைப்பாரென்று
மற்றுநான்முறைமையாலேமகிழ்ந்துடனுரைத்தவாறே

(இ-ள்,) கெல்லியகுழியிலே வார்த்தநீர் மறுநாள் பார்க்கும்போது சிலந்திக்கால்போல் வற்றிவிரிந்திருந்தால் வியாதியுண்டாகும் கைப்பொருள் நாசமாகும் மாண்டுபோன பிதிர்களுஞ் சாபமிட்டு சொத்துக்களை யழித்துப்போடுவாரென்றவாறு. (௭௯)

மண்குறி.

அளந்ததோர்குழியின்மண்ணை யதிலிடில்மிஞ்சில்நன்மை
வளர்ந்தமண்சரியாய்நிற்கில்மத்திபமாகுங்கண்டாய்
அளந்ததுகுறையுமாகில்தர்மமேயென்றானன்றாய்
விளம்பினேன்குழியின்மண்ணில்மிக்கதோர்குறிகள்தானே

(இ-ள்,) கெல்லினகுழியிலே அந்தமண்ணைக்கொட்ட குழிநிரம்பிமி ஞ்சினலுத்தமம் சரியாயிருந்தால்மத்திபம் குறைந்தால் அதமம் என் றவாறு. (அஎ)

கிரகநின்றராசிப்பலன்.

நன்மனையெடுப்போர்க்கெல்லாம்நாளுடைராசிதன்னை
முன்வலங்கொள்வீராகில்முயன்றிடும்கருமநன்றாம்
பன்னெடுங்காலம்வாழ்வார்பயின்றிடுமக்கட்பேறாம்
பின்னிடுங்கொள்வீராகில்பிணியொடுகேடதாமே

(இ-ள்.) இராசியறிந்து வாசல்விடும்படி மனையுடையவன் பேர்வழி ராசியாகுதல் பிறந்தநாளின் ராசியாகுதல்பார்த்து அந்தராசி அவன்மனை க்குமுன்னாகுதல் வலமாகுதல்நிக்கவாசல்விட்டால்நன்மையுண்டாம் அ ல்லது பின்னாகுதல் இடமாகுதல்நிற்க வாசல்விட்டால்தீதாகும் இப்ப டியினமறிந்து மனைக்குவாசல்விடவும்-எ-று. (அக)

வேறு.

புருதிபுந்திபுகர்பதினொன்றினில்
அரியலைாயில்அந்தணன்கேந்திரம்
மருவுலாவியமாளிகைசெய்விரால்
வருஷமாயிரமண்ணில்விளங்குமே

(இ-ள்) புதனும்-வியாழமும், பதினொராமிடத்திலிருக்க அல்லது ஓரையாகவெள்ளி கேந்திரதிரிகோணத்திலிருக்க மனைகோலினல் அந்தம னை ஆயிரம்வருஷம் பிரகாசித்திருக்கும்-எ-று. (அஉ)

வேறு.

இருங்குருவெள்ளிதானும்லெக்கினம்ஈராலேழுநிற்கில்
வருங்கதிராறில்நிற்கமந்தன்பாம்பேழில்நிற்கப்
பெரும்புரங்கோயில்வீடுபிடயேசெய்வீராகில்
திருந்தியவருஷநூறுதீர்க்கமாய்விளங்குமென்றே

(இ-ள்) குருவும்-சுக்கிரனும்-லக்கினத்திற்கு-௪-ல்-எ-ல்-நிற்க-சூரின்-௬-ல்-நிற்க-சனியும்-இராகுவும்-எ-ல்-நிற்க-மனைகோலில் அந்தமனை நா றுவருஷம் பிரகாசித்திருக்கும்-எ-று. (அங)

வேறு.

பரவுதிங்கள்பொன்பத்துறில்நாலுறத்
தரணிசேயசத்தாகப்பன்னொன்றினில்
வரையிலெய்தியவாழ்மனைசெய்திடில்
வருஷமென்பதுமண்ணில்விளங்குமே

(இ-ள்) சந்திரனும்-வியாழமும்-பத்தாமிடத்தில் அல்லது-நாலாமிட த்தில் நிற்கச் செவ்வாய் பலயீனனாய் பதினோராமிடத்தில் நிற்க மனை கோவில் அந்தமனை என்பதுவருஷம் பிரகாசிக்கும்-எ-று. (அச)

பார்மகன்புகர்பானுபொன்னறடன்
ஓரைமூன்றயாைத்தினிலுற்றிட
ஊரிடம்புரமோர்நகர்செய்திடில்
ஏர்கொளரண்டுநூறாண்டுவிளங்குமே

(இ-ள்) புதன்-சுக்கிரன் - ஆதித்தன்-வியாழம்-இவர்கள்-ஆறாமிடத்தி ல்நிற்க அல்லது ஓரையிலேனும் மூன்றாமிடத்திலேனும் ஐந்தாமிடத்தி லேனும்நிற்க மனைகோவில் அந்தமனை இருநூறுவருஷம்பிரகாசிக்கும் என்றவாறு. (அரு)

தூயவோரைபத்தேழினிற்சொல்லிய
மேயதிங்கள்புதன்குருமேவவே
கோயில்மாநகர்கூரகஞ்செய்விரா
லாயவாண்டது நூறுவிளங்குமே

(இ-ள்) ஓரை-அல்லது-பத்தாமிடத்தில்-ஏழாமிடத்தில்-சந்திரன்-பு தன் குரு-இவர்கள்நிற்க-ஆலயம்-ஊர்-கிரகமுதலியவை இயற்றில்நூறு வருஷம் பிரகாசிக்கும்-எ-று. (அசு)

மந்திரியேழில்நிற்கமனையதுசெய்வீராகில்
அந்தகம்புகுதுமுன்னேயரசன்வந்தாண்டுகொள்வான்
புந்திசேயேழில்நிற்கப்புத்திரனொருவன்சாவன்
இந்துவேயேழில்நிற்கவெரிந்துபோமழிவிலென்னே

(இ-ள்) வியாழம்-ஏழாமிடத்தில்நிற்க மனைகோவில் அந்தமனைகட்டி முடிவதற்குமுன் அரசன் சுவாதீனமாகும்- புதனும்-செவ்வாயும் ஏழா மிடத்தில்நிற்க மனைகோவில் அம்மனைக்குடையவன் ஒருபுத்திரனையிழ ப்பன்சந்திரன்-ஏழில்நிற்க மனைகோவில்தீப்பட்டெரிந்துபோம்-எ-று()

உரைபுகர்வியாழந்திங்கள்ஓரையும்பத்தில்நிற்க
வரையரமனைகள்கோவில்வருடமாயிரமுமன்னி
பருமணிநாடரங்கள்பராக்கிரமவர்க்குப்பூமன்
திருவருள்புரிந்தவேந்தர்திருவருள்பெருகுவாரே

(இ-ள்) சுக்கிரன்-வியாழம் - சந்திரன்-இவர்கள் ஓரை அல்லது ஏழா மிடம் பத்தாமிடத்தில்நிற்க மனைகோவில் அந்தமனைதனதான்யங்களு டம் யசமானுடைய சுற்றத்தாருடனும் ஆயிரம்வருஷம்பிரகாசிக்கும் என்றவாறு. (அஅ)

சிற்பனியற்கை.

பொன்னோடுபூணு நூலும்பவித்திரங்கையிற்பூண்டு
சென்னியிற்சிகைகந்தேவதேன்வபூசையில்விருப்பும்
மன்னியகுலமுமிக்கமனம்பரிசுத்தனாகி
அன்னியசாதிகூடாதறிந்தவன்சிற்பனாமே

(இ-ள்) உருத்திராட்சமாலையும் பூணுநூலும் பவித்திரமோதிரமும் தரித்து தேவபூசையில் விருப்பும் தன்தேவிதவிர அன்னியஸ்திரீகளை க்கருதாமல் குலவுன்னமையுடையவனும் களங்கமற்றமனத்தினனுமாகி யஉத்தமன் சிற்பனென்றுசொல்லப்படும்-எ-று. (அகூ)

சுத்தமாமறைகளோதித்துய்யநல்லாடைசாத்தி
சித்தமேதெளியும்வண்ணம்சிறப்புடையவனுமாகி
நித்தியகர்மானுஷ்டானநெறிதவறுமற்றெய்வ
பத்தியாய்நூற்களாய்ந்தபண்பினன்சிற்பனாமே

(இ-ள்) நார்மடி வஸ்திரம்பூண்டு பரிசுத்தமாகிய வேதமோதிநித்திய கர்மானுஷ்டான நெறிதவறாமல் தெய்வபக்தியுடனே பற்பலசாஸ்திரங் களை யாராய்ந்தறிந்தவன்சிற்பனென்றுசொல்லப்படும்-எ-று. (கூய)

சிற்பன்தொழிலளவு.

சிற்பனுமுழக்கோல்மட்டந் திரள்சங்குகலன்பெய்பேழை
தெற்பமாங்கயிறிறேனுடுதிள்ர்முளைதளத்தின்செய்கை
வற்கமாமரங்கள்வெட்டுமவகையதன்குறியிடங்கள்
நிற்குந்தானுத்திரந்தூண்நேரிசையனைத்துஞ்சொல்வாம்

(இ-ள்) சிற்பன் முழக்கோல் மட்டக்கோல்-சங்கு-கலன்- பேழைதெ ற்பம்-பிடிக்கயிறு- முளையளவு - தளத்தின்செய்கை மரவகைவெட்டும்வ கை மரத்தின்குறியிடங்கள் தூண்மட்டம் உத்திரமிசைத்தல் முதலிய வைகளைச்சொல்லத்தொடங்கியதென்மவாறு. (கூக)

வளையொடுவிட்டஞ்சட்டமற்றபல்லிசைகள்நல்ல
அளவுகால்கைமரங்கள்அதின்முதுகுயரஞ்சத்தி
விளைவிடுவாசற்கூறுமுருநிலைகதவுதாளும்
உளவதனியற்கைதன்னியுள்ளவாறெடுத்துரைப்பாம்

(இ-ள்) வளை- விட்டம்-சட்டம் பற்பல் இசைத்தல்-அளவுகால்மரங் கள் கைமரங்கள்- முகட்டுயர்ச்சி சத்தி வாசலின்அகலஅளவுநிலையினி யல்பு கதவு- தாப்பாள்- முதலான பற்பலவகையினியல்பு கூறுவாமென் றவாறு. (கூஉ)

முழக்கோலிற்கு மரவகை.

நாக்குடையமூங்கிலொடுதேக்கதொருவாச்சா
ஊக்கமுளதேக்குடனேவேங்கையுயர்கோலம்
ஆக்கமுளமூங்கில்மறையோராசர்க்காகும்
தேக்குதுலைவேங்கையதுசெப்புமுழவோர்க்கே

(இ-ள்) மூங்கில்- ஆச்சா- தேக்கு-வேங்கை இவைகளின்-மூங்கில் பிராமணர்க்களுக்குமாம், தேக்கு- வணிகருக்கும்- வேங்கை- சூத்திரருக்குமாகும்-எ-று. (௬௩)

செண்பகமுஞ்சந்தனமுந்தேவர்முனிவர்க்காம்
விண்பகருநீள்கமுகுவேதியர்தமக்காம்
மண்பகர்பலாத்திமிசுமன்னர்வணிகர்க்காம்
உண்பகருங்காவியுழவர்க்குமுழக்கோலே

(இ-ள்) தேவர்களுக்கும்- முனிவர்களுக்கும்- செண்பகமரமும்சந்தனமரமுமாம்- கமுகமரம்- பிராமணனுக்காகும்- பலாவும்திமிசும்இராஜாக்களுக்கும்- வர்த்தகருக்கும்- ஆம்- சூத்திரருக்கு கருங்காலிமரம்-உத்தமமாம்-எ-று, (௬௪)

சங்குபிரமாணம்.

சங்குகானீளமாகத்தந்ததோர்விரலினாலே
பங்குமுன்னான்கதாகக்கொண்டதுபருமனாகும்
அங்கதுநாலின்மூன்றுந்தலையதுசுற்றதாகும்
தொங்கியதேகமாகக்கொண்டதோர்தூசிதானே

(இ-ள்) தேவாலயங்கள் கோலுமிடத்து சங்குஸ்தாபனம் பண்ணியத்தனிப்பார் ஆதலாலந்தச் சங்குக்களவு நீளம்பருமன் இவைகள் சொல்லுமிடத்து சங்கு-௰௨-விரலளவுநீளம் அகனைநாலுகூறிட்டு அதிலேமூன்று கூறுதலைச்சுற்றம் ஒருகூறுஊசிநீளமாக மரத்தால்சங்குபோல் கடைச்சலிட்டுவைப்பாரென்றவாறு, (௬௫)

வேறு.

சங்குதிரளும்பருமன்தாரமதுநீளம்
சங்குதலையின்பருமன்தன்னடியின்முக்கால்
பொங்குபுனல்மட்டதுகோலவவுபூமி
புங்கதுநடுப்படநடுப்பரிசுதானே

(இ-ள்) யாதொரு நீளமிட்டது சங்கின்பருமன் அச்சங்கின்பருமனிலொன்று முக்கால்தனைப்பருமன் ஒருமுழத்தின் பரப்பிலே நடுப்பட நாட்டுவதென்றவாறு. (௬௬)

வானுறையுந்தேவர்முதல்மாந்தருக்குமாகுந்
தானுடையசங்குமரந்தக்கவகைசொல்லில்
ஆன்பலாவாலரசுமத்திஇச்சிமாந்தர்
கானமர்பரம்பைகருங்காலிதேவர்க்காமே

(இ-ள்) தேவருக்கும் மனிதருக்கும் சங்குகடைந்துவைக்கு மரவகைசொல்லில் பால்சுரக்கின்ற-பலா-ஆல்- அரசி-அத்தி- இச்சிஇவைகள் மனிதருக்கும்- முள்ளுள்ள-பரம்பை கருங்காலி முதலியனதேவர்களுக்குமாமென்றவாறு, (௬௭)

சங்குமுகூர்த்தம்.

மன்னியசங்குவைக்கப்பார்த்தனைமட்டமாக்கி
நின்னியவொருகோல்கொண்டநீமுமகலமாக
உன்னியமட்டநீளம்உரியவேடுகொண்டபின்னும்
திண்ணியபொருளினலேதிட்மூளசங்குவையே

(இ-ள்) சங்குவைக்குந்தானத்திலே-பூமியில்- ஒருகோன்முழைக்கு அகலமும் நீளமும் சரிவரநிரவிமுகூர்த்தங்கொண்டு நடுவேபொருள் வைத்து அதின்மேல் சங்குவைத்து முகூர்த்தங்கொள்ளவு மென்றவாறு. (௬௮)

சங்குமுகூர்த்தநாள்.

ஆவணியுமைப்பசியுமானகெறிதேரும்
பூவணிமலர்க்குழலினள்மணருங்காலம்
தேவணிதெரிந்தவைகள்சேரவருநாளில்
தாவணிமுகூர்த்தமதுசங்குநடலாமே

(இ-ள்) ஆவணி - ஐப்பசி - கார்த்திகைமுதலான கல்யாணமுகூர்த்த நாட்களிலே நல்லசுபமுகூர்த்தத்தில் மத்தியானவேளையில்சங்கு நடவும்-எ-று, (௬௯)

ஒன்பதுமேழுமைந்துமுற்றதோர்பதினைந்தாக
அன்புடனறையச்செய்தேயதினடுபொன்னைவைத்து
முன்பலதானியங்கள்முத்துடன்சுற்றும்வைத்து
பின்பதுநூலஞ்சூவித்துமேழையமனையில்வைப்பாம்

(இ-ள்) கூ-எ-ரு-யரு-இவைகளில் இயன்றமட்டும் அறைகள் செய்வித்துநடுவறையில் பணியும் பொன்னுமிட்டு மற்றுமுள்ளடான அறைகளில் பலதானியவகைகளும் முத்து பவழமுதானவைகளும் வைத்து மனையினுள்ளே பேழையைவைப்பார்களென்றவாறு. (ளா)

சாலையின்மையந்தன்னிற் சதுரமாயகலந்தன்னைக்
கோலியேயோன்பதாக்குறித்துளமேற்குநாலும்
வாலியகிழக்குமூன்றும்தெற்குமோர்நான்கும்விட்டு
சீலமாய்வடக்குமூன்றும்நடுவதுகெற்பஞ்செய்யே

(இ-ள்) அந்தசாலையின்மையத்தை ஒன்பதாசப்பங்கிட்டு- மேற்கில் நாலும். கிழக்கில்மூன்றும்- தெற்கில்நாலும்விட்டு- வடக்கில்மூன்றும் கெற்பம் வகுப்பார்களென்றவாறு, (ளாக)

நான்குவருணத்தாருக்கும்பூணூநூல்.

மறையவர்தெர்ப்பைநூலில்வளர்புரிமூன்றுகொள்க
இறையவர்கதம்மைசன்னிலிசைந்தமும்புரியுங்கொள்க
பிறையுடன்வைசியரானோர்பனையினுரிரண்டுகொள்க
திறமிலர்ச்சூத்திரர்வைக்கோல்திரிபுரியிரண்டுகொள்க

(இ-ள்) பிராமணர்கள் தெர்பையால் மூன்றுபுரியும் அரசர்கள்கதம்பைக்கயிற்றால் மூன்றுபுரியும் வைசியர்பனைநாரிலிருபுரியும்சூத்திரர் வைக்கோலா இருபுரியும் பூணூலெனக்கொள்ளவும் (ளாஉ)

மூளையளவுகொள்ளும்படி,

மூளையதுசொல்லிற்பத்தோர்விரற்கடைநீளந்தானும்
விளைவுறவித்துநான்குவிரலளவாகக்கொண்டு
வளைவறக்கிடக்குமந்தவாஸ்துவின்வயிற்றிற்கெல்லி
மூளையைத்தென்மேன்மூலைமுதலிடமாகத்தாக்கே

(இ-ள்) மூளையின்பிரானம்-யக-விரற்கடையளவு-கனமும்-உ௪-விரற்கடை நீளமும்கொள்ளவும் மூளைகடாவும்போது வாஸ்துவின் வயிற்றிற் கெல்லி தென்மேல் மூலையிலும் தென்கீழ் மூலையிலும்வடகீழ்மூலையிலும் வடமேல் மூலையிலும் கடாவவும்—எ-று, (ளாங)

மூளைதனையிட்டதில்வாங்கிமூலமேகுருவேயென்று
தாளர்விலாஆசிகூறித்தாக்கியெட்டடியடித்து
கிளைவளர்க்கயிறுபூட்டிகிளர்ந்தபால்மஞ்சளிட்டு
அளைப்பிலாமுளையடிப்பதாமெனமயனுஞ்சொன்னர்

(இ-ள்) முளையை இடதுகையினால்வாங்கி ஆதிமூலமே சற்குருவே யென்று துதித்து வாழிவாழி யென்றுதொழுது எட்டிபடித்துகயி ற்றிறப்பூட்டி பாலு மஞ்சளுந்தெளித்து முளையை இறுத்துவதென் றுமயனுரைத்தாரென்றவாறு, (௱௪)

அடித்ததோர்முளையினுச்சியலறிடி லில்லம்பாழாம்
பிடித்ததோர்முளையின்கண்டம்பிளக்கிலோபிணிவந்தெய்தும்
படித்ததோர்மாதேசிந்திப்பறந்திடிற்பதிசாவாகும்
செடித்தவம்முளைதெறிக்கில் செல்வமுஞ்சிதறுமென்னே

(இ-ள்) இப்படியடித்த முளையினுச்சி யலறிடில் அந்த வீடுபாழா கும் அடித்த அடியால் முளையின் தலைபிளக்கில் வியாதிவரும் தெறித் துப்போனால் வீட்டுக்கெசமான் சாவான் அடித்த அடியால் அம்முளை துள்ளிப்பறக்கில் அவன்செல்வங்கள் சிதறுண்டுபோம்-எ-று, (௱௫)

கொட்டியமுளைபிடுங்கல்கோர்த்திடுங்கயிற்றறுத்தல்
நட்டகால்தனைப்பறித்தல்நடுவாணிமரமிசைத்தல்
விட்டவாயலையடைத்தல்வேறுவாயலைவிடுத்தல்
சட்டமாமனையாளும்போய் தரிப்பதுமரிதுதானே

(இ-ள்) இப்படிநட்டமுளையைப்பிடுங்குதலும் கயிற்றுத்துங்கட்டு திதலும் நட்டகால்களைப்பிடுங்குதலும்நட்டநடுவில் மரம்வைத்தலும் வாசற்படி விட்டதைப்பேர்த்து வேறுவாசற்படிவிடுதலும் இவைமுத லியவை மறந்துச்செய்யில் யசமான் பெண்சாதிமரித்து யசமானும் சீவிப்பது அரிதாகுமென்றவாறு, (௱௬)

தேரொடுதெருவொழுங்குதென்படுகசாலையெல்லாம்
வாரொடுஅகலமச்சம்வடிவதுவாகாய்க்கொள்ள
நேரொடுஅகலந்தன்னில்நீண்டொன்றுகுறையுமாகில்
ஊரொடுமனையில்புக்காதோடுவர்வூடுவிட்டே

(இ-ள்) தேர்-நடத்தப்பட்டவீதிஒழுங்குதப்பி அல்லது சாலைபொ ருத்தம் அகலம்-அச்சம்- அளவு- பிரமாணம்- இவைகள்குறைவுபடு மாகிலும் நீண்டும்-அகண்டும்- ஒன்றுக்கொன்று முறைவழுவிபேதப் படுமாகிலும் அந்தஊரிலும்- மனையிலும் புகுதாமல் தேசாந்திரியாக ஓடிப்போய்விடவும்-எ-று, (௱௭)

களத்தினியல்பு.

மட்டநீர்கொண்டமட்டுமதித்ததோர்வாங்குதன்னை
வெட்டென நூலாற்கண்டுவிளைந்துடன்மிகவும்வாங்கி
கட்டெனநடுவுதன்னில்கலம்பெறச்சதுரமாக்கி
சட்டமாய்முழத்திற்கெல்லிசார்பில்நீர்விடுகொன்றே

(இ-ள்) மனைமட்டங்கூட்டமிட்ட தளத்திலே நூல்பிடித்து நடுப்பூடாம்சதுரமாகக்குழிகெல்லி நீர்மட்டம் ஏருமுழுங்கெல்லி குழிவழிந்தோட்சலம் விடுகவென்றவாறு. (ஙஅ)

நன்றெனவிட்டநீருநாற்றிசைநண்ணிநூலிற்
சென்றுறமூலையைத்தொட்டுச்சிக்கெனமிகவுந்தாக்கி
மன்றமாய்ப்பரவிநின்றுமட்டநிந்திடில்மட்டமென்ற
குன்றமர்தனத்திநுளேகூறினார்முனிவர்தாமே

(இ-ள்) அப்படிப்பட்டநீர்வழிந்து நாலுதுக்கும்பரந்துநாலுதிசைநூலும் வழிந்துதாக்கி நாலுக்கும் மூலைக்கும் ஏற்றக்குறைச்சலில்லாமல் ஒத்துநிற்பது மட்டமாகுமென்றவாறு. (ஙகூ)

மாடமாளிகைகளாகமதித்தநன்மண்டபங்கள்
நீடியமயனுற்சொல்லும்நெறிதனைவிளம்பக்கேளாமின்
கூடியமரங்கள்தன்னின் குணங்களால்நன்மைதுன்மை
ஆடியமயிலினுளேயறிந்தவாறுரைசெய்வேனே

(இ-ள்) மாடங்கள்-கூடங்கள்- மாளிகைகள் - மண்டபங்கள்-இவைகள்கட்டமயனுரைத்தவழியே மரங்களின்குணங்களும் அவைகளின்நன்மை துன்மையுஞ் சொல்லுவாமென்றவாறு, (ஙய)

கல்லாலுஞ்செங்கல்லாலுங்கட்டியமனைகளெல்லாம்
வல்லாளர்தேவர்க்காகும்மறையவர்தவத்தோர்க்காகும்
இல்லாமலிவர்கட்கன்றியாவர்க்குமாகாதென்று
சொல்லியபரிசெவர்க்குஞ்சுத்தமாமறிந்துகொள்ளே

(இ-ள்) சருங்கல்லினாற்கட்டிய மனையும் அலதுகருங்கல்லுஞ்செங்கல்லுங்கலந்துகட்டியமனையும் தேவர்கள்பிராமணர்கள் தவசிகள்வசிக்குந்தலமாம்இவர்கள் தவிரமற்றயாவர்க்கு மூதவா தென்றவாறு, ()

அகத்தினுக்காகாதென்றுஅகற்றியமரங்கள்தானும்
மிகுத்ததுவேணுமென்று விரும்பியமரங்கள்தானும்
மகத்துளதேவர்கட்கும்மற்றுளமாந்தருக்கும்
பகுத்திருவகையதாய்ந்துமரவகைபலவுஞ்சொல்வாம்

(இ-ள்) மனைக்கு ஆகாதமரங்களும் ஆகியநல்ல மரங்களும் தேவர்கள் மனிதர்களுக்கானமரங்களும் இருவகையாய் வேறுபாடுசெய்துசொல்லுவோமென்றவாறு, (ஙயஉ)

அம்பலூர்வளவுகோயிலனற்படல்பறைசேர்தல்
வம்புடன்கொடிகள்சுற்றல்வல்புழுவிலங்கின்சேர்க்கை
தும்பியால்காற்றால்வீழ்தல்சுடுகாடுபாழ்மனையுஞ்சேரி
வெம்புறலுடன்பேய்பூதமேலல்வேரற்றதாகா

(இ-ள்) அம்பலத்திலிருந்தது ஊரிலிருந்தது கோயிலிலிருந்தது அனல்தாவிவெந்தது பரவைக்கூட்டங்களிருந்தது புத்தின்பேரிலேமுளைத்தது தேனிருந்தது வம்புகாய்த்தது கொடிசுற்றியது புழுவெட்டுமிருகங்களின் இருப்புகுளத்தருகு அல்லதுகிணற்றருகுநின்றமரங்கள் பூமியில்நட்டுநீர்வார்த்து யானைமுறித்தது காற்றுமோதியது சுடுகாட்டில் நின்றது பாழ்மனை பறைச்சேரி இந்த இடத்திலிருந்தது வெம்பிமடிந்தது பாம்புகுடிகொண்டது பூதப்பிரேத பசாசுகள்நெருங்கிநின்றது தனக்குத்தானே வேரறுந்து விழுந்தது முதலானவை தீமையையுடைய மரங்களாம் இவ்விதமரங்களில் வீடுகட்டில் தீமையைத்தரும்-எ-று, ()

மரங்களின்சாதிவிவரம்.

அடிதலையிரண்டுமொத்தலாண்மரமதுவேயாகும்
அடிபெருத்ததுவேபெண்ணாம்மரந்தலைபெருக்கில்
வடிவுள்ள அலியதாகும்வேளைகளுக்கிரங்கள்போதி
மடிவிலாவிட்டஞ்சட்டம்பெண்மரமாகுந்தானே

(இ-ள்) அடியுந்தலையுந்திரண்டிருந்தால் ஆண்மரமாம் அடியுந்தலையும்பெருத்து இடைசிறுத்திருந்தால்பெண்மரமாம் தலைபெருத்துமற்றெங்கு மெலிந்திருந்தால் அலியாகும் ஆகையால் ஆண்மரங்கள் தூணுக்காகும் மற்ற சாமான்களுக்குப் பெண்மரமாகுமென்றவாறு. (௱௰௪)

கருதியமுகூர்த்தங்கொண்டுகாட்டிலுள்மரங்கள்வெட்டப்
பரிவுடன்பாலுஞ்சோறும்பணியாரம்பலவுங்கொண்டு
மருவியபூசையிட்டுவனதேவிபலிகொடுத்து
புருஷனுமரத்தின்கீழேபொற்புறநிற்பர்தாமே

(இ-ள்) தனக்கிசைந்த முகூர்த்தத்தில் எழுந்துகாட்டுக்குள்போய்பல பணியாரவகைகளுடனே வனதேவதைக்குப்பலிகொடுத்து ஆண்மரத்தினருகிற்சொல்லவும், (௱௰௫)

தென்புறமேற்குமாகத்தெற்கேகோடாலிவைத்துத்
துன்பமாம்பூதம்பேயைத்தூரமேபோகச்சொல்லி

இன்ப ராப்பால்குடித்து இதனிற்கோடாலிதோய்த்து
அன்பிமேலார்முழத்தைவிட்டு அடைவுடன்வெட்டுவாயே

(இ-ள்) தென்புறத்திலே தெர்ப்பையும் மேற்புறத்திலே கோடாலியு ம்வைத்து பேய்பூதங்களைவிலக்கி மந்திரதியானத்துடனேபாற்குடித்து ப்பாலிலேகோடாலியைவைத்து அடியிலொருமுழம்விட்டுமரத்தைவல ப்புரத்து நமஸ்க்கரித்துகோடாலியாலேவெட்டவும் என்றவாறு. ()

வெட்டியவாயில்நீர்பால் வீழ்ந்திடிலாகாதென்க
வெட்டவிழ்மரத்தின்சத்தம்வெம்புலியானைநன்றும்
வெட்டவிழ்மரத்தின்சத்தம் மழுகையுஞ்சிரிப்புமாகா
வெட்டியமரங்கிழக்கும் வடக்குமாய்வீழ்தல்நன்றும்

(இ-ள்) இந்தப்படிவெட்டும்போதுவெட்டுவாயில்அதிகநீர்பாய்தல்பா ல்போல்வடிதல் ஆகாது வெட்டிவிழுகிறமரம் புலிபோல்யானைபோல்சத் திக்கில்நன்மை அழுதல்சிரித்தல்போலும் சத்திக்கில்ஆகாவது வடக்கே யாவதுகிழக்கேயாவது தலையாகவிழுந்தால் நல்லதென்றவாறு. (ரு௰எ)

உத்திரமிசைக்கவேண்டிலுன்னிநீர்கேளுமெல்லாம்
அத்தனையகலந்தன்னையளந்துஞ்சதுரமாக்கி
வைந்தநேர்கணத்தைநேரேவடிவுமநூலளக்கப்பட்டு
இத்தனையொன்பதாகயிசைந்ததுகுடுமியாமே

(இ-ள்) உத்திரமிசைக்கும் அகலத்தையளந்து சதுரமாக்கிகனத்தை நூலளவுகண்டு அதனை ஒன்பதாக்கி இசைத்து நின்றது குடுமியாமென் றவாறு. (ரு௰அ)

உத்திரமிசைக்கிலாணியுத்தமமாகக்கொள்ள்
உத்திரமிசைக்கிலாணியுலகத்தில்வலமதாக
உத்திரமிசைக்கிலாணியுலகத்திலிடமதாகில்
சத்துருபெருத்துப்பின்னுஞ்சாலத்தீட்டுங்கைதில்லைமெ

(இ-ள்) உத்திரத்துக்கிசைக்கின்ற ஆணிதேவர்களுக்கு இடமாகக்கொ ள்ளவும் மானிடருக்கு வலமாகக்கொள்ளவும் இடமாகக்கொள்ளில் சத் துருபெருத்து அந்தவீடுதீப்படுமென்றவாறு. (ரு௰கூ)

அடியதுகீழதாகவயக்கிரமேதலதாகப்
படிமுதலானதெல்லாம்பார்த்துடனிசைத்துக்கொள்ள

மூடியவேயோராமாகில்முதுதலையுள்ளுமாக
கடிகமழ்குழலினளேகண்டநூலுரைத்தவாறே

(இ-ள்) முதுதலை கீழும் இளந்தலை மேலுமாக இசைக்கவும் ஓரமாகில் முதுதலையுள்ளுமிளந்தலை புறம்புமாகவுமிசைக்கவும்-எ-று. ()

மையமதாகல்மரந்தனையிசைப்பாராகில்
கைதனிற்பொருளும்போகுங்காவலன்றனுஞ்சாவன்
பையவேபார்கில்மையம்பாதியிற்பாதிகொள்ளடு
செய்யவேயிசைத்தல்நன்றாம்தேனினைப்பழித்தசொல்லாய்

(இ-ள்) நடுமையத்தில் மரமிசைத்தலாகாது இசைந்தால் உயிரும்பொருளுஞ் சேதமாகும் மரங்கள்மையத்தில் பாதியிற்பாதி இசைக்கவும் என்றவாறு. (௯௪)

நிறைநெய்யிலாதவயிரமுடன் நெய்யிலாவயிரந்தானிசைக்க
வரண்டவயிரந்தன்னுடனேவரண்டவயிரந்தானிசைக்கச்
சிறந்தவலத்தில்நெடுவடையுஞ்சேருமிடத்திற்குறுவடையும்
புறம்பில்தச்சனின்றிசைக்கப்புகழுஞ்சிற்பனுள்ளிசையே

(இ-ள்) நெய்பற்றவயிரத்துடன்கெட்டபற்றவயிரமும்வரண்டவயிரத்துடன்வரண்டவயிரமும்வலத்தில்நெடுவடையும்இடத்தில் குறுவடையும் தச்சன் புறம்புஞ்சிற்பன் உள்ளும்சேர்த்து இசைக்கவும்-எ-று, ()

ஆண்மரங்களொன்றுபலவாகிற்பெலன்களாராய்ந்து
ஊனமில்லாததையுரித்துஉரமாயுத்திரந்தானிசைக்கில்
ஈனமில்லைமனைக்கிடறுமில்லைவாழ்வும்மிகவுண்டாம்
போனதிசையும்நன்றாகும்புகழுஞ்சிற்பன்றனக்காமே

(இ-ள்) ஆண்மரங்களாக ஒரு சாதியிலாவது பலபல சாதியிலாவது பெலமுள்ளதாகவும் ஊனமில்லாத மரமாகவும்சேர்த்து உத்திரமிசைக்கவும் இப்படி இசைக்கில் மனைக்கு ஊனமும் இடறுமில்லைபொருந்திய வாழ்வும் சம்பத்துமுண்டாகும்-எ-று, (௯௫)

இருந்தமுதுதலைமுதுதலையுமிளந்தலையோடேயிளந்தலையும்
பொருந்தியிசைப்பாராமாகிற் பொல்லாநோயுமிகத்தொடரும்
திருந்துமுதுதலையிளந்தலையுஞ்சேருமிசைகள்மிகநன்றாம்
வருந்தியிசைப்பாராமாகில்வாழ்வுஞ்சம்பத்துண்டாமே.

(இ-ள்) முதுதலையோடு முதுதலையும் இளந்தலையோடிளந்தலையும் இசைப்பாராகில் பொல்லாத நோயுண்டாகும் முதுதலையோடு இளந்தலை சேர இசைப்பது நன்றாம் இப்படிப்பார்த்து இசைப்பாராகில் வாழ்வுஞ் சம்பத்துமுண்டாமென்றவாறு. (௱௨௪)

ஓரிசைதானேயாகிலுத்தமமல்லலியென்றும்
பேரிசையிரண்டதாகிற்பிரவுபகாரசென்ம
நாரிகொள்மூன்றினோடுநாலிசைவெறும்படாக
மேரிசையைந்துமாறுமியல்புதவற்றமாமே

(இ-ள்) இரண்டுமரத்தோரிசையானது மல்லலென்றுபெயராம் மூன்றுமரத்திலிரண்டிசையானது பிரவுபகார சென்மமென்றுபெயராம் நாலுமரத்திற்கும் ஐந்துமரத்திற்கும் மூன்றிசையானது நாலிசையானது வெறும்படாகமென்றுபெயராம் ஆறுமரத்திற்கும் ஏழுமரத்திற்கும் ஐஞ்சிசை ஆறிசையானது புதவற்றமென்றுபெயராம் எ-று. (௱௨௫)

ஒப்பியவிசைகளெட்டுமுள்ளதுதேவசத்தி
செப்புமேலிசைகளெல்லாந் தெண்டிகையென்றுபேராம்
இப்படியறிந்திசைக்கிலிடரில்லையென்றும்
துப்புறுகிளையுமிக்கசுகத்தையுங்கொடுக்குமன்றே

(இ-ள்) ஏழிசையு மெட்டிசையுமுள்ளது தேவசத்தியென்றுபெயராம் அதற்குமேற்பட்ட இசைகளெல்லாம் தெண்டிகமென்றுபெயராம் இப்படியறிந்து இசைக்கில் இடரில்லாமல் கிளையுடன் சுகத்தைக்கொடுக்குமென்றவாறு. (௱௨௬)

இப்பால்காலளவுகொள்ளும்படி.

பரப்பினையொன்பதாக்கிப்பன்புடனொன்றுநீக்கி
இரப்புதோரெட்டுங்காலமிரண்டுகீழ்மேலுந்தானும்
குறுத்துடன்கவருதானுங்கொள்வதுமிச்சமாகும்
திருத்தமாய்முகூர்த்தங்கொண்டுதென்மேற்குன்னம்நாட்டே

(இ-ள்) பரப்பினையொன்பது கூறுசெய்து ஒருகூறுதனிக்கானாலும் இரண்டுகூறு குழிநாட்டும் ஆறுகூறு மேலாகவும் குறுத்துங்கவருமிச்சமானது கொள்ளவும் முகூர்த்தங்கொண்டு தென்மேல்மூலையில் முந்தக்கால் நாட்டி பின்புமரக்கால்கள் நாட்டவும் எ-று. (௱௨௭)

இப்பால்கையளவுகொள்ளும்படி

பன்புடனகலம்பற்றிபன்னிருகூறுசெய்து
அன்புடனைந்துமஞ்சாறாமாற்றதுதோரணையதாகும்
இன்புமேழ்நடுவிற்கையாம் எட்டுகோட்டாங்கையாகு
மொன்பதுகூறுதானேயும்பற்றுகோடியுமாமே

(இ-ள்) அகலத்தைப்பிடித்து அதிற்பாதியை பன்னிரண்டுகூறுசெய்து அதற்குமேல் ஐந்துகூறு மஞ்சு ஆறுகூறு மஞ்சாகை ஏழுகூறு நடுவாகை எட்டுகூறுகோடாகை ஒன்பதுகூறு கூட்டக்கோடியாமென்றவாறு, ()

அஞ்சினிலிரண்டதாகிலகலத்தையிருபதாக்கி
மஞ்சுதீராறுபன்மூன்றடியில்மஞ்சாங்கையாக
மூஞ்சொல்நடுவாகையீரேழ்கூடுமேழ்கோடாங்கையாக்
குஞ்சியதிருண்டமாதேகொடிபதினாறுகொள்ளே

(இ-ள்) அஞ்சிலிரண்டாங்கைக்கு அகலத்தை இருபதுகூறுசெய்து மஞ்சுபன்னிரண்டு நடுவாகப்பதினாலு கோடாங்கைபதினைந்துகொடிபதினாறுகொள்கவென்றவாறு, (௩௨௬)

எழினில்மூன்றுங்கைக்குபரப்பகையுமேவெட்டாக்கி
வாழுமீரொட்டுமஞ்சுமஞ்சிகைபதினேழாகும்
சூழியில்நடுவாகைக்குமுன்தலையொன்பதாகுஞ்
சூழ்கொடிகைப்பதொன்பான்சொற்கொடியிருபதாமே

(இ-ள்) எழில்மூன்றுங்கைக்கு பரப்பை இருபத்திநாலாகச்செய்துமஞ்சுபதினாறுமஞ்சுபதினேழுநடுவாகை பதினெட்டு கோடாகைபத்தொன்பது கோடியிருபது-எ-று, (௩௨௭)

ஒன்பதுநான்குதன்னிலகலமோரிருபத்தெட்டி
லன்புடைமஞ்சுபத்தொன்பதாகுகையிருபதாகும்
வன்கோடதிருபத்தொன்றுநடுவாகைகோடாங்கைகோடி
மூன்புறுவழியாமென்றுமுறைமையாலேற்றிக்கொள்ளே

(இ-ள்) ஒன்பது நாலாங்கைக்கு பரப்பை யிருபத்தெட்டு கூறுசெய்துமஞ்சுபத்தொன்பது பஞ்சுஇருபது நடுவாகை இருபத்தொன்றுகோடாகை இருபத்திரண்டுகொடி இருபத்து மூன்று என்றவாறு, ()

பதினொன்றிலஞ்சிகைபலகைமுப்பத்திரண்டா
பதியிருபத்திரண்டுஅஞ்சுமஞ்சாகையான
வதனடுவாகைகோடாகைகொடியடைவிலேக்கையேற்றி
விதியினிலொவ்வொன்றாகவிழிட்டுகையளவுதானே

(இ-ள்) பதினொன்றில் அஞ்சாகைக்குப்பரப்பை முப்பத்திரண்டுசெய்து மஞ்சு இருபத்திரண்டு மஞ்சு இருபத்து மூன்று நடுவாகை இருபத்துநாலு கோடாகை இருபத்தைந்துகொடி இருபத்தாறு இப்படி ஒவ்வொன்றேற்றிக் கொள்ளுவதென்றவாறு, (௱௩௨)

உன்னுமஞ்சுமுதுகுயரமொன்பதொன்றுகொடியாகும்
பன்னும்பலசார்கைதனக்குப்பரப்புமுதுகின்பலதனைப்
பின்னும்பரப்புமூன்றுக்கால்பெய்தகோடாகைமூன்று
மன்னும்நடுவாகையிரண்டுமஞ்சாகைக்கொன்றிழுக்கதுவே

(இ-ள்) மஞ்சில் முதுகுயரத்தை ஒன்பதுசெய்து அதிலொன்றுகோடிக்கு இழுக்கிட்டபலசார்கைக்கு முதுகுபலத்தை பரப்புமூன்றுகைக்குநாலுசெய்து கோடாகைக்கு மூன்று நடுவாகைக்கு இரண்டுமஞ்சாகைஒன்றுஇழுக்கென்றவாறு, (௱௩௩)

கொடிக்குமுதுகுயரம்.

மஞ்சுமுதுகையைந்தாக்கிமருவுங்கொடிக்குத்தள்ளேடுத்து
மிஞ்சவேற்றுஞ்சேடமதுவிரண்டுநான்குகூறாக்கி
நஞ்சல்கோடகைமூன்றுநடுவாகைக்கோரிரண்டாகு
மஞ்சாகைக்கேயொன்றாகியிவையுமுதுகினுயரமதே

(இ-ள்) மஞ்சினுயரத்தை ஐந்துசெய்து இரண்டெடுத்துக்கொடிக்கு முதுகுயரம் எத்தினசேஷம் இரண்டையும்நாலுசெய்துகோடாகைக்கு மூன்றுநடுவாகைக்கு இரண்டு மஞ்சாகைக்கு ஒன்று முதுகினுயரம் என்றவாறு, (௱௩௪)

வாசல் அளவு.

உன்னமில்மனையில்வந்தமுழந்தன்னையுணர்ந்துகொண்டு
மாநிடர்தமக்கதாகில்மையத்திலிடத்தேயாகும்
தேனமர்குழலினளேதேவர்கடமக்குமைய
மாதோர்வாசலென்னவறிந்தவருரைத்தவாறே

(இ-ள்) மனைக்குவாசல்விடவேண்டில் நீளத்தைப்பிடித்துநடுவில்மையப்பார்த்துமனிதர்க்கானால்மையத்துக்கிடமாகவாசல்விடவும்தேவர்களுக்கானால் மையத்தில் வாசல்விடவும்-எ-று, (௱௩௫)

வன்பீதோர்மனையினீளவிகுத்தமோர்வாசல்தன்னை
ஒன்பதுகூறுசெய்தொருமுழமிடத்தேபோக்கி
இன்பமாமஞ்சுதெற்கேயினைவடிநின்றகூறி
ரன்பதுவாசலாகவருந்தவருணாத்தவாறே

(இ-ள்) வாசளவுமனைநீளத்தையொன்பது கூறுசெய்துஇட்டது புறத்தில் மூன்றுகூறும்வலத்துபுறத்தில் ஐந்துகூறும்போக்கிநின்ற ஒருகூறில்வாசல்விடுக-எ-று, (௱௩௪)

ஓங்கியநீளந்தன்னையொன்பதுகூறுசெய்து
பாங்குடன்வலத்திலைந்துப்பரிவுடனிடத்தில்மூன்றும்
நீங்குறக்கூர்வம்தன்றுநேர்கவிளாகவேணும்
திங்கிலாவாசல்விட்டாற்சிறப்புடன்வாழுவர்தாமே

(இ-ள்) நீளத்தை ஒன்பதுகூறுசெய்து வலத்தில் ஐந்து கூறும்விட்டு நடுவில் வாசல்விட்டால்சுபகரம் பெற்றுவாழ்வார்கள்-எ-று. ()

நிலைசொல்லும்படி,

கன்னிலைதேவர்க்காகுங்கனமறையோர்குவேம்பாம்
மன்னவர்க்காச்சாதேக்குவைசியர்க்கிலுப்பையாகும்
பன்னுவேளாளர்கட்குப்பகர்தெங்குமுசிலையாகும்
இன்னவைதமிழினலே யியம்பினர்வேதத்தோரே

(இ-ள்) கல்நிலை தேவர்களுக்காம் மறையவருக்கு வேம்பாகும் அரசர்களுக்கு ஆச்சாதேக்காகும் வைசியர்க்கு இலுப்பைமரமாகும்தென்னைமரமும் உசிலைமரமும் வேளாளர்க்காகுமென்றவாறு. (௱௩௮)

நிலைதனையகலங்கொள்ளில்நேர்படச்சேர்க்கும்போது
நிலையகலத்தினாலேகனமதுங்கூடிக்கேன்மின்
நிலையகலித்துமுக்காலனைபத்துக்கோலையாதல்
நிலையகலத்தால்வந்தநிலத்தளவொத்ததாமே

(இ-ள்) நிலையகலங்கொளளும்படி நிலையகலத்தால் கனங்கொள்கநிலையகலத்தில்முக்காலினைவியென்னநிலையகலக்கால்வந்தநிலத்தளவுஒக்குமென்றவாறு, (௱௩௯)

மட்டுக்கொண்டநிலைநீளமீவனையின்கீழ்மன்னவர்காகும்
எட்டுக்கூறிட்டாறுமொன்றுமிச்சமூன்றுபடியாகும்
வட்டமலைபோம்றனப்படைத்தமங்காய்துங்கம்திமுகத்தாய்
சட்டமாகமயனுரைத்தசங்கைதெளிநூலிதுமாவே

(இ-ள்) நிலை நீளத்துக்குப்பிரமாணம் வளையின்கீழ்மன்னவர்க்காகும் எட்டு கூறிட்டு அறுமை மிச்சங்கொள்வது அதனை எட்டுகூறிட்டு நடு-௯-க-கூட்டி தனை இரண்டும்-கொள்வது முன்சொன்னகூறு-௯-யும்-௫ கூறுசெய்து கூறுதுளையில் கடாவிநீக்கிநின்ற-௩-கூறும்படியாகவைப்ப தென்றவாறு. (௱௪௰)

ஓதியநிலைநீளத்தை யொன்பதுகூறுசெய்து
நீதியாயிரண்டுமைமர் துமிதில்விரல்முறியாவண்ணம்
பாதியாம்விரலையொற்றிக்கொள்வதுபழுதொன்றில்லை
மீதியாயிரண்டொன்பானல் மேலைந்துகீழ்நால்காண்க

(இ-ள்) நிலைநீளத்தை-௯-கூறுசெய்து-௨-௫- இதல் விரல்முறியாம ல்பாதிவிர லொற்றிக்கொள்வது-௨-௯- கூறுசெய்துமேல்-௫- கீழ்-௪- கொள்வதென்றவாறு. (௱௪௧)

மட்டுளாநிலைநீளத்தைமன்னியவேழுசெய்து
ஒட்டொடாறிரண்டுநீக்கியொன்றனையொன்பதாக்கி
இட்டதோர்கூறுதன்னில்மேலைந்துகீழ்நான்காகும்
வெட்டிடிற்பாதிபோகும்விரலொற்றிக்கொள்வர்தாமே

(இ-ள்) நிலைநீளத்தை-எ-கூறுசெய்து-௯- ௨ - கூறுநீக்கி நின்றதை ஒன்பதுசெய்து மேல்-௫-கீழ்-௪-௨-கூட்டிற் பாதிபோம் விரலொற்றிக் கொள்வதென்றவாறு, (௱௪௨)

அரியதோர்சுவர்கனத்தையாறுளகூறுசெய்து
நிரையர்கநின்றகூறில்நிலையதுமையந்தன்னில்
சரியாகவைக்கவேண்டாஞ்சாத்திரப்படியேநின்ற
தொருகூறுவொத்தித்தள்ளியுள்ளாகவைக்கநன்றே

(இ-ள்) வைத்த சுவர்கனத்தை-௬-கூறுசெய்து நின்றகூறின்மையத்தி ல் வைக்கவேண்டாம் முன்னோர்கள்சொன்ன சாஸ்த்திரத்தின்படியேநி ன்றதில்-க-கூறு ஒத்தித்தள்ளிஉள்ளாகவைக்கநன்று-எ-று (௱௪௩)

கதவுகளினியல்பு.

நாவலும்தேவர்க்காகும்நான்மறையோர்க்குவேம்பாம்
மேவுமன்னவர்க்குதேக்காம்மிக்கவைசியர்க்கிலுப்பை
தாவுவேலாளர்தெங்குதனியெட்டியெவர்க்குமாகா
காவியமாகச்சொன்னோங்கதவுளியல்புதானே

(இ-ள்) நாவல்தேவர்க்காகும் வேட்புமறையோர்க்காகும் அரசருக்குத் தேக்காகும் வைசியர்க்கு இலுப்பையர்கும் வேளாளர்க்குத்தென்னமரமாகும் எட்டியாவர்க்குமாகாது, (௱சச)

சிறப்புடைதேவர்க் கண்டல்புறத்தலாமிரண்டியர்கும்
சிறப்புடைவட்டமிரண்டாயடைத்தலுந்திறத்தல்தானும்
சிறப்புடையகலமேனறு தேவர்கட்கன்றியாகா
சிறப்புடன்கதவுங்கோலுஞ் சிக்கெனச்செய்தால்நன்றே

(இ-ள்) சிறப்புடைத்தாகிய தேவர்கட்கு அண்டல்புறத்தலாகிய கதவு இரண்டுமாகும் அகலடக்கதவு ஒன்றாகில் தேவர்க்கன்றி மனிதர்க்காகாது சிறப்புடைத்தாகிய கதவுங்கோலும் சிக்கெனக்கொள்க என்றவாறு. (௱சரு)

நிலையுறுமரங்கள்தானும்நீள்முடிநிலையுமட்டம்
துலக்கமாங்கதவுக்கான்சூத்திரப்படி துளைசேர்ந்
நிலக்கமாந்தாப்பாளொன்று மிரண்டுமேயளவதாகும்
பலக்கநாட்டிடவும்வேண்டில்பன்னிரண்டளவுமகொள்வாம்

(இ-ள்) நிலைக்கான்மரங்களில் கீழும்நிலையும் மட்டமுங்கொண்டுகதவுக்கானபடியே துளைகொண்டுதாப்பாள் ஒன்றிரண்டளவாகும் பலதாளிடவேண்டில் தாப்பாள் பன்னிரண்டளவுகொள்ளலாமென்றவாறு. ()

கதவிணைசை.

தாளவையொன்றமூன்றுமைந்துபாற்கதவுநிற்க
மீளவேகதவுதானும்விடுமதனிணைசவேறு
காளமாங்கழுதைசெக்குக்காலதுகவலையாக்கும்
தாளம்வேழத்திணைசைசங்கொலிமிகவுநன்றே

(இ-ள்) தாள்-க-ங-ரு-மரம்-கதவு-நிற்கப்பின்னும் கதவிணைசைகளம்போன்றும் கழுதைபோன்றும் செக்குபோன்றும் சப்திக்கும்மாகில் தீமையைத்தரும் தாளம்போன்றும் யானையைப்போன்றும்சங்குபோன்றும் சப்திக்குமாகில் உத்தமமாம்-எ-று. (௱சஎ)

அங்கமேலாடுமாகிலரசராற்கேடுண்டாகும்
சிங்கமேலாடுமாகில்சிவனுங்கேடுசொல்லுமே
தங்கியநிருதிதன்னில்தனியிலார்ச்செங்கோலாகும்
மங்குறவருணனிணைக்கிலாருயிர்க்கழிவுதானே

(இ-ள்) கதவானது வடகீழ்மூலையில் நின்றுடில் இராஜாக்களால்கேடுவரும் தெற்கேநின்றுடில் சிவனுக்குகேடுவரும் தென்மேல்மூலையில் நின்றுடில் பொருட்சேதமாம் மேற்கேநின்றுடில் உயிருக்கழிவா மென்றவாறு, (௩௪௮)

வெண்பா.

நாடியடைக்கிலுயிர்போகும்நாடாமல்
பாடியடைக்கில்மனைபாழாகும்-பாடாமல்
நின்றநிலைநிற்குங்கால் நீடூழிவாழ்வரோ
கண்டுதகதவிட்டக்கால்

(இ-ள்) திறந்தகதவு தானேமூடிக்கொண்டால் அந்தவீட்டிற்குடையவனுக்கு பிராணபயமுண்டாம் அல்லது சப்தத்தோடுமூடிக்கொண்டால் வாசஞ்செய்யு மனிதரற்றுமனைபாழாகும் திறந்தகதவுஅசையாமல் நிலையில் நிற்கில் வீட்டிற்குடையவன் குடும்பத்துடன்வாழ்வன்-எ-று. ()

வாசலுதயம்.

வேறு.

சிங்கஞ்சனிக்கில்தென்வாசல் சேவுங்களிறுந்தான்சனிக்கில்
கொங்கார்மேற்கும்வடக்குமதாங்கொடியேசனிக்கில்நாற்றிசையாம்
சிங்கம்பெருமாள்கோயிலுக்காஞ்சேவேமகாதேவர்க்காம்
கொங்குநாளுகணபதிக்காம் கொடிதான்யாவர்தமக்காமே

(இ-ள்) சிங்கம்சனிக்கில் - தென்வாசலாம், ரிஷபம்சனிக்கில் - மேற்குவாசலாம், யானைசனிக்கில்-வடக்குவாசலாம், கொடிசனிக்கில்-கிழக்குமுதல் நான்குதிசையுமாம், அதற்குள் சிங்கம்சனிக்கில் பெருமாள் கோயிலுக்காம், ரிஷபம்சனிக்கில்- மகாதேவர்க்காம்- யானைசனிக்கில் விநாயகர்க்காம் கொடிசனிக்கில்- யாவர்க்குமாம்-எ-று. (௩௫0)

பத்திகள்பத்திசேரிற்பதியுடனிருந்துவாழ்வார்
பத்திகள்கலையுமாகிற்பதியதுகலையுமென்ன
உத்திரந்தூண்கள்தானுமொழுங்கிலேநில்லாதாகில்
சத்துருவாலேயுந்தச்சாலேதீப்படுவதாமே

(இ-ள்) பத்திசேரில் பத்தியுடன் இனிதாக வாழ்வார் பத்திகள் கலையுமாகில் பதிகுலைந்துபோம் உத்திரம்தூண் ஒழுங்கில் நில்லாவிட்டால் சத்துருக்களால் மனை தீப்படும்-எ-று. (௩௫௧)

வள்வதுவாசல்தன்னைமன்னியமய்யனார்சொன்ன
அளவினின்மனையைக்கோலியன்புடனிருப்பாராகில்
உள்மகிழ்மிக்கஉறவுடனினிதுவாழ்வார்
இளமைதிங்களினுடன்னிலிலட்சுமிகரமுண்டாமே

(இ-ள்) மனைகோலவேண்டில்மயனென்னும் தேவசிற்பாசாரியார்சொல்லிய கியமப்பிரகாரம் அளவெடுத்து வாசல்முதலியன அளவோடுவிட்டு பரப்புபரப்பி சுபநாளிற் குடிபுகுந்தால் இலட்சுமிகடாட்சம்பெற்று சுகித்துவாழ்வார்கள்-எ-று, (ரு௨)

மனைக்குகருப்பதிக்கமுகூர்த்தம்.

வெள்ளிவியாழஞ்சனிதிங்கள்மேவும்புதனுஞ்சராசி
தெள்ளுஞ்சோதியுத்திரங்கள்திருவோணமகம்புனர்பூச
முள்ளசதயமிருகசிரமுரோகணியனுஷமிரேவதியி
லெள்ளுமட்டமியுவாவுடனேயிருத்தைநீக்கிக்கருப்பதியே

(இ-ள்) வாரங்களில்-வெள்ளி-வியாழம்-சனி-திங்கள்-புதனும்-இராசிகளில் சராசிகளும் நட்சத்திரத்தில் உத்திரம் - உத்திராடம், திருவோணம்-மகம்-புனர்பூசம், சதயம்-மிருகசிரிடம்-ரோகணி, அனுஷம்-ரேவதி-இவையுட்பட அஷ்டமியும் உவாவும் இருத்தையும் நீக்கி கருப்பதிக்கவும்-எ-று, (ரு௩)

ஆட்சிமீனங்குடியாகுமாடுமெருதும்நோய்செய்யும்
சூட்சமிதுனந்துயர்விளைக்குந்துய்யநண்டுபெரியாகும்
காட்சிக்கினியபுதல்வருண்டு கன்னிகருமங்கைகூடும்
மாட்சிகோலுந்தேளுமுடன்மனையாள்பெரிதாய்வாழ்வர்களே

(இ-ள்) மீனராசியிற்பதிக்கில்சுபகரமாம்மேஷம்-ரிஷபத்திற்பதித்தால்நோயுண்டாம், மிதுனத்திற்பதித்தால்-துக்கமுண்டாம், கர்க்கடகத்திற்பதித்தால் செல்வமும் புத்திரசம்பத்துமுண்டாம், கன்னியிற்பதித்தால்-நினைத்ததெல்லாங் கைகூடும், தனுசிலும் விரிசிகத்திலும்பதித்தால்-மனைவி புதல்வர்களுடனே சிறப்புற்றுவாழ்வார்கள் என்றவாறு.

கோலமறியில்குறைவயதாங்கொடிதாங்குண்டமீன்சேரில்
சாலமிதுனந்தன்மனையாள்சார்நண்டரியுமகன்வாழ்வாம்
ஏல்கோல்தேள்நீர்ப்பிணியாமிக்கசுறச்சாலின்பமதா
மால்தானுரைக்கவேதமுனிவகுத்தார்புட்பமணிகுழலே

(இ-ள்) மேஷத்திற்பதித்தால், ஆயுசுசீரணித்துப்போகும்- கும்பமும் மீனத்திற்பதித்தால் தீமையைத்தரும் மிதுனத்திற் பதித்தால் மனையாள் நட்புண்டாம் கர்க்கடகத்திலும் சிங்கத்திலும் பதித்தால் புத்திரசம்பத்துண்டாம் தனுசிலும்விருச்சிகத்திலும் பதித்தால், சலதோஷமுண்டாம் மீனத்திலும் கும்பத்திலும் பதித்தால் சுபமுண்டாம்-எ-று. ()

குடிபுகுதுநாள்.

தத்துங்கதிர்சேயிவையாகாசனிபொன்புந்திபுதன்றிங்கள்
அத்தஞ்சித்திரைபுனர்பூசமனுஷஞ்சோதியசுபதியு
முத்திரங்களொருமூன்றுமோணரோவதியிவைநன்றாம்
எத்துங்குடங்தேள்சதுர்த்தியுவாவனைத்யுநீக்கிக்குடிபுகுமே

(இ-ள்) வாரங்களில்- ஞாயிறு- செவ்வாயாகாது-சனி-வியாழம் புதன் திங்கள்நன்றுசட்சத்திரங்களில் அஸ்தம் சித்திரைபுனர்பூசம்-அனுஷம் விசாகம்- அசுபதி-உத்திரம்-உத்திரட்டாதி திருவோணம்-ரோவதிநன்று ராசிகளில் கும்பம் விருச்சிகமாகாது புட்சங்களில் சதுர்த்தி உவா இருத்தைநபாகாது இவைநீக்கி குடிபுகுதவும் என்றவாறு. (எ௫௬)

அட்டமியுவாவிருத்தையருக்கன்சேய்மூலமாதம்
விட்டலும்விஷக்கடிகைவெள்ளியெதிரில்மூடஞ்
சுட்டியவலக்கண்சுக்கிரன்சூலமுமேரோயாதல்
நட்டமாமனைபுகுந்தால்நாசமென்றுரைக்கலாமே

(இ-ள்) உவா-இருத்தைஞாயிறுசெவ்வாயும் மூலமாதமாகியபங்குனி ஆனி-புரட்டாசிமார்கழியும் விருட்டியும் விஷகடிகையும் வெள்ளி எதிரும் மூடம் பாடு வலக்கண்வெள்ளியும் சூலமெதிரும்குடிபுகுவாராயல் நஷ்டமாமென்றவாறு. (எ௫எ)

கடகமுஞ்சிங்கந்தானுங்கதிரவன்திசையிறசெல்லில்
படமுடையரவந்தீண்டும்பார்மனைபாழதாகும்
திடாமனைதன்னிற்புத்துசேர்ந்திடக்காணலாகும்
விடமெனும்விழியிறுனேவிதிவழித்தின்னந்தானே

(இ-ள்) கடகத்திலும் சிங்கத்திலும் - சூரியன்திக்கில் குடிபுகுந்தால் விஷத்தையுடைய பாம்பு கடிப்பதல்லாமல் வீடும் பாழாகி புற்றெழும்பும்-எ-று. (எ௫அ)

துலாமொடுதேளுந்தீதற்கு தோர்ணுதல்செய்வானாகில்
புலாபுலனெல்லாம்பாழாய்ப்பதியுடன்குடிபோமென்று
நிலாவெனும்விழிகண்மாதே நிறைமனையெடுக்கலாகாது
கலாதல்மயன்றானுஞ்சொன்னேன்குறைமயமாந்திக்குகளண்டே

(இ-ள்) துலாத்திலும்- விருச்சிகத்திலும்- தென்றிசையிற் குடிபுகுந்தாலும், மனைகோலினும், தன்னுடைய சம்பத்தையிழப்பதுமன்றி குடும்பமும், நசித்தும்போம்-எ-று. (௱௫௯)

மகரமாய்கும்பமேற்கேவாழ்மனைபுகுவானாகில்
நிகரமாந்தலங்கள்வேறாய்நிறைமனையழிந்தேபோகும்
சிகரமாந்தலைவன்சாவுஞ்சிதைவுறாந்திண்ணமாகும்
ஆகரமாந்தவமுமல்லாதூஆட்சிபுமல்லுகேடே

(இ-ள்) மகரத்திலும், கும்பத்திலும், மேற்கேகுடிபுகினும், மனைகோலினும், அம்மனைநாசமடைவதன்றி யசமானிறந்து குடும்பம் பலவாறு சிதைந்தும்போம் என்றவாறு, (௱௬௰)

மங்கைஞாயிற்றுநாளில்மனைபுகில்வாழ்வுமீறும்
திங்களிலில்லஞ்சேரிற்றிருமகள்கடாக்ஷமுண்டாம்
பங்கமாஞ்செவ்வாய்நாளில் மனைபுகில்சண்டையுண்டாம்
மங்கையேமயனார்சொன்னவண்மையையறிந்துகொள்ளே

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையில் குடிபுகுந்தால் சம்பத்துண்டாம்திங்களிற்குடிபுகுந்தால் இலட்சுமி கடாட்சமுண்டாம் செவ்வாயிற்குடிபுகுந்தால்தீராதசண்டையுண்டாம்-எ-று, (௱௬௧)

பொங்கியபுதனேயாகிற்பேரனவரகத்தில்வாழ்வார்
மங்கியவியாழநாளில்மனைபுகில்வாழ்வுண்டாகும்
புங்குறவெள்ளிநாளிற்பாரியாள்வேசியாவள்
தங்கியசனியிற்போனால்சலிப்பில்லாசுகமதாமே

(இ-ள்) புதவாரத்திற் குடிபுகுந்தால் அம்மனையிற்- சுகித்திருப்பார்-வியாழக்கிழமையிற் குடிபுகுந்தால் சம்பத்துண்டாம் வெள்ளியிற்குடிபுகுந்தால் மனையாள் வேசியாவள் சனிக்கிழமையிற் குடிபுகுந்தால் சுடகாமுண்டாம்யென்றவாறு (௱௬௨)

சுவர்பிளவு

எடுத்தமனையின்சுவர்பிளக்கிலெண்ணிக்கிழக்குமுதலாகத்
தொடுத்துநாசஞ்சிறுகுடனேதுக்கமழகுசுகஞ்சாவு
அடுத்தலாபமரணமுடனுகமிவட்டுத்திசைதனக்கும்
விடுத்துவலமாய்த்தான்கண்டுமிக்கமனைவிளம்பமே

(இ-ள்) எடுத்த மனைக்குள் சுவர்பிளக்கில் கிழக்குமுதலாக எண்ணி தொடுத்துச்சொல்வது கிழக்காகில் நாசம் தென்கிழக்காகில் சிறுகுடு தெற்காகில் துக்கம் தென்மேற் காகில் அழகு, மேற்காகில் சுபம் வடமேற்காகில் சாவு, வடக்காகில் இலாபம், வடகிழக்காகில் மரணமென்றவாறு. (௱௯௩)

புத்தெழும்லட்சணம்.

நடுவுங்கிழக்குமுதலெட்டும்நடுமனைதன்னிற்புத்தெடுத்தால்
நடுவாயெண்ணிப்பலன்சொல்லுமத்னிற்சாவுசெல்வம்தா
மிடியுந்தெற்குத்துக்கமதாமென்னுஞ்சிறியபுத்திரனும்
மடியுமரணநன்மையதாமற்றவியாதியதுவாமே

(இ-ள்) நடுவுங்கிழக்குமுதலெட்டுத் திசையிலும்மனையில் புத்தெடுக்கில் அடைவிலே எண்ணிப்பலன்சொல்வதுநடுவாகில் சாவுகிழக்காகில் செல்வம்தென்கிழக்காகில் மனையிடியுந் தெற்காகில்துக்கம்தென்மேற்காகில்பசியுண்டாம் மேற்காகில் புத்திரருண்டாம்வடமேற்குமரணம் வடக்குநன்மை வடகிழக்கு வியாதியுண்டாமென்றவாறு, (௱௯௪)

செஞ்சிதல்.

செஞ்சிதல்மனையில்வந்துசேர்ந்திடும்பலன்கடன்னே
முன்சொன்னநடுகிழக்குமுதலண்டமெட்டுங்கொள்க
மிஞ்சியகேடுநன்மைவிருத்தமாமின்பமாகும்
மஞ்சுறுமனையேசெல்வமனைப்புமேவாழ்வுமிடை.

(இ-ள்) செஞ்சிதல் மனையிலுண்டாவது நடுவாகில் - சாவு கிழக்காகில், செல்வம் தென் கிழக்காகில், மனையிடியும் தெற்காகில் துக்கம் தென்மேற்காகில் - பசி-மேற்காகில், புத்திரவிர்த்தி வடமேற்காகில், மரணம் வடக்காகில், நன்மை வடகிழக்காகில், வியாதிவுண்டாம் என்றவாறு. (௱௯௫)

ஆயம்.

நடுவுங்கிழக்கு முதலடைவே சுற்றுமுழம்- ௨௰ - நீளம்-௬-அகலம் ௩-ஆக குழி-௨௭.

ஆயம் - ௰௨ - வியம்-௩-யோனி-கெருடன் - நட்சத்திரம் - ரேவதி பக்கம்-திரிதிகை- வாரம்-வியாழம்-ராசி-மீனம் - வம்மிசம் - வைசியன்- அங்கிசம் - பிரதியன் - ௨௯-சுற்றுமுழம்- ௨௪- நீளம் - ௫ - ஆக குழி- ௨௫-க்கு.

ஆயம்-௮-வியம், ௫ - யோனி - சிங்கம்-நாள்-பூரம்-பக்கம் - தசமி-வாரம்-ஞாயிறு ராசி-விருச்சிகம் - வம்மிசம்- விருமன் - அங்கிசம்-தத்தான்வயது-௭௫- சுற்றுமுழம் - ௩௰ - நீளம்-௭-அகலம் - ௫ - ஆக குழி- ௩௫.

ஆயம்-௪- வியம்- ௫- யோனி- கொடி- நாள்-மகம்-பக்கம் - பஞ்சமி-வாரம்-சனி-இராசிகர்க்கடகம்-வம்மிசம்-வைசியன்- அங்கிசம்நரபதி-வயது- ௪௫-சுற்றுமுழம்-௨௪- நீளம்-௯-அகலம்-௫-ஆககுழி ௮௫.

ஆயம்-௰௨ வியம்-௫-யோனியானை - நாள் - ஆயிலியம் - பக்கம்பின்னுவா-வாரம்-வெள்ளி-இராசி- மீனம்-வம்மிசம்,விருமன் - அங்கிசம்-நரபதிவயது-௰௫-சுற்றுமுழம் - ௨௮ - முழநீளம்-௰௧-அகலம்-௫-ஆககுழி-௫௫.

ஆயம்-௮-வியம்-௫-யோனி-ரிஷபம்-நாள்-பூசம்-பக்கம்-தசமி-வாரம்-வியாழம்-ராசி-விருச்சிகம்வம்மிசம்-வைசியன்-அங்கிசம்சன்னியன் வயது-௮௫-சுற்றுமுழம்-௩௨-நீளம்-௰௩-அகலம்-௫-ஆககுழி-௬௫.

ஆயம்-௪-வியம்-௫-யோனி-சிங்கம்- நாள்-புனர்பூசம்-பக்கம்பஞ்சமி-வாரம்புதன்-ராசிகர்க்கடகம்-வம்மிசம்விருமன்-அங்கிசம்-பிரதியன்-வயது-௰௫ சுற்றுமுழம்-௩௯- நீளம்-௰௫-அகலம் ௫-ஆககுழி-௭௫.

ஆயம்-௰௨-வியம்-௫- யோனி - கொடிநாள் - திருவாதிரை பக்கம் பின்னுவா-வாரம்- செவ்வாய்-ராசி-மீனம் - வம்மிசம்- வைசியன் அங்கிசம்-சத்தி-வயது- ௨௫- சுற்றுமுழம் ௨௰௫ - அகலம்-௯-நீளம்-௭-ஆககுழி-௪௯.

ஆயம்-௮-வியம்-௧-யோனி-சிங்கம்-நாள்-சித்திரை-பக்கம்-பிரதமை-வாரம்-சனி-ராசி-விருச்சிகம்-வம்மிசம்-விருமன்-அங்கிசம் அதனன்-வயது-௨௩-சுற்றுமுழம்-௨௮-நீளம்-௧-அகலம்-௭-ஆக குழி-௯௩.

ஆயம்-௰௨-வியம்-௭-யோனி-ரிஷபம்-நாள்-கேட்டை-பக்கம்-துவாதசி-வாரம்-சனி-ராசி-மீனம்-வம்மிசம் சேட்டம்-அங்கிசம்-நிருபதி-வயது-௧-சுற்றுமுழம், ௩௨-அகலம்-௭.

ஆயம்-௪-வியம்-௩-யோனி யானை நாள் திருவோணம் பக்கம்-அஷ்டமி வாரம் சனி ராசி கர்க்கடகம் வம்மிசம் விருமன் அங்கிசம்-பத்தி வயது-௭௪-சுற்றுமுழம்-௩௯-நீளம்-௰௨-அகலம்-௭-ஆக குழி-௯௧.

ஆயம்-௮-வியம்-௯-யோனி-கொடி நாள் உத்தரட்டாதி பக்கம் சதுர்த்தி வாரம் சனி ராசி விருச்சிகம் வம்மிசம் வைசியன் அங்கிசம் தன்னியன் வயது-௭௭-சுற்றுமுழம்-௪௰-நீளம்-௰௫-அகலம்-௭-ஆக குழி-௱௫.

ஆயம்-௰௨-வியம்-௫-யோனி சிங்கம் நாள் கார்த்திகை பக்கம்-பின்னுவா வாரம் சனி ராசி மீனம் வம்மிசம் விருமன் அங்கிசம் கிலிபன் வயது-௨௫-சுற்றுமுழம்-௪௪-நீடம்-௰௭-அகலம்-௭-ஆக குழி ௭௯.

ஆயம்-௪-வியம்-௧-யோனி ரிஷபம் நாள் புனர்பூசம் பக்கம் ஏகாதசி வாரம் சனி ராசி கர்க்கடகம் வம்மிசம் வைசியன் அங்கிசம் ரேகிபன் வயது-௨௨-சுற்றுமுழம்-௪௧-நீளம்-௰௯-ஆக குழி ௱௩௩.

ஆயம்-௮-வியம்-௭-யோனி யானை நாள் பூரம் பக்கம் சதுர்த்திவாரம் சனி ராசி விருச்சிகம் வம்மிசம் விருமன் அங்கிசம் தற்கான் வயது ௯௧ சுற்றுமுழம்-௪௫-நீளம்-௨௪-அகலம்-௭-ஆக குழி-௱௪௭.

ஆயம்-௰௨-வியம்-௩-யோனி கொடி நாள் சுவாதி பக்கம் திரிதிகை வாரம் சனி ராசி மீனம் வம்மிசம் வைசியன் அங்கிசம் நரபதி சுற்றுவயது-௯௧-சுற்றுமுழம்-௫௯.

விரலினியல்பு.

விரல்-௩௧-யோனி ரிஷபம் நாள் மிருகசீரிடம் தெய்வகணம் மேல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல்-௩௩-யோனி சிங்கம் நாள் உத்திராடம் மனிதகணம் தென்சார்பு வடக்குவாசலாம்.

விரல்-௩௫-யோனி கொடி நாள் மகம் ராக்ஷதகணம் கீழ்சார்பு மேற்குவாசலாம்.

விரல்-௩௭-யோனி யானை நாள் உத்திராடம் மனிதகணம் வடசார்பு தெற்குவாசலாம்.

விரல்-௩௯-யோனி சிங்கம் நாள் சித்திரை ராக்ஷதகணம் தென்சார்பு வடக்குவாசலாம்.

விரல்-௪௧ யோனி சிங்கம் நாள் ரோகணி மனிதகணம் தென்சார்பு வடக்குவாசலாம்.

விரல்-௪௩-யோனி கொடி நாள் பூராடம் மனிதகணம் கீழ்சார்பு மேற்குவாசலாம்

விரல்-௪௫-யோனி யானை நாள் ஆயிலியம் இராட்சதகணம் வடசார்பு மேற்குவாசலாம்.

விரல்-௪௭-யோனி ரிஷபம்நாள் பூரட்டாதி மனிதகணம் மேல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல்-௪௯ யோனி சிங்கம் நாள் சித்திரை இராட்சதகணம் தென்சார்பு வடக்குவாசலாம்.

விரல்-௫௧- யோனி கொடி நாள் கார்த்திகை இராட்சதகணம் கீழ்சார்பு மேற்குவாசலாம்.

விரல்-௫௩-யோனி யானை நாள்மூலம் இராட்சதகணம் வடசார்பு தெற்குவாசலாம்.

விரல்-௫௫-யோனி ரிஷபம் நாள் பூசம் தெய்வகணம் மேல்சார்பு தெற்குவாசலாம்.

விரல்-௫௭-யோனி சிங்கம் நாள் அனுஷடம் ராட்சதகணம் தென்சார்பு வடக்குவாசலாம்,

விரல் ஐம்பத்தொன்பது யோனி கொடி நாள் அஸ்தம் தெய்வகணம் கீழ்சார்பு மேற்குவாசலாம்.

விரல் - ௬௧ - யோனி யானை நாள் பூரணி மனிதகணம் வடசார்பு தெற்குவாசலாம்.

விரல் - ௬௨ - யோனி ரிஷபம் நாள் கேட்டை ராட்சதகணம் மேல் சார்பு கிழக்குவாசலாம்.

விரல் - ௬௩ - யோனி சிங்கம் நாள் புனர்பூசம் தெய்வகணம் தென் சார்பு வடக்குவாசலாம்.

விரல் - ௬௪ - யோனி கொடி நாள் அவிட்டம் ராட்சதகணம் மே ல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல் ௬௬ - யோனி யானை நாள் உத்திரம் மனிதகணம் வடசா ர்பு தெற்குவாசலாம்.

விரல் - ௭௧ - யோனி ரிஷபம் நாள் அசுபதி தெய்வகணம் மேல் சார்பு கிழக்குவாசலாம்.

விரல் - ௭௨ - யோனி சிங்கம் நாள் அனுஷம் தெய்வகணம் தென் சார்பு வடக்குவாசலாம்.

விரல் ௭௩ - யோனி கொடி நாள் திருவாதிரை மனிதகணம் கீழ் சார்பு மேற்குவாசலாம்.

விரல் - ௭௪ - யோனி யானை நாள் திருவோணம் தெய்வகணம் வட சார்பு தெற்குவாசலாம்.

விரல் - ௭௬ - யோனி - ரிஷபம் நாள் பூரம் மனிதகணம் மேல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல் - ௮௧ - யோனி சிங்கம் நாள் ரேவதி தெய்வகணம் தென் சார்பு வடக்குவாசலாம்.

விரல் - ௮௨ - யோனி - கொடி நாள் விசாகம் இராட்சதகணம் கீழ் சார்பு - மேற்குவாசலாம்

விரல் - ௮௩ - யோனி யானை நாள் மிருகசீரிடம் தெய்வகணம் வட சார்பு தெற்குவாசலாம்.

விரல் - ௮௪ - யோனி ரிஷபம் நாள் உத்திராடம் மனிதகணம் மே ல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல் - ௮௬ - யோனி சிங்கம் நாள் மகம் இராட்சதகணம் தென் சார்பு வடக்குவாசலாம்.

விரல்- கூக-யோனி கொடி நாள் உத்திரட்டாதி மனிதகணம் கீழ் சார்பு- மேற்குவாசலாம்.

விரல்- கூங-யோனி- யானை-நாள்-சுவாதி-தெய்வகணம்- வடசார்பு தெற்குவாசலாம்.

விரல்- கூரு யோனி - ரிஷபம்-நாள்- ரோகணி மனிதகணம்- மேல்சார்பு- கிழக்குவாசலாம்.

விரல்-கூஎ- யோனி- சிங்கம்-நாள்- பூராடம்- மனிதகணம்- தென் சார்பு வடக்குவாசலாம்,

விரல்- கூகூ-யோனி-கொடி நாள்-ஆயிலியம் இராட்சதகணம் கீழ் சார்பு மேற்குவாசலாம்.

விரல் - ளக- யோனி யானை நாள் பூரட்டாதி மனிதகணம் வடசார்பு தெற்குவாசலாம.

விரல் - ளங - யோனி ரிஷபம் நாள் சித்திரை ராட்சதகணம் மேல்சார்பு கிழக்குவாசலாம்.

விரல்-ளரு- யோனி-சிங்கம்-நாள்- கார்த்திகை-தென் சார்பு- வடக்குவாசலாம்.

விரல் - ளஎ - யோனி-கொடி நாள்மூலம் ராட்சகணம் - கீழ்சார்பு மேற்குவாசலாம்.

விரல் - ளகூ - யோனி யானை நாள் பூசம் தெய்வகணம் வடசார்பு தெற்குவாசலாம்.

மனைக்குடையவன்- கையினால் - நாலுசாண்கோல் அளவெடுத்துக்கொண்டு-கிழக்கு - மேற்கு- தெற்கு - வடக்கு-அளந்தகோலை துகைபடுத்தி துகைகண்ட கோலாம்பெருக்கி எழால் கழிக்க - க-மிகுந்தால் தனவானுயிருப்பான்- உ - மிகுந்தால் புத்திரபாக்கியவானுயிருப்பான்- ங-மிகுந்தால்- ஐஸ்வரியனுயிருப்பான்-ச-மிகுந்தால் ரோகமின்றிபாக்கியவந்தனு யிருப்பான்-ரு- மிகுந்தால் குடியோடிப்போவான்அல்லது அக்கினிபாதையாகும்-சா - மிகுந்தால்வியாதியால்மெலிவான்-எ-மிகுந்தால் மரணம் இந்தபடி-ச-புறமுஞ்சுவருட்பட அளந்து பார்த்துக்கொள்ளவும்.

புத்திபேதலின்பலன்.

விருமத்தானத்தில் மரணம் ஆதித்தனில்செல்வம் இவையிரண்டிற்கும் புத்திர னுண்டாம் அக்கினிக்கும் விருமனுக்கும் நடுவில் இன்பம அக்கினிக்கு ஆதித்தனுக்கும் நடுவில் பந்துக் களினால் விதனம் இமனில்சாவு- இயமனுக்கும் அக்கினிக்கும் நடுவில் துக்கம் இயமனுக்கும் விருமனுக்கும் நடுவிற்பாதி நிருதியில் புத்திரலாபம் நிருதிக்கும் யமனுக்கும் நடுவில் சத்துருவுண்டாம் நிருதிக்கும்-விருமனுக்கும் நடுவில் இன்பம்வருணனில் அர்த்தலாபம் வருணனுக்கும் நிருதிக்கும்நடுவில் ஸ்த்திரீ வேறு வருணனுக்கும் விருமனுக்கும், நடுவில்ஸ்திரமுண்டாம் வாயுவினில் பந்துக்களுண்டாம் வாயுவுக்கும், வருணனுக்கும்நடுவில்கலியாணம் வாயுவுக்கும்விருமனுக்கும், நடுவில்வியாதிகுபேரனில் கேடுண்டாம் குபேரனுக்கும் ஈசானியனுக்கும் நடுவில் அர்த்த ஆனி ஈசானியத்திற்கும் விருமத்திற்கும், நடுவில் இன்பம்ஈசானியத்துக்கும் ஆதித்தனுக்கும் நடுவில்நன்மைஆதித்தனுக்கும்விருமனுக்கும் நடுவில் உத்தமம். (௱௬௫)

குளம்வெட்டுமிலட்சணம்.

கன்னிவக்கினிமூலைக்குள்ளமாங்குழிகுளங்கள்
உள்ளடெனிலடியாள்சாவருநயிருடன்பொருளும்போகுந்
தென்றிரையேமதிக்கிற்சிறப்பில்லைமிடியேயாகும்
இன்றியகொடியாள்திக்கிலிலட்சமாம்பொருள்வந்தெய்தும்

(இ-ள்) அக்கினிதிக்கில் குளம்வெட்டினால் மனையாளிறப்பதுமன்றி உயிர்ச்சேதமும் பொருட்சேதமு முண்டாம் இயமன்திக்கில் வெட்டில் அக்குளம் உபயோகமில்லாமல் போவதுமன்றி உடைவனுக்கும் தரித்திரத்தை யுண்டாக்கும் ஈசானிய திக்கில் வெட்டில் ஐஸ்வரியமுண்டாம்-எ-று, (௱௬௬)

ஆம்பொருள்கிழக்குச்சோமனத்தமுறுங்கல்விதானுந்
தாமுதல்பலவுஞ்சேருந்தையல்கேள்நிருதிதிக்கில்
வேம்படுந்தீயிற்பட்டுமிக்கநோய்வறுமைகாணும்
நாமிதுவுரைத்ததல்லநன்மயன்வகுத்தவாறே

(இ-ள்) கிழக்கில் வெட்டினால் பொருள்விர்த்தியும் கல்விவிர்த்தியுமுண்டால் நிருதிதிக்கில் வெட்டில் குளத்திற்குடையவன் மனைக்கு அக்கினிப்பிரிதியும் நோயும் வறுமையுமுண்டாம்-எ-று. (௱௬௭)

சிங்குழம்பருந்தும்பூனேசிறந்திடுந்திக்கிலேதான்
அங்கொருகுளமுண்டாகிலதின்பலன்மனைக்கேயாகா
தங்கியக்னிமேற்குத்தானுமீசானதிக்கில்
மங்கைகேள்குளத்தினலேமனையினில்வாழ்வுநல்லுமை

(இ-ள்) கிழக்கிலும், தெற்கிலும், வெட்டில் வீட்டிற்காகாது மேற்கிலும், ஈசானியதிக்கிலும் வெட்டில்சுபகாமுண்டாம்-எ-று, (௱௬௮)

கிணறுவெட்டுமிலட்சணம்,

வேறு.

வடபாலீசன்கிழக்கேகடுமிவ்வாறுமேற்குக்கிணறுகில்
படர்வாளின்பச்சுகங்கொடுக்கும்பாலன்பரணம்வாயுவினில்
அருநோய்நிருதிநமன்மரணம்அங்கியாகில்பின்னேயில்லை
நடுவேயாகில்பொருட்சேதம்நகரமனைகள்தன்னிலுமே

(இ-ள்) வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும், கிணறுவெட்டில் மங்களகாமுண்டாம் வாய்வுதிக்கில் வெட்டினுல் புத்திரநாசமுண்டாம் நிருதிதிக்கில் வெட்டினுல் நோயுண்டாம்இயமன்திக்கிலெனில் மரணமுண்டாம் அக்கினிதிக்கிலெனில் மலடனுவன் மனைக்குநடுவிலானுல் பொருட்சேதமுண்டாம்-எ-று, (௱௬௯)

வேறு.

தேடுமவர்சிந்தைதனிலேல்புமையுமீசன்
நாடுமவர்மாகுடியிலேயணிநவசோமன்
மாடுகுலேகொண்டல்வருணன்றிசையின்மீதில்
கேடிலுமிகுந்தநலுமாய்கிணறுவெட்டில்

(இ-ள்) வருணன் திசையில் வெட்டினுல் சர்வேசுரனுடைய கிருபையால் சகல பாக்கியமு முண்டாம்-எ-று, (௱௭௰)

எடுத்தகிணறங்கியும் யமனிருதிவாய்வும்
விடுத்தபிரமனடுவினிற் கிணறுவெட்டில்
அடுத்தவருமக்களும்விந்துடைமைபாழாய்
கெடுத்தடியாமெனவேயோடதுகிடைக்கும்

(இ-ள்) அக்கினிக்கும் இயமனுக்கும் நிருதிக்கும் வாய்விற்கும்நடுவில் வெட்டல் தன்னையடைந்தவர்களும் புத்திரர்களும் நோயால் இறப்பதுமல்லாமல் மனைக்குடையவன் செல்வத்தையுமிழந்து இரந்து தின்பன் —எ-று, (௱௭௧)

உ

சிவமயம்.

செய்முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

மனையடி சாஸ்திரத்தில்

கெர்ப்பப்பொருத்தம்.

வெண்பா.

சாணுன்குகோல்கொண்டு தப்பாமல்நான்கெல்லை
கோணமலேயளந்து குழிமாறி—பூணர்ந்து
இப்புவியின்மாதே யிருநான்கிற்கீவீரால்
கெர்ப்பக்கிரகக் கோள்.

அஞ்சிலெச்சாள்வராறிலருந்துப்ச
மிஞ்சியமூன்றொன்றும் வேள்வியாம்—துஞ்சாமல்
நாலெட்டிரண்டு நாசமாமம்மனைக்கு
மேலெட்டே சொல்லவிதி.

(இ-ள்) கெர்ப்பநிலையறியும்படி யஜமானுடைய சாணால் நான்குசாணின், கோலால் கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு கோணமலளந்து இரண்டு துகையும் குழிமாறி வந்ததுகையை எட்டிற் கழிக்க எட்டுக்குள்ளாகவந்தது, ஐந்துவந்தால் அதுசுபகெர்ப்பம் அதற்குச் சகல்காரியமுஞ் செயம்பொருந்தி நடக்கும் - ஆறுவந்தால் காக்கைகெர்ப்பம் அது மத்திபம்நீச்சனுக் கிருக்கவேண்டியது, ஒன்றுவந்தால் கருடகெர்ப்பம் நால்வகைச் சாதிக்கும் பொருந்தியிருக்கும் - மூன்றுவந்தால் சிம்மகெர்ப்பம் - அது உத்தமம்- ஏழுவந்தால் கெஜகெர்ப்பம் அது உத்தமபலன், இரண்டுவந்தால் புருகெர்ப்பம்-அது மத்திமபலன் வேடனுக்காகும்; நான்குவந்தால் சுவானகெர்ப்பம் - அது மத்திபம் குறவர் பம்பாடிக்காகும், எட்டுவந்தால் கழுதைகெர்ப்பம் - அதுமத்திபம மனைமுடியாது அல்லது ஒருவேளை முடிந்தாலும் அந்த மனை பாழடைந்துபோகும் அது தொம்பரவர் குடுகுடுப்பைக்காரர் மயில் மான் இவர்களுக்குப் பொருந்தின மனையாகும்—எ-று.

(உ)

ஆதாயபலன்.

கலிவிருத்தம்.

பூமலிநான்குசாண் பொலிந்தகோலினே
தேமலிமனைதனைக் கெல்லைத்தேடிய
தாமலிபூருவந் தழைத்தவுத்தமங்
காமலியாயமாங் கணக்கின்சிரதே

(இ-ள்) யஜமான்சாணால் நான்குசாண் கோல்கொண்டு கிழக்குமேற்கு வடக்கு தெற்கு இந்நான்குதிக்குமளந்து இருதுகையுங்குழிமாறித் துகையை ஆயமாய் வைத்துக்கொண்டு திசைப்பொருத்தத்திற்கும்பார்க்கவேண்டியது—எ-று. (௩)

சீர்பெருமாயத்தைச் சேரவெட்டினிற்
கூர்தரவெற்றிநற் குலவுபன்னிரண்
டோர்தரக்கழித்திட் டொன்றிலக்கமே
ஏருமாதாயமென் றிசைத்ததந்தையே

(இ-ள்) முன்னாயத்தைஎட்டிற்பெருக்கி வந்ததொகையை பன்னிரண்டிற் கழிக்க பன்னிரண்டிக்குள்ளாக வந்தது ஆதாயமென்றறியவுமென்றவாறு. (௪)

மேவியவொன்றிரண் டேகபோகமா
மேவியதிரிசதிர் கீர்த்திசௌரியங்
தாவுமைந்தாறினிற் றனியந்தன
மேவுமேழெட்டினிற் சுகமெய்ஞ்ஞானமே

(இ-ள்) ஆதாயம் ஒன்று - இரண்டுவந்தால் ஏகபோகமாய்நடக்கும், மூன்று-நான்குவந்தால் கீர்த்தியுஞ் சௌரியமும்நடக்கும், ஐந்து ஆறு வந்தால் தனதான்னியமுண்டாகும், ஏழு - எட்டுவந்தால் சுபமும் மெய்ஞ்ஞானமும் நடக்கும்—எ-று. (௫)

எட்டுடனொன்றினிற் கியன்றபோகமாம்
மட்டுறுந்தசந்தனில் வசியுமன்னுமே
எட்டவகாதசி யிலியதாமமாஞ்
சட்டமாந்துவாதசி சமஸ்தாநன்வமயே

(இ-ள்) ஒன்பதுவந்தால் மிகுந்த போகபாக்கியம், பத்துவந்தால் சகலகாரியங்களும் வசியமாகும், பதினொன்றுவந்தால் சுபசிட்சையுண்டாகும், பன்னிரண்டுவந்தால் சகலசுபம் உத்தமபலனைப் நடக்கும்— என்றவாறு. (௬)

ஆதாயச்செலவு.

நன்மையாமாயத்தை நவத்திற் பெருக்கியே
பொன்னியபத்தினிற் பொருந்தநீக்கினி
லன்னிலைசிலைவதா மறியவொன்றினிற்
குன்னியவனிரண் டேத்தங்குன்றுமே

(இ-ள்) மூன் ஆயத்தை ஒன்பதிற்பெருக்கி - பத்தில் கழிக்க பத்துக்குள்ளாகவந்தால்செலவு, ஒன்றுமிருந்தால் எல்லாங் குன்றிப்போகும், இரண்டிற்கு வீடு தீப்படும் எ-று, (௭)

குன்றிடமூன்றினிற் குலவுநற்சியம்
வென்றிசொனலினில் விளங்குபுத்திரர்
ஒன்றுமைவையந்தினி லோங்குநச்சியம்
என்றனர்தரித்திர மேழுக்கென்னவே

(இ-ள்) மூன்றுவந்தால் குடும்பம் சுபேட்சமாயிருக்கும், நாலுவருமாகில் புத்திரவிர்த்தியுண்டாகும் ஐந்துமிருந்தால் விருதாவானசெலவுநேரிட்டுவரும், ஆறுமிருந்தால் ஆரோக்கியமுண்டாகும், ஏழுமிருந்தால் தரித்திரமாய்நடக்கும்-எ-று. (௮)

என்னவெட்டதனினி லிலக்குமிவாசமாம்
பன்னியநவத்தினிற் பாலராவிபோம்
முன்னியதசமதி லுத்தமந்தரும்
மன்னுவெங்கோலெனக் கெடுத்துரைத்ததே

(இ-ள்) எட்டுவந்தால் இலட்சுமி வாசமாயிருப்பாள், ஒன்பதுவந்தால் புத்திரநாசமாகும், பத்துவந்தால் உத்தமம்-எ-று. (௯)

யோனிப்பொருத்தம்.

உரைத்தவாயத்தைப் புரைந்துமூன்றினிற்
பொருத்தமாத்திரவட்ட மத்திற்போக்கிட
விருத்தியாம்நின்றது விளங்குயோனியன்
தரித்தியாய்க்கரன் கரைபஞ்சேர்த்ததே

(இ-ள்) மூன் ஆயத்தை மூன்றில்பெருக்கி எட்டுக்குள்ளாக நின்றது அஷ்டயோனியென் றறியவும்-எ-று, (௰)

சொற்றதிலேகமாஞ் சுபுத்திரபாக்கியம்
மற்றிரண்டதனில்பா கன்கமன்றும்மே
சுத்தமூன்றிச்செயுஞ் தலங்குநாலினிற்
கத்துசுவானம்பிணிக் காட்டுமென்பரே

(இ-ள்) யோனி ஒன்றுமிகுந்தால் கெருடயோனி - எந்நாளுங்குறைவில்லாப் பாக்கியமுண்டாகும், இரண்டுமிகுந்தால் பூனையோனி அதற்குக்கலகம், மூன்றுமிகுந்தால் சிம்பயோனி- செயப்பொருந்தும், நான்குமிகுந்தால் சுவானயோனி- எந்நாளும்பிணியாயிருக்கும்-எ-று, (௰௧)

காட்டியவைந்தினில் சற்பங்கனதனம்
பூட்டியநந்தையர் கரதம்பொன்னிருக்
கூட்டியவேர்க்கசங் குலவுறசுகம்
நீட்டியவாயச மெட்டில்நிஷ்ப்பலம்

(இ-ள்) ஐந்துக்கு சற்பயோனி - கனம்பொருந்தியதனம் பெருகும், ஆறுவருமாகில் எலியோனி- எல்லாப்பொருளும் அற்று நிற்பாக்கியமாகும், ஏழுவருமாகில் கெசயோனி - அந்த குடும்பஞ் சுபேட்சமாயிருக்கும், எட்டுவருமாகில்முயல்யோனி- அதற்கு ஒன்றுமில்லாமல் நிற்பாக்கியமாகிவிடும்-எ-று, (௰௨)

நக்ஷத்திரப்பொருத்தம்.

பலமதாமாயத்தைப் பாரிலெட்டினில்
நலமதாயேத்திமூ வொன்பதாற்குநாள்
அலகிடக்கழிக்கவோ வஸ்வனிற்பய
னிலகியமுசியம்வந் தெய்துமென்டரே

(இ-ள்) மூன்ஆயத்தை எட்டிற்பெருக்கி இருபத்தேழிற்கொடுக்க அதற்குள்ளாக நின்ற நக்ஷத்திரம் ஒன்றுமிகுந்தால் அஸ்வனி, அதற்குவசியம் பொருந்திநடக்கும்-எ-று, (௰௩)

எண்பதாமிரண்டுசொற் கினியமாரணை
பின்புகார்த்திகைப் புகைபதாமனல்
வன்புறுமிரோகணி வசியமெய்துமே
அன்புறுமான்றலை யதிகநாசமே

(இ-ள்) இரண்டிற்குப் பரணி-அதற்குட்பலன் வீடுகட்டிமுடிவதற்கு ள்ளாக யஜமானன் மரணத்தையடைவான், மூன்றிற்குக் கார்த்திகை-அதற்கு அந்தவீடு தீப்பட்டுபோகும், நான்குக்கு உரோகிணி-அதுவே யம்பொருந்தி நடக்கும், ஐந்துக்கு மிருகசீரிடம்- அதனால் அந்தவீடு பாழடைந்துபோகும்-எ-று. (௨௪)

ஆதிரை-சயம்புனர் பூசம்பாலராம்
ஓதிமபூசங்கா லொழியும்பாம்பிது
மேதமில்வேள்விவ ளைவிளங்கெலி
பேதமிலுத்தம மென்றுபேசினார்

(இ-ள்) ஆறுவருமாகில் திருவாதிரை-அதனால் குறைவில்லாத செல்வமுண்டாகும், ஏழுவருமாகில் புனர்பூசம்- அதனால் புத்திரபாக்கியம், எட்டுவருமாகில் பூசம்- அதனால் வங்கிஷமற்றுப்போகும் ஒன்பதுவரு மாகில் ஆயில்யம்-அதனால் முன்சொல்லியபடி நடக்கும், பத்துவருமா கில் மகம்-பதினொன்று வருமாகில் பூரம் - இவ்விரண்டிற்கும் உத்தமத் தில் மத்திமபலு நடக்கும்-எ-று. (௨௫)

பேசியுத்தரம் பெருகுதன்மையின்
நாசமாமச்சனேய் நன்றுக்மென்பினெ
பாசமாஞ்சோதி சுகம்பராய்விடும்
நேசமிலாமொரம் நேருந்துன்பமே

(இ-ள்) பன்னிரண்டுக்கு-உத்தரம்- அதனால் நாளுக்குநாள் குறைவி ல்லாச்செல்வம் பெருகிவரும், பதின்மூன்றுக்கு-அத்தம்-அதனால் அந் தமனை நாளுக்குநாள் பாழடைந்துபோகும், பதினான்குக்கு-சித்திரை-அதனால் எந்நாளும் பிணியாயிருக்கும், பதினைந்துக்கு - சுவாதி- அத னால் நாளுக்குநாள் சுகம்பெருகிவரும், பதினாறுக்கு-விசாகம் அதனால் எந்நாளுந் துன்பத்தை விளைவிக்கும்-எ-று. (௨௬)

நேர்பெறுமனுஷ முத்தமனென்றிலா
கூறியகேட்டைக் கொடுமைமூலத்திற்
பாழியபிணியுறும வாவியாவிபோம்
மூறியகடைக்குள முறக்வுநற்சுகம்

(இ-ள்) பதினேழுக்கு-அனுடமிருந்தால்-அதனால் சகலமும் உத்தம பலனும் நடக்கும், பதினெட்டிக்குக் கேட்டைவருமாகில் - அதனால் எ ந்நாளுங் குடும்பவிரோதமும் பகையுமாயிருக்கும், பத்தொன்பதிற்கு-மூலம் - அதனால் அந்த மனையின் யஜமானிக்கு நாடோறும் மாறாத பிணியாயிருக்கும், இருபதுக்குப் பூராடம்- அதனால் அந்த மனைநாளு க்குநாள விர்த்தியில்லாமல் குலநாசமற்றுப்போகும், இருபத்தொன்று க்கு - உத்தராடம் - அதனால் நாள்தோறுஞ் சுகம்பெருகி வரும் என்ற வாறு. (௯எ)

சுகமெலாந்துரோகமாந் துன்பவட்டமே
அகமனையகற்றும்போ ரதுசௌபாக்கியம்
மிகபூரட்டாதிகால் மாநகரற்றுபோம்
சகமல்ரேவதி சாரும்ரோகமே

(இ-ள்) இருபத்திரண்டிற்குத்-திருவோணம்-நின்று-அதனால் யாதொ ருசுகமுமில்லாம லிருக்கும், இருபத்து மூன்றுக்கு-அவிட்டம் - நிற்கு மானால்-அதனால் அந்தமனை கட்டினவனுக்கில்லாமல் மற்றொருவன் பக் கஞ்சாரும், இருபத்து நான்குக்குச் - சதயம் - நிற்குமானால் அதனால ந்த மனையில் அஷ்ட இலட்சுமிவாசமாயிருப்பாள், இருபத்தைந்துக்கு பூரட்டாதி-நின்றால் அதனால் அந்தமனைக்காரன் தலையோடே வங்கிஷ மற்றுப்போகும், இருபத்தாறுக்கு - உத்திரட்டாதி - நிற்குமானால் அ தனால் எந்நாளும் போகபாக்கியமா யிருக்கும், இருபத்தேழுக்கு இரே வதி - வந்து நிற்குமானால் அந்தமனை எந்நாளும் பிணியாயிருக்கும் என் றவாறு. (௯அ)

வாரப்பொருத்தம்,

சாறுமுன்னுயகத்தை தனித்தவொன்பதி
லேரவேபெருக்கி யேழுக்கிந்தமீதியை
வாரமாதினகரன் வருங்குரோதமே
சேரவேசோமனிற் செழிப்புண்டாகுமே

(இ-ள்) முன் ஆயத்தை ஒன்பதிற்பெருக்கி யேழிற்கீந்த மிகுதிவாரம், ஒன்றுக்கு-ஆதிவாரம்-நின்றால்- அதனால் அந்தமனையில் எந்நாளுந் குரோதமே நடக்கும், இரண்டிற்குச் சோமவாரம் - நின்றால்- அதனால் நாளுக்குநாள் செழித்து அதிக சந்தோஷமுண்டாகிவரும். (௰௯)

ஆருமங்காரக னர்த்தநாசமாஞ்
சேகரம்புந்தியிற் சேர்சவுக்கியம்
வாகமாங்குருவினின் மன்னும்புத்திரர்
சோகநீர்ச்சுங்கநீர்ச் சொல்லுநன்மையே

(இ-ள்) மூன்றுக்கு மங்களவாரம்-நின்றால்- அதனால் பழம்பொருளும் புதுப்பொருளுமில்லாமல் அற்றுப்போகும், நாலிற்குப்- புதவாரம்-நின்றால் அதனால் இலட்சுமி வாசமாயிருப்பாள், ஐந்திற்குக் குருவாரமாகில்-அதனால் புத்திர சம்பத்துண்டாயிருக்கும், ஆறுக்குள்- சுக்கிரவாரம்-நின்றால் அதனால் சகலகாரியமும் நன்மையாய் நடக்கும், ஏழில் சனிவாரம் - நின்றால் அதனால் கலகமும் சோரபயமும் நடக்கும் என்பவாறு, (௨௰)

நவாங்கிஷப்பொருத்தம்.

சொல்லியவைந்தினிற் சொரிகுரோதமாம்
நெல்லலாமாயத்தை நேர்ந்தநாலிற்செய
துல்லியநவத்தினிற் றொடர்ந்தகாலரும்
நெல்லெலாங்கிடமென நிகழ்த்துவார்களே

(இ-ள்) முன்சொல்லிய ஆயத்தை நாலிற்பெருக்கி ஒன்பதில்கழிக்க ஒன்பதுக்குள்ளாகவந்தது நவாங்கிஷம்-எ-று. (௨௧)

நிகழ்த்தியதட்சரம் நெற்பாததாம்
புகழ்த்தியேபோகித்து நன்மைசத்தியில்
விகழ்த்துமாரோக்கியம் வீசுந்தானியந்
தொகுத்துலாயம்மெனச் சொல்லுவாரரோ

(இ-ள்) ஒன்றுக்குத் தட்சகர அங்கிஷம் அதனால்எங்காளும்நிலைபெற்று வாழ்வான்; இரண்டிற்கு சோமகானங்கிஷம்- அதனால் போகபாக்கியத்தை அனுபவிப்பான், மூன்றுக்கு சுத்தியங்கிஷம்- அதனால் ஆரோக்கியவசியம், நாலுக்கு புஷ்கராங்கிஷம்-அதனால் தாளியம் விருத்தியாயிருக்கும், ஐந்துக்கு குருவங்கிஷம்- அதனால் இலாபம்தொடர்ச்சியாயிருக்கும்-எ-று. (உஉ)

நல்லதேதற்பதி கவில்கலிற்பனிற்
சொல்லியகலகமாஞ் சோரனிப்பிறந்த
பெல்லலாமிராகுதன் னடுத்தமத்திபம்
புல்லுபேரேசியன் புகலுமுத்தமம்

(இ-ள்) ஆறுக்குச் சுக்கிர அங்கிஷம்-அதனால் நல்லாசை யோகபலன் நடக்கும், ஏழுக்குச் சனியங்கிஷம் - அதனால் அந்தமனையில்கலகமும் ஜனவிரோதமுங் களவும்நடக்கும், எட்டுக்கு இராகு அங்கிஷம்அதனால் சகலமும் மத்திமபலனும் நடக்கும், ஒன்பதுக்கு கேது அங்கிஷம் அதற்குச் சகலமும் உத்தமம்-எ-று. (உ௩)

சாதிப்பொருத்தம்.

புகன்றவாயத்தை பொன்பதிற்பூட்டியே
விகன்றமன்னவர் வசியர்வெற்றியுநம்
அகன்றசூத்திரர்க்காருந் துயரங்கள்
புகன்றகோகிலம்போல்மொழிமங்கையே

(இ-ள்) முன்சொல்லிய ஆயத்தை ஒன்பதிற்பெருக்கிநாலிற்கழிக்கமீதலுக்குள்ளாகவுந்தது சாதி- ஒன்றாகில், பிராணசாதி- இரண்டாகில், க்ஷத்திரியன்- மூன்றாகில், வைசியன் - இந்தமூன்று, சாதிக்குச்சகலகாரியமும் வசியமாம் நாலாகில், சூத்திரசாதி அது எந்நாளுஞ்சுகமில்லாமல் துயரத்தையே கொடுக்குமென்றவாறு. (உ௪)

திதிப்பொருத்தம்.

என்னுமுன்னயத்தையேய்ந்தவொன்பதிற்
பன்னியமுப்பதிற்கழிக்கச்சேட்மே
நன்னியமுதற்றிதிநவமிரண்டினில்
அன்னியத்திரிதிகைபணுகுநற்செயம்

(இ-ள்) முன்சொல்லிய ஆயத்தை ஒன்பதிற்பெருக்கிப் பூர்வபக்ஷம் பதினைந்தும் அமரபக்ஷம்பதினைந்தும் ஒன்றாய்ச்சேர்த்து ஒன்பதிற்பெருக்கிய தொகையை முப்பதிற்கழிக்க அதற்குள்ளாக முன்பதினைந்து வரைக்கும் பூர்வபக்ஷத்திதி, பதினைந்துக்குமேல்முப்பதுவரையில் அமரபக்ஷத்திதி, அதன்பலன் ஒன்றுக்குப் பிரதமை உத்தமம் இரண்டுக்கு விதியை உத்தமம் மூன்றுக்குத் திரிதிகை- செயமாம் என்றவாறு. ( )

சயமிலே சதுர்த்தியைச் சார்ந்தபஞ்சமி
நயமுளசிறுவரானந்தையாயுள்ளம்
வயமுளசஷ்டியேல்வயங்குமுற்பலன்
வியப்பிணிவந்தனில்லாசஞ்சாருமே

(இ-ள்) நாலுக்கு- சதுர்த்தி, அபஜெயமாம் ஐந்துக்குப் பஞ்சமிபுத்திரசம்பத்துண்டாம், ஆறுக்கு சஷ்டி, புத்திரவிருத்தியுண்டாம் ஏழுக்கு சப்தமி, அதனால் நல்லயோகபாக்கியமுண்டாம் எட்டுக்குஅஷ்டமி, அந்தமனையில் எந்நாளும் வியாதியேபெருகும் ஒன்பதிற்கு நவமி, அந்தமனை தீபமில்லாமல்பாழடைந்துபோமென்றவாறு. (உகூ)

சார்தசம்பாக்கியந்தங் கெகாதசஞ்
சிறுமத்திபந்துவாதசஞ் செம்மலாம்
பாதிராயோதசிபக்கி சம்பத்ததாம்
ஓர்பதிநான்கதேல்நாசஞ்சாருமே

(இ-ள்) பத்துக்குத் தசமி, அதனால் பாக்கியமுண்டாகும், பதினொன்றுக்கு, ஏகாதசி, அதனாலந்தமனையில் கோபமுஞ்சிறுமையுமுண்டாகும், பனிரண்டிற்குத் துவாதசி, அதனால் அன்னவஸ்திரங்குறைவில்லாம நடக்கும், பதின்மூன்றுக்குத் திரயோதசி, அதனால் நாளுக்குநாள் சம்பத்து பெருகும் பதினான்குக்குச் சதுர்த்தி, அதனால் அந்தமனை பாழடைந்துபோமென்றவாறு; (உஎ)

ஏறியபூரணையாகிலுத்தமங்
கூறியகுருவுமேற்கொள்ளக்கயாமித்தி
மேறியவிருகதிர்சேரவோர்திதி
வேறியல்லையெனவிளம்பினரபோ

(இ-ள்) பதினைந்துக்குப் பௌர்ணமி, அதனால் எல்லாககாரியமும் உத்தமபலனும் நடக்கும், பதினைந்துக்கும், பதினைந்துக்குமேல். பதினாறுமுதல் முப்பதுவரையில் அமரபக்ஷத்திதி, அதற்குப்பூர்வபக்ஷப் பிரகாரம் நடக்கும் அதற்கு மேலில்லையென்-று. (உ அ)

இராசி பொருத்தம்.

நாட்டியவாயத்தை நாலிலேற்றியே
ஈட்டிமுன்னூன்கினுக்கியநின்றது
கூட்டியவொன்றதேற்குலவுமேஷமா
மீட்டியவிரண்டினில்ரிஷபமாகுமே

(இ-ள்) முன்சொல்லிய ஆயத்தை நாலிற்பெருக்கி பனிரண்டிற்கழிக்க அதற்குள்ளாக வந்தசேடம்-ஒன்றுக்கு மேஷம் அதனால்குடும்பவிருத்தியாம் இரண்டிற்கு ரிஷபம் அதனால் சகலரும்மதிக்கத்தக்க பெருமை யுண்டாகு மென்றவாறு, (உகூ)

மதித்தமூன்றுடன்மன்னுநல்லிடெனிற்
கதித்தநற்செயமரிவசியங்காட்டுமே
துதித்தபென்ஞானமாந்துலாமும்யோகமாம்
படித்ததேள்நலந்தரும்பலவுநன்மையே

(இ-ள்) மூன்றுக்கு மிதுனம், அதனால் தனமுண்டாம் நாலுக்குகடகம், அதனால் செயமுண்டாம் ஐந்துக்கு சிங்கம், அதனால் வசிகரமுண்டாம் ஆறுக்குகன்னி, அதனால் ஞானம் பொருந்தும் ஏழுக்குத்- துலாம் அதனால் போகபாக்கியமுண்டாம் எட்டுக்குவிருச்சிகம் அதனால் சகலமும் நன்மையாய் நடக்கும் ஒன்பதிற்குத் தனுசு, அதனால் சுபகாரமுண்டாம்—எ-று. (ஙய)

நன்மையேமகரமுநாளுநல்குமே
தன்மையேகும்பமுந்தினமுங்கூட்டுமே
வன்மையிலாதமீன்வளமையியுமென்
தன்மைசேர்முனிவர்கள்சாற்றினாரரோ

(இ-ள்) பத்திற்கு மகரம், அதனல் நாளுக்குநாள் நன்மையான பல னுண்டாம், பதினென்றிற்குக் கும்பம் அதனல் எந்நாளுந் துன்பமு ண்டாம்-பனிரண்டிற்கு, மீனம் அதனல் சுகமுண்டாமென்று செயமு னிவர்சொன்னர் என்றவாறு. (௯௧)

வயதுபொருத்தம்.

ஓதுமாயத்தை மூவொன்பதிலேற்றியே
நீதியாய்த்தசந்தனிற் கழிக்கநின்றது
சோதிசோமனையினுக் காயுள்சேர்ந்ததே
வேதையாநாலுபத் தைந்துமென்பரே

(இ-ள்) முன்சொல்லிய ஆயத்தை இருபத்தேழிற் பெருக்கி நூறிற்க ழிக்க அதற்குள்ளாக நின்ற சேடம் மனைக்கு ஆயுள், ஒன்றுமுதல் நாற் பத்தைந்துக்குள்ளாக வந்தவயது எந்நாளும் வேதையுண்டா மென்ற வாறு. (௯௨)

என்பதிலுயர்ந்தது மேய்ந்தவுத்தமம்
இன்பதிலதிற்கழிவியலுந் துன்பமென்
றன்புளாநாடியவையன் முன்னமே
தென்புறவுணர்த்தனன் றெளியுமுள்ளமே

(இ-ள்) நாற்பத்தைந்துக்கு மேற்பட்டவயது எந்நாளும் இயன்ற உத்தமபலனும் அதற்குட்பட்ட வயது துன்பமாம்-எ-று. (௯௩)

விஷ்டிதோஷக்கவி.

மன்னுமுதம்சதுர்த்தியினி லேந்தாஞ்சாமம்
மருவியவட்டமியிரண்டு பன்னென்றேழாம்
மூன்னிலுவாநாற்சாமம் பிற்பக்கத்தின்
மூன்றிலிருன்மூறேழி மூன்றுஞ்சாமம்
பன்னியபிற்பத்தினிலே யெட்டாஞ்சாமம்
பதினென்கின்முதற்சாமம் பகர்ந்தவிஷ்டி
இன்னதனையச்சாம மென்றுமற்றை
யிரவிருந்தற்றிசைக நீதென்றுமாமே.

(இ-ள்) பூர்வபட்ச சதுர்த்தசியில், ௫-ம்-சாமம் மேற்கிலேயும் அஷ்டமியில், ௨-ம்-சாமம் தென்கிழக்கிலேயும் ஏகாதசியில், ௭-ம்-சாமம் வடக்கிலேயும், பூரணையில், ௬-ம்-சாமம் தென்மேற்கிலேயும் அமரபட்சத் திரிதிகையில், ௩-ம்-சாமம் வடமேற்கிலேயும் சத்தமியில், ௪-ம்-சாமம் தெற்கிலேயும், தசமியில், ௮-ம்-சாமம் வடகிழக்கிலேயும், சதுர்த்தசியில், முதற்சாமம் கிழக்கிலேயும், விஷ்டி புலன்னுசவால் இச்சாமங்களில், சுபகாரியங்களும் இத்திசையில் யாத்திரையுஞ் செய்யலாகாது. (௫௪)

நாமநட்சத்திர எழுத்துகள்.

சு	சே	சோ	லா	அச்சுவினி
லி	லு	லே	லோ	பரணி
ஆ	ஈ	உள	ஏ	கார்த்திகை
ஓ	வா	வி	வு	ரோகணி
வே	வோ	கா	கி	மிரகசிரம்
கு	க்க	ஙு	ச	திருவாதிரை
கெ	கோ	ஹ	ஹி	புனர்பூசம்
ஹு	ஹே	ஹோ	டா	பூசம்
டி	டு	டே	டோ	ஆயிலியம
மா	மீ	மூ	மே	மகம்
மோ	டா	டி	டு	பூரம்
டே	டோ	பா	பி	உத்திரம்
பூ	ஷ	ணா	ட்ட	அஸ்தம்
பே	போ	ரா	ரி	சித்திரை
ரு	ரே	ரோ	த	சோதி
தி	து	தே	தோ	விசாகம்
நா	நீ	நு	நே	அனுஷம்
நோ	யா	இ	யூ	கேட்டை
ஏ	யோ	ப்பா	ப்பி	மூலம்
பூ	தா	ப	ட	பூராடம்
பே	போ	ஜ	ஜீ	உத்திராடம்
ஜூ	ஜே	ஜோ	க	திருவோணம்
க	கி	கு	கே	அவிட்டம்
கோ	சா	சி	சு	சதயம்
ஸே	ஸோ	தா	தி	பூரட்டாதி
து	ஸ	த்தா	ததி	உத்திரட்டாதி
தே	தோ	ச்சா	ச்சி	ரேவதி

மனைகோல அகலமெடுக்க.

தை-மாசி-மாதங்களில் கிழக்கு வாடையிலும், சித்திரை-வைகாசி மாதங்களில், தெற்குவாடையிலும், ஆடி-ஆவணிமாதங்களில் மேற்கு வாடையிலும், ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் வடக்குவாடையிலும் அகமெடுக்க உத்தமம், மற்றமாதங்கள் வீடுகட்ட ஆகாவாம் ரிஷபம் மிதுனம்-கர்க்கடகத்துக்கு கிழக்குவாசலும், வடக்குவாசலும் சிங்கம்-கன்னி, துலாத்துக்கு கிழக்குவாசலும், தெற்குவாசலும், விரிச்சிகம்-தனுசு-மகரத்திற்கு மேற்குவாசலும் தெற்குவாசலும், கும்பம்-மேஷத்துக்கு வடக்குவாசலும், மேற்குவாசலும் பொருந்தும் ரோகணி-ரேவதி - பூசம் - மிருகசிரம் அனுஷம் அஸ்தம் உத்திரங்கள் மூன்றும் உத்தமம்-புனர்பூசம்-பூசம்-மூலம்-அவிட்டம் சேதி-சதயம் - மத்திமம்-மற்றவை ஆகாவாம் பாபர் வாரங்களும்-உவா-இருத்தை - அஷ்டமியும் சரராசிகளும் ஆகாமுக்கியம்-யஉ-ம்- இடம் சுத்தம் வேண்டும் சிங்கம் விரிச்சிகத்தில், குருவும்-கும்பத்தில், சுக்கிரனும் - சந்திரனும் ரிஷபத்தில், புதனும்-சுக்கிரனும் இருக்குங் காலமாகில் விசேஷ உத்தம் வீட்டுத்தலைவனுடைய ராசிக்கும் வலப்பக்கராசிகள் உத்தமம் இடப்பக்க ராசிகளாவாம்.

கிணறுவெட்ட கரைகட்ட.

ஐப்பசிமாதம் நடுப்பத்திலே உத்திரமூன்றும் - கேட்டை-ரேவதி-சித்திரை-ரோகணி-திருவோணம்-அஸ்தம்-மிருகசிரம் - பூராடம்-மகம்-பஞ்சமி சத்தமி-திரிதியை-ஏகாதசி-திரயோதசி-பிரதமை - கும்பம்-மீனம்-மகரம்-ரிஷபம்-கர்க்கடகம் - சுபர்வாரங்களும்-உத்தம் - சித்திரை-நடுப்பத்தில் முன்சொன்னபடியே கூடிய சுபதினத்தில் கரைகட்ட உத்தமம்.

அருக்கனிலே.

சனிக்கிழமை ராத்திரி - கூய - நாழிகையும், ஞாயிற்றிக்கிழமை-பகல்-கூய நாழிகையும், தெற்கிலும்-ஞாயிற்றுக்கிழமைராத்திரி-கூய-ம் திங்கட்கிழமை- கூய-ம்- தென்மேற்கிலும், செவ்வாய்க்கிழமை - பகல்-கூய-இராத்திரியில்-ய-ம்-மேற்கிலும், மற்ற-உய-ம்- புதன்கிழமை பகல்-ம்-வா... ...கிலும், புதன்கிழமை-இராத்திரி-கூய-ம்-வியாழக்கிழமை

பகல்-௩ய-ம், இராத்திரியில்-ய-ம், வடக்கிலும், நம்ம-உய-ம்-வெள்ளிக்கிழமை-௬ய-ம், வடகிழக்கிலும், சனிக்கிழமைபகல்-௩ய-ட்-கிழக்கிலும், அருக்கனிருக்கும் அக்கினி மூலைபாழாம்.

திசையோனிநிலை.

கருடன்	கிழக்கு	பூனை	தென்கிழக்கு
சிங்கம்	தெற்கு	நாய்	தென்மேற்கு
பாம்பு	மேற்கு	எலி	வடமேற்கு
யானை	வடக்கு	முசல்	வடகிழக்கு

அருக்கனில் கருடனைவைத்து முறையே பார்க்கும்போது எதிர்க்கெதிர் பகை யோனி நிற்கும், அவைகளுள் கருடன் திசையிலிருந்து கருடன் திசைக்குப் போகலாகாது ஏனெனில், கருடன் இரையெடுக்கப்போகும், பாம்பு இரையாகவரும், ஆதலாலென்க ஒருவன் யாதிரைக்கு பட்சிமுதலிய சகுனங்கள் பார்க்கும்போது இரையாகும் யோனித்திசையி லிருந்து இரையெடுக்கும் யோனித்திசைக்கு அவைபோகலாகா.

கவி.

அருக்கனிலையிற் கருடனனதொருபூனை
நெருக்கியநற்சிங்கமொடுநின்றிலகுநேர்நாய்
தருக்கமுடனுரகமெலியானைமுசலெட்டும்
இருக்குமுதலிந்திர னேராம்பகையெதிர்த்தே

இராசிவிசேஷம்.

விவாகத்துக்கு-மேஷம்
யாத்திரைக்கு-மிதுனம்
குருவைக்கரண-சிங்கம்
வீடுகட்ட-துலாம்
கிணறுவெட்ட-தனுசுகப்பல்
வயிர்கழிக்க-கும்பம்

திதிகொடு[illegible]ரிஷபம்
மரம்வைக்க-கர்க்கடகம்
புணர்ச்சிக்கு-கன்னி
உழுஉக்கு-விரிச்சிகம்
யாத்திரைக்கு-மகரம்
வித்தியாரம்பத்துக்கு-மீனம்-ஆகா[illegible]

மடசுத்தம்.

குடிபுக-௰௨-ம், முடிசூட்ட-௰௧-ம்-அன்னப்பிராசனத்துக்கு ௰-ம்-மயிர்கழிக்க-௯-ம்-உபநயனத்துக்கு-௮-ம்-விவாகத்துக்கு-௭-ம், கோடியுடுக்க-௬-ம்-யாத்திரைக்கு-௫-ம்-வித்தியாரம்பத்துக்கு-௪-ம், பொன்பூண-௨-ம், நிஷேகத்துக்கு-லக்கினம்-சுத்தமாக இருக்கவேண்டும்.

வாரவிசேஷம்,

ஞாயிறு-உத்தியோகஞ்செய்ய-திங்கள்-விதைவிதைக்க-செவ்வாய் போர்செய்ய-புதன்-வித்தியாரம்பஞ்செய்ய-வியாழம்விவாகஞ்செய்ய-வெள்ளி-மயிர்கழிக்க சனி-தவஞ்செய்ய-உத்தமம்.

மனைநூல்.

மனையை-தச்சுமுழக்காலளந்து-குழியாக்கி-அந்தக்குழியை-௮-ல்-பெருக்கி-௰௨-ல்-கழித்தமிச்சம்-ஆதாயம்-௯-ல்-பெருக்கி ௰-ல்-கழித்தமிச்சம்-செலவு-௬-ல்-பெருக்கி-௪௱-ல்-கழித்தமிச்சம் வயது-௮-ல்-பெருக்கி-௨௭-ல்-கழித்தமிச்சம்-நட்சத்திரம்-௩-ல்-பெருக்கி-௮-ல்-கழித்தமிச்சம்-யோனி-௯-ல், பெருக்கி-௭-ல் கழித்தமிச்சம்-வாரம்-௯-ல்-பெருக்கி-௪-ல்-கழித்தமிச்சம் ஜாதி-௪-ல்-பெருக்கி-௯-ல்-கழித்தமிச்சம்-அம்சம்-௯-ல்-பெருக்கி ௩௰-ல்-கழித்தமிச்சம்-திதி-இதில்-௰௫-க்கு-உட்பட்டால்-வளர்பிறையாகவும்-௰௫-க்கு-மேல் தேய்பிறையாகவும் கொள்க-௪-ல்-பெருக்கி-௰௨-ல்-கழித்தமிச்சம், இராசி-௮-ல்-பெருக்கி-௫-ல்-கழித்தமிச்சம், சூத்திரமாகக் கொள்ளவும், இவற்றுள்-யோனி-௧-க்கு-கருடன் ௨-க்கு-பூனை-௩-க்கு-சிங்கம்-௪-க்கு-நாய்-௫-க்கு, பாம்பு-௬-க்கு எலி-௭-க்கு-ஆனை-௮-க்கு-முசல்-எனக்கொள்க, இவற்றுள்-பூனை-எலி-முசல்-ஆகா-அம்சம்-௧-க்கு-சோரம்-௨-க்கு-புத்தி-௩-க்கு-சத்தி-௪-க்கு-தானியம்-௫-க்கு-ராசியும்-௬-க்கு-கிலீபம்-௭-க்கு-வருத்தம்-௮-க்கு-ரோகம்-௯-க்கு-சுபம்-௧-௬-௭-௮-ஆகா-சூத்திரம்-௧-க்கு பாலன்-௨-க்கு-குமரன்-௩-க்கு-ராஜன்-௪-க்கு-கிழவன்-௫-க்கு, மரணம்-இவற்றுள்-௪-௫-ஆகா-வீட்டின்-அகலத்தை-௯-பங்காக்கி வலத்தில்-௩-பங்கும்-இடத்தில்-௫-பங்குந்தள்ளி-நின்றதுஞ்சூத்திரப்படி வைக்கவும் வலத்தில்-௨-பங்கும் இடத்தில்-௩-பங்கு

ந்தள்ளி நின்றபங்கு - ௬ - உள்முற்றமாக்கவும் நல்லது பிராமணருக்குத் தெற்கு - வடக்கு - நீளமாகிய சந்திரபத்தியாகவும் மற்றவர்களுக்கு கிழக்கு - மேற்கு - நீளமாகிய சூரிய பத்தியாகவும் முற்ற மிருக்கவேண்டும்.

க வி.

இட்டவெட்டுடன் பன்னிரண்டாக்கமாம்
  ஏற்றுமொன்பதோ டொரந்தழிவதாம்
மூட்டில்மூன்றுட னெட்டுமேயோஷியாம்
  மொழிந்தவெட்டுடன் மூவொன்பானுளதாம்
விரட்டிரண்டுட னேழுங்கிழுமையாம்
  விடாதவொன்பதும் வேதமுஞ்சாதியாம்
சிஷ்டிநாலு மணியுமாமக்கிசம்
  சிறந்தவொன்பது முப்பதும்பக்கமே.

நாலிற்பெருக்கி நானூறுக்கிய சிலமாமாயுளெனத்தேர்

தச்சு முழம் ஒன்றுக்கு கைமுழம் இரண்டு இது வீட்டெசமானுடைய கையாற்கொள்க.

மரப்பொருத்தம்.

மரங்களுக்குள்ளே பலாசு - புன்னை - நாவல் - மகிழ் - பலா - மா - இலுப்பை - சண்பகம் - எருக்கு - வஞ்சி - அரசு - ஆல் - அத்தி - மாதுளை - பிராய்னனும் - ௧௬ - ம், பாலுள்ள மரமாம் - மற்றவை வயிரமுள்ள மரமாம், புருடன் வயிரமரமும், பெண்பால்மரமுமானால் புத்திரனுண்டு பெண்வயிரமரமும் ஆண்பால் மரமுமானால் மலடு இருவரும் வயிரமரமானால் புத்திரசேதம் இருவரும் பால்மரமானால் அதிநலம்.

மனைகோலுவதற்கு நிலத்தளவு.

ஆறடியகலநீளமனைத்திட்டவீடாகிற்
பாரினிற்பலித்தசெல்வம்பங்கயன்வீடதாகுந்
தாரணிதனிலுள்ளோர்க்குச்சதாசிவன்சொன்னநூலை
சீர்பெறவாய்ந்துபார்த்துச்செயமனைகோலுவாயே

(இ-ள்) ஆறடி - யகலநீளமாக மனைகோலில் இலட்சுமி கடாட்சத்தால் சகலபாக்கியமுமுண்டாம் — எ - று.

(௪)

ஏழடியகலநீளமெண்ணியேவமைப்பாராகில்
தாழ்வுடன்செல்வம்போகுந் தரித்திரமிகவுண்டாகு
சூழ்வினைதானுமுண்டா முறைமுறைபொல்லாப்பாகிப்
பாழதாய்ப்போகுமென்றுபரமனுமுரைசெய்தாரே

(இ-ள்) ஏழடி- யகலநீளமாகக்கோலில் தரித்திரமும் பொல்லாப்பும் உண்டாகி மனையும் பாழடைந்துபோம். (௨)

எட்டடியகலநீளமெண்ணியேவைப்பாராகில்
துட்டநிக்கிரகமுண்டாந்தொலைவிலாச்செல்வமெய்து
மட்டிலாமனுவோடொத்துமகிழ்ச்சியாய்வாழவல்லர்
தட்டுகளில்லையென்றுதாண்டவரருள்செய்தாரே

(இ-ள்) எட்டடி- அகலநீளமாகில் அம்மனைக்குரியவர் துட்டநிக்கிரகமும், அழியாச்செல்வமும், தீர்க்காயுசும், பெற்றுவாழ்வார் என்றவாறு.

ஒன்பதாமகலநீளமோங்கிடி லுயிர்கள்சேதம்
அன்புடன்தனில்வாழ்ந்தாலருங்குடிநசித்துப்போகும்
சம்புவேயாய்ந்துசொன்னார்சலிப்புகள்மெத்தவுண்டாம்
வம்பதுசெய்யவேண்டாம் மறைமயெனும்வேதம்பாரீர்

(இ-ள்) ஒன்பதடி அகலநீளமாகில் உயிர்ச்சேதமும் குடும்ப நசித்தலும் உண்டாம்—எ-று. (௪)

பத்தடியகலநீளம்பரிவுடன்வைத்தபேர்க்குக்
கொத்துடனுடுமாடுங்குறைவிலாச்செல்வமுண்டாம்
மெத்தவேநன்மையெய்தும் வேளாண்மைமிகுதியாகும்
கர்த்தனுரிவைகடம்மைக்கருதியேசொன்னார்தானே

(இ-ள்) பத்தடி, அகலநீளமாகில் ஆடுமாடுகளுள் விருத்தியும் அழியாச் செல்வமும் வேளாண்மை செழிப்பும் உண்டாம்-எ-று, (௫)

பத்துடனென்றதானற் பரிவுடன்சொல்லக்கேளும்
பெற்றுகில்நகையுமுண்டாம் போசனமிகுதியாகுஞ்

சத்துருவிலகிப்போவார்சங்கரன்கிருபையுண்டா
மெத்தவேபாக்கியங்கள்மேன்மேலும்பெருகிவாழ்வார்

(இ-ள்) பதினோரடி அகலநீளமாகில் நல்ல வஸ்திரமும் பொன்னுபர ணங்களும் தனவிருத்தியும் பரமேஸ்வரன்கிருபையும் சத்துரு நன்மை கள் உண்டாம்—எ-று. (௬)

ஈராறுஅடியதாகிலின்பமுஞ்சுகமுமில்லை
பேராறும்வியாதியாலேபெண்டுபிள்ளைகளுமைவார்
வாராதஆபத்தெல்லாம்வந்து மேபொல்லாப்புண்டாம்
காராதகலக்கமென்றுகைலாயபதியுஞ்சொன்னார்

(இ-ள்) பன்னிரண்டடி அகலநீளமாகில் சகல இன்பங்களையுமிழந்து துன்பமுற்று வியாதியாற் பெண்டுபிள்ளைகளோடு மெலிந்துஇடையூறு ம் பொல்லாப்பு முண்டாய் வருந்துவர்—எ-று. (௭)

ஏழுடனாறதாகிலெண்ணரியகருமந்தீதாம்
தாழ்வுடன்செல்வம்போகுந்தரித்திரமிகவுண்டாகும்
வாழ்வுடன்மக்கள்நோயரமகிழ்ச்சியெந்நாளுமில்லை
தாழ்வுடன்பொருளும்போகுந்தாண்டவமூர்த்திசொன்னார்

(இ-ள்) பதின்மூன்றடி யகலநீளமாகில் நினைத்தகாரிய முடியாமல்தா ழ்வுபெற்று செல்வத்தையிழந்து தரித்திரமுண்டாய் பெண்டுபிள்ளைக ள்வியாதியால் மெலியத் துன்பப்படுவர்—எ-று. (௮)

எட்டுடனாறுமாகயியல்மனைகோலுவானேல்
தட்டுமுட்டெல்லாந்தோற்றுத்தரித்திரமிகுதியாகும்
பட்டுடன்பணிகள்போகும்மைபந்தொடிவேசியாவள்
தட்டுதான்செய்யுமென்றுதாண்டவமூர்த்திசொன்னார்

(இ-ள்) பதினான்கடி யகலநீளமாகில் வஸ்திராபரணங்களையும் திரவி யங்களையு மிழந்து தரித்திரத்தை யடைவதுமன்றி மனையாளும் பரபு ருஷ விணையாவள்—எ-று. (௯)

மூவைந்துஅடியதாகமுயற்சியாய்வைப்பாராகில்
தாபந்தச்செல்வம்போகுந்தரித்திரமிக்வுமுண்டாம்
பாவமும்வியாதியாலேபாரினிற்கிலேசமாகு
மாவதுவேண்டாமென்றுமறையவர்மொழிந்திட்டாரே

(இ-ள்) பதினைந்தடி அகலநீளமாகில் செல்வசிரணமும் தரித்திரவிரு த்தியும் பழிபாவமும் வியாதியால்மெலிதலும் மனக்கிலேசமும்உண்டா ம்-என்றவாறு. (௰)

பத்துடனைதாகிற்பாக்கியமெத்தவுண்டாம்
பொத்துடனகையுமுண்டு பூஷணமிகுதியாகும்
சத்துருவிலகிப்போவார்சங்கைகளொன்றுமில்லை
மெத்தவேயடிமையோடுவேளாண்மைமிகுதியாமே

(இ-ள்) பதினைமடி யகலநீளமாகில் அழிபாச்செல்வமும் இரத்தினாப ரணங்களும் சத்துருக்களால் நன்மையும் அடிமைவிருத்தியும் வேளா ண்மை பலிதமும் உண்டாம்-எ-று. (௰௧)

ஈனாந்தோடேழுமாறு லெதிரியும்வணங்கிநிற்பன்
தாருடன்கொன்றைசூடுஞ் சங்கரருதவியுண்டாம்
பாரினில்மன்னராவர் பாக்கியம்வந்தேயெய்து
மார்கொண்டுதிரியவேண்டா மானிடரறிந்திடீரே

(இ-ள்) பதினேழடி யகலநீளமாகில் சத்துருலயமும் சங்கரர் கிரு பையும் இராஜபாக்கியமும் உண்டாம்-எ-று. (௰௨)

எட்டுடன்பத்ததாகிலட்சுமியிருப்பதில்லை
பட்டுடன்பணிகளெல்லாம் பாரினில்விலையதாகும்
கட்டுவன்காலன்வந்துகாரிகைபிணியதாவள்
தட்டுதான்செய்யுமென்றுதாலடவர்மொழிந்தார்பாரீர்

(இ-ள்) பதினெட்டடி அகலநீளமாகில் இலட்சுமி கடாட்சம் நீங்கித ரித்திரமேலிட்டு சீவனநிமித்தம் ஆடையாபரணங்களை விற்று பிராண ஹானியும்-மனையாள வியாதியால் மெலிந்தலுமுண்டாம் என்றவாறு, ()

ஈரொன்பதொன்றுமாகி லேந்திழையடியாள்சாவள்
பாரினில்செட்டுசெய்யப்பலியாதுதீதுமெத்த
மார்கொண்டுதிரியவேண்டாமனைவியும்வேசியாவள்
சீர்கொண்டசிவனார்பார்த்துச்செப்பினாரிந்தநூலே

௰௯

(இ-ள்) பத்தொன்பதடி அகலநீளமாகில் அடியாள் மரணமும் செய்தொழில் நசித்தலும் திராப்பொல்லாப்பு முண்டாவதன்றி மனைவியும் பரபுருஷர்தீனமாவள்-எ-று. (௰௪)

இருபதுஅடியதானா லேற்றமாமனையுநன்றாம்
பெறுவதுபிள்ளையாகும்பிரபலமின்னஞ்சேரும்
வருவதுமசுவயோகம்வாணிபம்பலிக்கும்பாரு
திருவுடன்மகிழ்ச்சியெய்துந்திருச்சடைநாதர்சொன்னார்

(இ-ள்) இருபதடி அகலநீளமாகில் மனைசெழிப்பும், புத்திரவிர்த்தியும், பிரபல்லியமும், அசுவயேற்றமும், வர்த்தகப்பலிதமு முண்டாமென்றவாறு. (௰௫)

நாலைந்துவொன்றுமாகில் நான்முகன்கடாட்சத்தாலே
பாலுடன்பசுக்கள்மெத்த பாக்கியம்வந்தேயெய்தும்
சாலவேவாழ்வதற்குச்சஞ்சலமொன்றுமில்லை
மாலுடனீசர்தானு மகிழ்ச்சியாவுரைசெய்தாரே

(இ-ள்) இருபத்தோரடி யகலநீளமாகில் பிரமன் கடாட்சத்தால் பாற்பசுக்களும், அழியாச்செல்வமும், செழித்தவாழ்வு - முண்டாம் என்றவாறு. (௰௬)

மூவேழுமொன்றுமானால் மூத்தவள்வாசமாகும்
சாவதுமெத்தவுண்டாஞ்சலிப்புவந்தெய்துங்கண்டாய்
ஆவதையறிந்துசொன்னாரன்சதாசிவனார்தாமும்
பூவதுபூர்த்திடாதுபுண்ணியமெய்திடாதே

(இ-ள்) இருபத்திரண்டடி அகலநீளமாகில்அம்மனையில் மூதேவிவாசஞ்செய்வதன்றி பெண்டு பிள்ளை மரணமும், தீராக்கிலேசமும்பழியாவமும் உண்டாம்—எ-று. (௰௭)

இருபதுமூன்றேயாகி லெய்திடுங்கொடியநோய்கள்
வருவதுகலங்கிநிற்கும் வாழ்வுமேயற்பமாகும்
திருமகள்கடாட்சமேகுஞ் செல்வமுநசித்துப்போகும்
மருவுள்ளசேதமுன்டா மாரியும்பெய்திடாதே

(இ-ள்) இருபத்துமூன்றடி அகலநீளமாகில் தீராநோயும் தரித்திரமும், மூதேவி கடாட்சமும், பொருட்சேதமும் வேளாண்மை யழிவுமுண்டாம்-எ-று. (௰அ)

அறுநான்காமடியதாகி லற்பமாய்வயதுகுன்றும்
ஒருநான்குமிருபத்தொன்றி லுமையவள்கடாக்ஷம்போகும்
இருநான்கோடெட்டிபத்தி லெமனுலகடைவர்பாரு
தருமநோன்மணியாள்பங்கன் சதாசிவன்சொன்னதாமே

(இ-ள்) இருபத்துநான்கடி அகலநீளமாகில் ஆயுசு சிரணமாம் இருபத்தைந்தடி யகலநீளமாகில் தரித்திரமுண்டாம், இருபத்தாறடியகலநீளமாகில் பிராணபயமுண்டாம்-எ-று. (௰௯)

ஏழுடனிருபதாகி லெய்திடுமிகுத்தயோகம்
தாழ்விலாச்செல்வமுண்டு சங்கரருதவிசெய்வார்
பாழ்போனபயிர்களெல்லாம் பலிதமாய்விளையும்பாரு
ஊழ்வினையொன்றுமில்லை யுமைபரன்சொன்னார்பாரீர்

(இ-ள்) இருபத்தேழடி அகலநீளமாகில்நிறைந்த செல்வமும், சங்கரருதவியும் வேளாண்மை செழிப்பும், திமைவிலகலு முண்டாம்-எ-று. ()

இருபதுமெட்டுமான வின்பமுஞ்சுகமுமில்லை
பெறுவதோர்பிள்ளையெல்லாம் பிணஞ்சுடுகாடதேகும்
தருவதுபொருளுஞ்சேத தரித்திரமிகவுண்டாகும்
இருப்பிடம்விட்டுநீங்குமீசனார் சொன்னதாமே

(இ-ள்) இருபத்தெட்டடி அகலநீளமாகில் அசௌக்கியமும், புத்திமரணமும் தனச்சேதமும், தரித்திரமுமுண்டாம், ஆதலால் அம்மனைவிட்டு நீங்குதலே யுத்தமமாம்-எ-று. (உக)

ஒன்பதுமிருபதாகி லோங்கியசெல்வமெய்தும்
ஒன்பதுமிருபத்தொன்றிலுலகெலாம்புகச்சியுண்டாம்
சம்புவேபார்த்துச்சொன்னார் சலிப்புகளெல்லாமேகும்
வம்பதுசெய்யவேண்டாம் மறையவர்வேதம்பாரீர்

(இ-ள்) இருபத்தொன்பதடி அகலநீளமாகில் அழியாச்செல்வமுண்டாம் மூப்பதடி யகலநீளமாகில் புகழ்ச்சியும் கிலேசநிவர்த்தியுமுண்டாமென்றவாறு. (உஉ)

முப்பதுமொன்றுமானால் முக்கண்ணரருளுமுண்டாம்
முப்பதுமிரண்டுமாகில் முகுந்தனார்கடாட்சமுண்டாம்
செப்பியசொல்மேலாகத் தேசத்திற்செழித்துவாழ்வர்
தப்பில்லைசொன்னேனந்தச் சங்கரிமணாளர்சொன்னார்

(இ-ள்) முப்பத்தோரடி அகலநீளமாகில் பரமேஸ்பரர் கிருபையால் சகலபாக்கியமு முண்டாம் முப்பத்திரண்டடி யகலநீளமாகில்மகாவிஷ்ணுவின் கடாட்சத்தால் சகலபாக்கியமும், சொல்மேன்மையும் செழித்தவாழ்வுமுண்டாம்-எ-று. (உ௩)

ஐயாறுமூன்றுமானா லவனியிற்செல்வமுண்டாம்
ஐயாறுநான்குமாகி லருமனைநசித்துப்போகும்
ஐயாறுமைந்துமானா லட்டலட்சுமியுஞ்சேர்வள்
ஐயாறுமாறுமாகி லரசரோடரசாள்வாரே

(இ-ள்) முப்பத்துமூன்றடி யகலநீளமாகில் செல்வவிர்த்தியாம் முப்பத்துநான்கடி யகலநீளமாகில் அம்மனைநசித்துப்போகும் முப்பத்தைந்தடி யகலநீளமாகில் அஷ்டலட்சுமி கடாட்ச முண்டாம் முப்பத்தாறடியகலநீளமாகில், இராசபாக்கிய முண்டாம்—எ-று, (உ௪)

ஏழைந்துமிரண்டுமாகிலின்பமும்பொருளுமுண்டாம்
ஏழைந்துமூன்றுமாகிலெப்போதும்பசாசுசேரும்
ஏழைந்துநாலுமாகிலின்பமுஞ்சுகமுமுண்டாம்
ஏழைந்தோடைந்துமாகிலென்றைக்குஞ்சலிப்புண்டாமே

(இ-ள்) முப்பத்தேழடி யகலநீளமாகில், சந்தோஷமும் செல்வமு முண்டாம் முப்பத்தெட்டடி யகலநீளமாகில் அம்மனையில், பூதப்பிரேதப் பசாசுகள் வசிக்கும் முப்பத்தொன்பதடி யகலநீளமாகில் செல்வமும் திரேகசௌக்கியமும் உண்டாம் நாற்பதடியகல நீளமாகில் திராக்கிலேச முண்டாம்-எ-று. (௨௫)

என்னைந்துமொன்றேயாகி லெய்திடுங்குபேரசெல்வம்
இன்னவேயேபூருகி லட்சுமிகடாட்சமுண்டாம்
வின்னவேமூன்றோடெட்டாய் விதித்திடிற்றீங்குண்டாகும்
கன்னியேயாறெட்டேழ் நன்கெட்டுக்குருடராவார்

(இ-ள்) நாற்பத்தோரடி யகலநீளமாகில் குபேரசெல்வ முண்டாம் நாற்பத்திரண்டடி யகலநீளமாகில் இலட்சுமி கடாட்சத்தால் சகலபாக்கியமு முண்டாம் நாற்பத்துமூன்றடி யகலநீளமாகில் பொல்லாப்புண்டாம் நாற்பத்துநான்கடி யகல நீளமாகில் நீங்காவியாதியும் பொருட்சேதமு முண்டாம்-எ-று. (௨௬)

திசையறிந்து வாசற்கால் வைக்கும்விதி.

கிழக்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசானியமுதல் அக்கினி மூலைவரைக்கும் அளந்து அதை - ௮ - பாகஞ்செய்தால்.

முதற்பாகம்.	ஆனி.
௨-வது-பாகம்	சோரம்
௩-வது-பாகம்	தனப்பிராப்தி
௪-வது-பாகம்	இராஜசன்மானம்
௫-வது-பாகம்	புத்திரவிர்த்தி
௬-வது-பாகம்	சுகம்
௭-வது-பாகம்	துக்கம்
௮-வது-பாகம்	ரோகம்

மேற்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு நிருதிமூலை முதல் வாயுமூலைவரைக்கும் அளந்து-௮-பாகஞ்செய்தால்.

முதற்பாகம்	ஆனி
௨-வது-பாகம்	சத்துருவிர்த்தி
௩-வது பாகம்	சுகம்
௪-வது-பாகம்	தவம்
௫-வது-பாகம்	பாக்கியம்
௬-வது-பாகம்	சுகம்
௭-வது-பாகம்	பயம்
௮-வது-பாகம்	நாசம்

வடக்குபார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு வாயுமூலை முதல் ஈசானியமூலைவரைக்கும் அளந்து எட்டுபாகஞ்செய்தால்.

முதற்பாகம்	மனையாள்நாசம்
௨-வது-பாகம்	பலயீனம்
௩-வது-பாகம்	தனஆனி
௪-வது-பாகம்	தானியவிர்த்தி
௫-வது-பாகம்	தனம்
௬-வது பாகம்	சௌக்கியம்
௭-வது-பாகம்	துக்கம்
௮-வது-பாகம்	பாதகர்மம்

தெற்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு அக்கினிமூலைமுதல் நிருதிமூலைவரையில் எட்டு பாகஞ்செய்தால்.

முதற்பாகம்	தனஆனி
௨-வது-பாகம்	சத்துருவிர்த்தி
௩-வது-பாகம்	சுகம்
௪-வது-பாகம்	இலாபவரவு
௫-வது-பாகம்	பாக்கியம்
௬-வது-பாகம்	நன்மை
௭-வது-பாகம்	பயம்
௮-வது-பாகம்	நாசமாம்

இந்த பாகங்களின் றிபற்கை யறிந்து நல்ல பாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்கவேண்டியது.

நவக்கிரக பலன்களறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்.

கிழக்குப்பார்த்த வாசற்படிக்கு ஈசானியமுதல் அக்கினி மூலைவ ரைக்கும் அடியளந்து-௯-பாகஞ்செய்யவும்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலை முதல் நிருதிமூலை வரைக்கும்-௯-பாகஞ்செய்யவும்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதிமூலை முதல் வாயுமூலைவ ரைக்கும்-௯-பாகஞ்செய்யவும்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலை முதல் ஈசானியமூலை வரைக்கும்-௯-பாகஞ்செய்யவும்.

இந்நான்கு திக்குக்கும் முதற்பாகம் சூரியன்-௨-வது-பாகம் சந் திரன்-௩-வது பாகம் அங்காரகன்-௪-வது-பாகம் புதன்-௫-வது-பாகம் குரு-௬-வது-பாகம்-சுக்கிரன்-௭-வது-பாகம் சனி-௮-வது பாகம் ராகு ௯-வது- பாகம் கேது- இந்தநவக்கிரக பாகத்தி[illegible] பாகத்தில் பிரதானம் கோயிலுக்கு வாசற்கால் [illegible]

சுக்கிரனபாகத்தில் வீட்டிற்கு வாசற்கா[illegible]

புதன்பாகத்தில் மாட்டுத்தொழுவத்திற்கு [illegible]

மேலும்-புதன் குரு-சுக்கிரன் இவர்கள் பாகத்தில் கோயிலுக்கும் வீட்டிற்கும் மாட்டுதொழுவத்திற்கும் வாசற்காலவைக்கலாம்.

வாசற்காலுக்கு இடதுபாகத்தில் கதவுவைக்கப்படும்.

இப்பால் ஏழுசாணீளமும்-௩-சாணகலமுமுள்ளாவாசற்காலும்.

௯-சாணீளமும் -௫-சாணகலமுமுள்ள வாசற்காலும் உத்தமம்.

இரண்டுவித[illegible] வாசற்கால் செய்யலாகாது மூன்றுவிதம் [illegible]திறைல் கட்டில் செய்[illegible]காது.

கதவுக்கு ஒற்றைப்பட பலகைசேர்த்துச் செய்யவேண்டும் இரட் டைப்பலகை சேர்த்துச் செய்யலாகாது,

வீட்டில் நுழையும்போது தூலகுத்தாகாது.

வீட்டு வாசற்படிக்கு எதிரில் கட்டைச்சுவரிருந்தால் சத்துருபய

உ சிற்பசாஸ்திரம்.

தெருவாசற்படி யுயர்ந்து உள்வீட்டு வாசற்படி தாழ்ந்திருக்கக்கூ-
து அப்படியிருக்கில் வரும்பலன் நீங்கிவிடும்.

எந்தமாதங்களில் வாசற்கால் வைத்தாலும்

திசையறிந்து வைக்கவேண்டும்.

கடகம்-சிங்கம் - இந்த இரண்டுராசியில் சூரியனிற்க வீடு கட்டில்
[illegible]க்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

துலாம்-விரிச்சிகம்- இவ்விரண்டு ராசியில் சூரியனிருக்க வீடுக[illegible]
றல் தெற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

மகரம்-கும்பம்- இவ்விரண்டு ராசியில், சூரியனிருக்க வீடுகட்[illegible]
ல் மேற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கன்னி-மிதுனம்-தனுசு-மீனம்-இந்தராசிகளில், சூரியனிருக்[illegible]
[illegible] வைக்கலாகாது.

[illegible]-கடகம் - இந்தமூன்று ராசிக்காரருக்கும்,
[illegible]மம்.

[illegible] கன்னி - இந்தராசிக்காரருக்குத், தெற்குப்ப[illegible]
டு உத்தமம்.

துலாம்-மிதுனம்-கும்பம்-இந்தமூன்று ராசிக்காரருக்கு, மே[illegible]
பார்த்த வீடு உத்தமம்.

தனுசு-மேஷம்-சிங்கம் - இந்தமூன்று ராசிக்காரருக்கும், வடக்[illegible]
பார்த்த வீடு உத்தமம்.

துலாம்-இருந்த திக்கிலிருக்கின்ற ராசிக்கும், கர்த்தன் நாமராசி-
ம் மித்துருத்துவ மாகையால் நல்லது.

மனைநூலென்னும் [illegible]

சிற்பசாஸ்திரம்

முற்றுப்பெற்றது.